50வது ஆண்டை நோக்கி.......

# மல்லிகை

ஆசிரியர் : டொமினிக் ஜீவா



கலைஞர்களை அரவணைக்கும்
மனப் பக்குவம் கொண்டவர்!

ஜூன் 2010

விலை – 40/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண சேவை

இருமனம் கலந்தால் திருமணம்!
ஒன்றிணையக் கூடிய மனங்கள் தானா என்பதைத் தெரிந்து கொள்வது எப்படி?.... இனிய இதை வழி வேல் அமுதனின் சுயதெரிவு முறையே!



தெரிவு:

*வேல் அமுதன் திருமண ஆலோசனையகத்தில் அங்கத்த வராகி... விபரக் கோவை வழியாக விபரமறிந்து- மனம் விரும்பும் வாழ்க்கைத் துணையைத் தெரிவு செய்யலாம்!*

திங்கள், புதன், வெள்ளி மாலையிலோ, சனி, ஞாயிறு நண்பகலிலோ 'சுயதெரிவு முறை முன்னோடி', தனிமனித நிறுவுநர், மூத்த, புகழ் பூத்த, சர்வதேச, சகலருக்குமான திருமண ஆலோசகர்/ ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டி யூர், மாயெழு வேல் அமுதனுடன் தொடர்பு கொள்ளலாம்!

தொலைபேசி:

2360488/2360694/4873929

ஆலோசனையகம்:
8-3-3 மெற்றோ மாடிமனை (வெள்ளவத்தை காவல் நிலையத்திற்கு எதிராக, நிலப்பகம்.
33ஆம் ஒழுங்கை வழி) 5Sll ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு-06

சந்திப்பு:
முன்னேற்பாட்டு ஒழுங்குமுறை

**துரிதமான- சுலபமான மணமக்கள் தெரிவுக்குச் சுயதெரிவுமுறையே**
**மகோன்னத- ரம்மிய மணவாழ்வுக்குக் குரும்பசிட்டியூர் மாயெழு வேல் அமுதனே!**


பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.


# மல்லிகை

'ஆடுதல் பாடுதல் சித்திரம் கவி
ஆதியினைய கலைகளில் உள்ளம்
ஈடுபட்டென்றும் நடப்பவர் பிறர்
ஈன நிலை கண்டு துள்ளுவர்'

உலகப் பாராளுமன்ற வரலாற்றிலேயே, இலங்கை நாடாளுமன்றத்தில் மாத்திரம் தான் ஓர் இலக்கியச் சஞ்சிகை விதந்து பாராட்டப் பெற்ற பெறுமதி மிக்க சம்பவம் இடம் பெற்றுள்ளது. அங்கு பாராட்டப்பட்ட சஞ்சிகை மல்லிகை. இதனை நாடாளுமன்றப் பதிவேடான ஹன்ஸார்ட் (04. 7. 2001) பதிவு செய்ததுடன் எதிர் காலச் சந்ததியினருக்காக ஆவணப்படுத்தியுமுள்ளது. அத்துடன் உலக வரலாற்றில் முதன் முதலில் சலூனுக்குள் இருந்து வெளிவந்த இலக்கியச் சஞ்சிகையும் மல்லிகையே தான்!

## 50 - ஆவது ஆண்டை நோக்கி...

## ஜூன்

## 373

*'Mallikai' Progressive Monthly Magazine*

மல்லிகை அர்ப்பணிப்பு உணர்வுடன் வெளிவரும் தொடர் சிற்றேடு மாத்திரமல்ல- அது ஓர் ஆரோக்கியமான இலக்கிய இயக்கமுமாகும்.
மல்லிகையில் வெளியாகும் எழுத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பானவர்கள்!

201/4, Sri Kathiresan St,
Colombo - 13.
Tel : 2320721
mallikaiJeeva@yahoo.com


## *எழுத்தாளர்கள் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்ள, அடிக்கடி சந்தித்து உரையாட வேண்டும்!*

முன்னர் வட பிரதேசத்தில் 60-80-களில் யாழ் நகரில் பிரதான வீதியிலுள்ள **பிரமியர் கபே**யில் ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில், மாலை நேரங்களில் பல படைப்பாளிகள் சந்தித்து உரையாடுவது வழக்கம், இது பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வந்தது.

மாலை 5.30 இருந்து 8 மணிவரை இந்த இலக்கியச் சந்திப்பு நடைபெறுவது வழக்கம். இலக்கியத் துறை சம்பந்தமாகப் பலதும் பத்தும் கதைப்போம். பின்னர் தேநீர் அருந்துவதுடன் சபை கலைந்து போகும். தேநீருக்குக் கூட, தனிநபர் பணம் செலுத்தக் கூடாது. கூடியுள்ளவர்கள் பங்கு போட்டுக் காசு கொடுக்க வேண்டியது கட்டுப்பாடான நியதி.

விரல் விட்டு எண்ணத் தக்க தொகையினர் தான் கூடுவார்கள். சிலர் தொடர்ந்து பங்கு கொள்ளமாட்டார்கள். அவர்களுக்கு முன்னைய கூட்டங்களில் பேசிய விஷயங்கள் அடுத்த கூட்டத்தில் விவரித்துச் சொல்லப்படுவதுமுண்டு.

மிகச் சுமுகமாக இந்தத் தொடர் சந்திப்பு நிகழ்ந்து வந்தது. பலரும் சந்தித்துக் கலந்து கொள்ளும் இலக்கியக் கூட்டங்களில் கிடைத்த இலக்கிய அநுபவங்களை விட, இந்தக் கபேயில் நேரடியாகக் கதைத்துப் பெற்ற தகவல்கள், செய்திகள் மிகவும் பயனுள்ளவையாகவே அமைந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்த ஆங்கில இலக்கிய அறிவு நிரம்பப் பெறாதவர்கள் கூட, தம்மையும் தமது உலக இலக்கிய அறிவையும் செழுமைப் படுத்த இந்தத் தொடர் தனிநபர் சந்திப்புப் பெரிதும் வாய்ப்பாக அமைந்தது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் இலக்கிய நண்பர்கள் பலரும் இக்கலந்துரையாடலில் பங்கு கொண்டு, தமது அநுபவங்களையும், கொழும்பு இலக்கியத் தகவல்களையும் பரஸ்பரம் பரிமாறிக் கொள்வது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்தக் காலகட்டத்தில் உலகப் பிரபலம் பெற்ற எழுத்தாளர் அழகு சுப்பிரமணியம் தனது தாய் வீட்டிற்கு வந்திருந்தார். அவர் ஏ.ஜே கனகரட்னாவின் நண்பருமாகும்.

அவரும் அடிக்கடி இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டு, தனது கருத்துக்களையும் அநுபவங்களையும் பகிர்ந்து கொள்வதுண்டு.

சும்மா பொதுக் கூட்டங்களுக்கு வந்தோம்-போனோம் என்றிராமல் இப்படியாகச் சிறு சிறு குழுக்களாக அடிக்கடி சந்தித்துக் கலந்துரையாடுவது பயனுள்ளது. படைப்பாளிகள் தம்மைத் தாமே வளர்த்தெடுப்பதற்கு இந்தச சந்திப்புகள் பெரும் பயனைத் தரும் என நிச்சயமாக நம்பலாம்.

அந்தக் காலத்தில் பாரிஸ், லண்டன் மாநகர்களில் கூட, பல பிரபல எழுத்தாளர்கள் 'கபே'க்களில் ஒன்று கூடிக் கதைத்து விவாதித்து, தமது இலக்கிய அறிவைச் செழுமைப்படுத்தியுள்ளதாகச் செய்திகளில் படித்தறிந்திருக்கின்றோம்.

இந்தத் தொடர் சந்திப்பினாலும் கலந்துரையாடல்களினாலும் இலக்கியப் பயன் பெற்றவர்கள் பலர். அதில் நானும் ஒருவன்.

இந்த உறவுகளின் பலத்தினாலும் ஆலோசனைகளின் உந்துதலினாலும் ஊக்கப்படுத்தப்பட்டு வந்த நான், எனது முதற் சிறுகதைத் தொகுதியான '**தண்ணீரும் கண்ணீரும்**' தொகுதியை இந்தப் பகைப் புலத்தின் பின்னணியில் தான் தொகுத்துச் செம்மைப்படுத்தி, சரஸ்வதி ஆசிரியர் விஜயபாஸ்கரனுக்கு அனுப்பி வைத்தேன்.

அத் தொகுதிதான் 1960ம் ஆண்டு முதன் முதலில் சாஹித்திய மண்டலப் பரிசு பெற்ற அத்தொகுதியின் மகிழ்ச்சியைக் கொண்டாடும் நிமித்தமாக அடுத்து வந்த சனிக்கிழமை மாலை தேநீர் விருந்தொன்றையும் பிரிமியர் கபேயில் நடத்தி முடித்தேன்.

யுத்தக் கெடுபிடிகள் குறைந்துள்ள இந்தக் காலகட்டத்தில், கொழும்பு மாநகரில் கூட, தமிழ் எழுத்தாளர்கள் இப்படியாகத் திட்டமிட்டுச் சந்தித்து, விவாதித்து, உரையாடிப் பிரிவது மிக முக்கியமான தொன்று என நினைக்கத் தோன்றுகின்றது.

பொது இடமில்லாது போனாலும், உண்மையான இலக்கிய ஆர்வலர்களின் இல்லங்களில் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை இச் சந்திப்பை நிகழ்த்தலாம். அல்லது எமது சந்திப்பின் பெறுமதியைப் புரிந்து கொண்ட ஹோட்டல் அறைகளை இரண்டு மூன்று மணி நேரத்திற்குப் பயன்படுத்தலாம். ஆர்வமுள்ள வளரும் எழுத்தாளர்களையும் அரவணைத்துப் போகலாம்.

இதன் இலக்கிய அறுவடையை நாம் நேரடியாகவே கண்டு களிக்க இயலும்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# தலைநகரில் தமிழ்க் கலைஞர்களுக்குத் தேவை-பத்தடி நிலம்!



நாளுக்கு நாள் கலை கலாசார, புத்தக வெளியீட்டு நிகழ்ச்சிகள் தலைநகரில் சும்மா ஜாம்... ஜாம்... என நடந்தேறி வருகின்றன. மக்களும் கூடுகின்றனர். நினைத்துப் பார்க்கவே பிரமிப்பாக இருக்கிறது. எண்ணிப் பார்க்க மகிழ்ச்சியாகவும் இருக்கின்றது. வெற்றிகரமாக நடைபெறும் நிகழ்ச்சிகளை விட, திட்டமிட்டும் நடைபெற முடியாமல் தேங்கிப் போய்க் கிடக்கும் நிகழ்ச்சிகளோ அதிகத்திலும் அதிகம்.

தலைநகரில் சதா இயங்கிக் கொண்டிருக்கும் நாடக, கலை இலக்கியம் சம்பந்தப்பட்டவர்கள் ஒன்று கூடி, ஒருங்கு சேர்ந்து தமது நிகழ்ச்சிகளைச் சோர்வின்றி ஒருங்கிணைந்து நடத்த, வசதியானதொரு பொது மண்டபம் கொழும்பில் அவர்களுக்கென்று ஒன்று இல்லவே இல்லை.

சகோதரச் சிங்களக் கலைஞர்களுக்குத் தமக்குத் தமக்கென்றே பல மண்டபங்கள் இருக்கின்றன. இதற்காக நாம் மெத்தச் சந்தோசப்படுகின்றோம். அன்னாரது இடையறாத முயற்சிகளைப் பாராட்டவும் செய்கின்றோம்.- பொச்சரிப்புக் கூடப்படவில்லை. அது அவர்களின் ஒற்றுமைக்கான சாதனை!

அதே சமயம் இந்தத் தலைநகர மண்ணில் பல காலமாக வாழ்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் நமது கலைஞர்களுக்குக் கூடிப் பேச, புத்தகம் வெளியிட, ஒத்திகை நடத்த, வெளியூர் நண்பர்கள் வந்தால், அவர்களைத் தங்க வைத்து உபசரிக்க, ஆமானதொரு மண்டபம் நமது கலைஞர்களுக்கு இந்த நாட்டுத் தலைநகரில் இல்லவேயில்லை என்பதை மிக மிக மன ஆதங்கத்துடனும், ஆழ்ந்த கவலையுடனும் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

எங்களது தமிழ் அரசியல்வாதிகள் இலக்கியக் கூட்டங்களுக்கு விஜயம் செய்து நமக்கெல்லாம் உபதேசம் செய்வார்களே தவிர, நமது கலைஞர்கள் ஒன்று கூடி இயங்குவதற்கு ஆதார பலமாகத் திகழத்தக்க கலாசார மண்டபம் ஒன்றை எமக்குப் பெற்றுத் தருவதற்கு எந்தவிதமான முன் முயற்சிகளையும் இதுவரை எடுத்து வந்துள்ளதாகக் கூடத் தெரியவில்லை.

வெளியார், எல்லாம் வந்து நமக்கெல்லாம் உதவுவார்கள் எனக் கலைஞர்கள், எழுத்தாளர்கள் எல்லாம் வாழாவிருந்து விடக்கூடாது.

நாம் தான் நேரடியாகப் போராடிக் கலாசார அமைச்சிடமிருந்து பெற்றுக் கொள்ள முனைந்து பாடுபட்டு உழைக்க வேண்டும்.

கொழும்புக் கலைஞர்களின் எதிர்காலக் கோஷம் இப்படி அமைந்திருக்க வேண்டும் என பெரு விருப்புக் கொள்ளுகின்றோம்.

ஒரு பத்தடி நிலமாவது எமக்குச் சொந்தமாகத் தேவை.

பொது இடங்களில் வாய் கிழியக் கலை இலக்கியம் பற்றியெல்லாம் கதையடிக்கின்றோம். ஆனால், கொழும்பில் நாம் சந்தித்துக் கதைக்க, உரையாட பொது இடமொன்றில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டைப் படம்

# சிறு சிறு செயல்களின் மூலமாகவும் கூட, உயர்ந்த பண்புகளை வெளிப்படுத்துபவர்!

-டொமினிக் ஜீவா

மல்லிகையின் ஆரம்ப கால கட்டங்களில் மாதம் ஒரு தடவை கடைசி வாரத்தில் கொழும்பிற்குக் கண்டிப்பாக நான் வந்து போவது வழக்கம். மல்லிகைக் கட்டுக்களைச் சுமந்தபடி கொழும்பிற்கு ரயிலில் வந்து இறங்குவேன்.

இப்படி மாதா மாதம் கொழும்பு வந்து போவதில் தான் மல்லிகையின் பொருளாதாரச் சூட்சுமம் அடங்கியுள்ளது. விற்பனவுக் காசுகள், விளம்பரப் பணம், சந்தாதாரர்கள் நேரடியாகத் தந்துதவும் பணம் என ஒரு குறிப்பிட்ட தொகை கைவசம் வந்து சேரும்.

இதைக் கொண்டு தான் அடுத்த மாதச் **'சிலவு சிந்தாயங்களை'க்** கொண்டிழுக்க வேண்டும்.

அப்புறம் அடுத்த மாதக் கொழும்புப் பயணம் ஆயத்தமாகிவிடும்.

கொழும்பு வந்தால், அப்பொழுது நான் செக்கடித் தெருவில் உள்ள ஒரு நண்பரின் மாடியில் தான் தங்குவது வழக்கம். நானிருந்த தெருவுக்கு அடுத்த வீதிதான் செட்டித்தெரு. பென்னாம் பெரிய நகைக் கடைகள் மலிந்த ஏரியா. சென்னையில் மவுண்ட் ரோடு மாதிரி, கொழும்பில் செட்டித்தெரு. 'கொழும்பினது சகல பொருளாதாரப் பலம் பலவீனங்களைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கத்தக்க ஏரியா!' எனப் பலரும் பரலவாகச் சொல்லிக் கொள்வார்கள்.

காலையில் ஒரு தடவையும் பின்னேரம் இன்னொரு தடவையும் நான் அந்தத் தெருவில் அங்குமிங்குமாக நடைபோடத் தொடங்குவேன். அடுத்தடுத்து ஒரே நகைக் காடுகள் தான். பல விதமான, பலப் பல வகையான மனிதர்களையெல்லாம் பார்ப்பதில் அப்படியொரு மனக்குஷி எனக்கு.

- அங்குமிங்கும் விலத்தேலாத நெரிசல்!

ஏதாவது ஒரு நகைக் கடைக்குள் புகுந்து, மல்லிகைக்கு விளம்பரமொன்று கேட்டுப் பார்ப்போமா? என்ற உள் உணர்வு மனசில் நிழலாகும்! இந்தத் தங்கத் தகதகப்புப் பூந்தோட்டத்தில் யார் மல்லிகையின் பெயரைத் தெரிந்து வைத்திருக்கப் போகின்றனர்? என்ற எதார்த்த நினைவு வந்து எனது நோக்கத்தைத் திசை திருப்பி விடும்.



அதே தெருவில் உள்ள மெய்கண்டான் அதிபர் இரத்தின சபாபதி அவர்களை எட்டிப் பார்ப் பேன். கையிலுள்ள மல்லிகை ஒன்றை அவர் வசம் நீட்டுவேன். கலண்டர் கால மென்றால் மல்லிகைக்கும் ஒரு விளம்பரம் கிடைக்கும்.

திசை மாறிக் கொழும்பிற்கு இடம் மாறி விட்டேன். அதிர்ஷ்டவசமாக செட்டித் தெருவிற்குப் பக்கம் பக்கமாக உள்ள செக்கடித் தெருவில்- கதிரேசன் வீதியில்- மல்லிகைக்கான காரியாலயத்தையும் நிறுவிக் கொண்டேன்.

இந்தக் கொழும்பு மாநகரில் தான் நான் பல மகத்தான மனிதர்களையெல்லாம் சந்தித்துப் பழக்கப் படுத்திக் கொண்டவன்.

ஓட்டப்பிடாரம் குருசுவாமி அண்ணாச்சி, திரு. எம். ரெங்கநாதன், துரை விசுவநாதன், மற்றும் ஜனாப். எம். ஏ. கிஸார் அவர்களும் அடங்குவர். இவர்கள் அனைவரும் கொழும்பு மாநகரில் பெயர் சொல்லப் பட்ட வர்த்தகர்களாகும். இவர்களது உருவப் படங்கள் காலத்திற்குக் காலம் மல்லிகை அட்டையிலும் இடம் பெற்று வந்துள்ளன.

இந்தக் கால கட்டத்தில் தான் நண்பர் துரை விசுவநாதன் இவரது பெயரை முதன் முதலில் எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். உண்மையைச் சொல்லுகின்றேன். எனக்கு இந்தப் பிரபல வர்த்தகர்களைக் கண்டாலே, மனசுக்குள் ஒரு பயம். அவர்களுக்கோ ஆயிரத்தெட்டுப் பிரச்சினைகள். அதிலும் நகைக் கடை முதலாளிகளைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். அவர்கள் தங்கள் தங்களது சொந்த வியாபாரப் பிரச்சினைகளுக்கே வழி திசை தெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கும் வேளையில், நாம் புகுந்து குட்டை குழப்புவது எவ்வளவு மதியீனம் என நானே எனக்கு ஒரு கட்டுப்பாட்டை விதித்துக் கொண்டு, தூர விலகி இருந்தேன்.

அவர் துரை விசுவநாதன், இறப்பதற்கு இரண்டொரு மாதங்களுக்கு முன்னர் தான், ஒரு நாள் மாலை சந்திப்பில், "கண்டிப்பாகப் பயப்படாமல் **தேவி ஜுவலர்ஸ் சீனிவாசகம்** அவர்களை இந்தக் கிழமை போய் ஒருக்காப் பார்த்துப் பேசும்!" என அன்புக் கட்டளையிட்டார். தொடர்ந்து, "உங்களைப் பற்றியும் நானவரிடம் நிறையச் சொல்லி வைத்திருக்கின்றேன். உங்களுக்காவா?- மல்லிகைக்காகத் தானே போய்ப் பார்க்கச் சொல்லுகின்றேன்!" என்றார், அவர்.

அடுத்த நாளோ அல்லது அதற்கடுத்த நாளே நான் இவரது 131 தேவி ஜுவலர்ஸ் செட்டித் தெருவிலுள்ள வியாபார நிலையத்திற்குச் சென்று உள்நுழைந்தேன்.

உள்ளே நுழைய உண்மையில் மனக் கூச்சமாக இருந்தது. பயமாகவும் இருந்தது. அத்தனை பெரிய வியாபார ஸ்தலம். ஊழியர்களாலும், பொருள் வாங்க வந்தோர்களாலும் நிரம்பி வழிந்தது, அந்தத் Devi Jewellers.

மனசில் ஒரு வகைப் பதை பதைப்பு. இருந்தாலும், 'ஒரு பொதுப் பிரச்சினைக்காகத் தானே வந்திருக்கின்றோம்!' என்று மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டு, மெல்ல மெல்ல நடந்து இவர் வீற்றிருந்த, பிரகாசமான விளக்கு வெளிச்சம் எரிந்த மேல் பகுதிக்குள் நடந்து சென்றேன்.

என்னை முன்னரே தெரியும் போலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் பத்திரிகைச் செய்திகளிலும் பார்த்திருக்கின்றார். சில பல மல்லிகை மலர்களை முன்னரே இவருக்குக் கொடுத்து வைத்திருந்தார், துரை விசுவநாதன்.

தூரத்தே என்னைக் கண்டதும் ஒரு சிப்பந்தியை அனுப்பி, என்னைக் கூட்டி வரவும் செய்திருந்தார்.

அன்று தொட்ட பழக்கம் தான்.

வியாபாரிகளுக்குள்ளேயே இவரொரு வித்தியாசமானவர். இலக்கிய நெஞ்சம் கொண்டவர். ஆட்களை அளந்தளந்து எடைபோட்டுப் பழகக் கற்றுத் தேர்ந்தவர்.

பின்னர் ஆண்டு மலர்களுக்குக் கடைசிப் பக்க விளம்பரங்களுக்கு, நான் இவரைத் தான் அணுகி விளம்பரம் கேட்பது வழக்கம்.

கொழும்பில் ஒருநாள் மல்லிகையைத் தயாரிக்கும் கணினி திடீரென மக்கர் செய்ய ஆரம்பித்துவிட்டது. கணினி நிபுணர் **திவாகரன்** என்னை ஆழமாகப் பார்த்து விட்டுச் சொன்னார்: "இதிலை இனிமேல் வேலையில்லை! நான் சொல்றதாயிருந்தால், இதை விட்டிட்டு, புது சொன்று வாங்குவது தான் நல்லது!"

என் மனசு 'திக்'கென்றது. "இப்ப புதுசு வாங்க நானெங்கே போவேன்!"

- "என்ரை மனசுக்குப் பட்டதை நானிப்பை சொல்லிட்டன். இனி நீங்க தான் யோசிச்சுச் சொல்ல வேணும்!" என்றார், திவாகரன்.

இதே சிந்தனை தான் மண்டையைக் குடைந்து கொண்டேயிருந்தது. இரவு கூடச் சரியான தூக்கமில்லை.

-ஒரே சிந்தனை!- ஒரே யோசனை!

இந்த மனப் பதகழிப்புடன் செட்டித் தெருவால் ஒரு நாள் காலை நடந்து வந்த சமயம், காரொன்று என்னருகே வந்து சட்டென்று நின்றது.

"என்ன ஜீவா, தெருவென்றும் பாராமல், ஒரே யோசினையோடு, நடந்து போறீங்க?" என்றார், வாகனத்தின் முன் பக்கமிருந்த ஒருவர். அவர் தேவி ஜுவலர்ஸ் அதிபர் வாசு என அன்புடன் அழைக்கப் பெற்ற சீனிவாசகம்.

"நீங்க கடைக்குத் தானே போறீங்க? போங்கோ, நான் பின்னாலே வந்து எல்லாத்தையும் ஆறுதலாகக் கதைக்கிறன்!"

பின்னர் சாயங்காலம் சாவகாசமாக இவரது நிறுவனத்தைச் சென்றடைந்தேன். இருக்கையில் குந்தினேன். என்னைக் கண்டதும் தேநீருக்குச் சொன்னார். நான் இடையில் தேநீர் குடிப்பதில்லை என மறுத்து விட்டேன். அப்படியொரு வாழ்க்கை ஒழுங்கு!

மல்லிகையின் இந்தக் கால கட்ட இக்கட்டைச் சொல்லி முடித்தேன். எனது பொருளாதாரச் சிரமத்தை விளங்கப் படுத்தினேன்.

"நீங்க எதற்குமே மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாதீங்க! உங்க கொம்யூட்டர் நண்பர் திவாகரனிடம் சொல்லி, புதுக் கம்யூட்டருக்கு ஏற்பாடு செய்யுங்க. நேரில் வரவேண்டாம்! ரெலிபோனில் சொல்லுங்க! மொத்தப் பணத்தையும் பையனிடம் நானே அனுப்பிச் சேர்ப்பித்து விடுகின்றேன்!"

நான் எனது வாழ்க்கையில் திடுக்கிட்டு, என்னை நானே கிள்ளிப் பார்த்த கட்டம் தான் அது!

பழகப் பழக இவரது உதவும் குணத்தை அநுபவ பூர்வமாகத் தெரிந்து கொண்டேன். இப்படி எத்தனையோ அற்புதமான மனசு படைத்தவர்கள் நம் மத்தியில் தினசரி நடமாடிக் கொண்டே இருக்கின்றனர், என்பதையும் விளங்கிக் கொண்டேன்.



இந்தப் பிரபலத்திற்குப் பின்னால் இப்படியானவர்களுக்கு ஓர் ஆபத்தும் இருக்கிறது என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது. இந்தப் புகழ் பிரபலத்தை வைத்துக் கொண்டு சமூக விரோதிகள் இப்படியானவர்களை அடிக்கடி நெருங்கி நெருங்கிப் பொருளாதாரச் சிரமத்தைக் கொடுக்கக் கூடும் என்ற எதார்த்த உண்மையையும் நாம் தெளிந்த மனசுடன் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு நாள் சாயங்காலம். ஞாயிற்றுக் கிழமை.

வெள்ளவத்தைக்குப் போவதற்காகக் கொச்சிக்கடை அந்தோனியார் கோயிலுக்கு அருகாமையில் உள்ள ஒரு பஸ் தரிப்பு நிறுத்தத்தில் 102 பஸ்ஸுக்காகக் காத்து நின்று கொண்டிருந்தேன். கம்பவாரிதி ஜெயராஜ் அழைத்திருந்தார். இலக்கியக் கூட்டமது.

நீண்ட நேரமாகிவிட்டது.

பஸ் வருவதற்கான அறிகுறியே தெரியவில்லை.

இலேசாக மழையும் தூறிக் கொண்டிருந்தது. மழை பலக்கலாம் என உள் மனமும் சொன்னது. மேகமும் சாடை மாடையாக இதை உறுதிப் படுத்துவது போல, இடி முழக்கமிட்டது.

கிறீச்சிடும் சத்தம் கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன்.

தெருவில் போன காரொன்று 'பிரேக்' போட்டு நின்ற சத்தம் தான் அது. பின்னர் கார் பின் பக்கமாக என் அருகில் நகர்ந்து வந்தது. பார்த்தால் இவர் தேவி ஜுவலர்ஸ்.

முன் ஆசனத்தில் இருந்த இவர் முகத்தை நீட்டி, "எங்கே போக நிக்கிறீங்க?" என்றார்.

"வெள்ளவத்தைக்கு. கம்பவாரிதியின் கூட்டத்திற்கு!"

"நானும் அங்கே தான் போறன். வாங்க. பின்னால் ஏறிக் கொள்ளுங்க!" என்றார், வாசு.

இப்படிச் சின்னச் சின்னச் சம்பவங்கள் எத்தனையோ...... எத்தனையோ.....!

அன்றைக்கே மனசுக்குள் முடிவெடுத்துக் கொண்டேன். கலைஞர்களை, எழுத்தாளர்களை இப்படி மனங் கனிந்து நேசிக்கும், எத்தகைய வெளி விளம்பரங்களுக்கும் ஆசைப்படாமல் மௌனமாகத் தினசரி தத்தமது கடமைகளைச் செய்து வரும் இந்த உயர் மனப் பண்பு கொண்டவர்கள் வெறும் குடத்துள் விளக்குப் போல, வெளியே தெரியாமல் இருக்கவே இருக்கக் கூடாது! என அன்று என் மனதிற்குள் எடுத்த முடிவு தான், இன்று அன்னாரது உருவம் அட்டைப் படமாக மிளிர்வதின் பின்னணித் தகவல்களாகும்.


வெள்ளைக்காரன், அமெரிக்கன், ஜப்பான் காரனெல்லாம் வாழ்க்கையில் தாம் கடந்து வந்த வெற்றி தோல்விகளையெல்லாம் நூலுருவில் வெளியிடுகின்றனர். ஏன் நமது தேவி ஜுவலர்ஸ் நல்லப்பன் சீனிவாசகம் அவர்களும் தனது வாழ்க்கை வரலாற்றை நூலுருவில் எழுதி வெளியிடலாமே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைந்த கதிரையும் நானும்

வதிரி. சி. ரவீந்திரன்



அந்த இலகு கதிரை
நீண்ட காலமாகப் பாவிக்கப்பட்டு
கால்கள் ஆட்டம் காண
எனக்கு உபகாரம் செய்யப்பட்டது.
எனது கல்வி, வாசிப்பு எல்லாமே
எனக்கு அந்தக் கதிரையில் தான்!
நான் படிக்கும் போது
சில சமயம் ஆடிக்கொண்டிருக்கும்.
ஓசைகள் கூட எழும்பும்.
அப்பா அந்தக் கதிரையை
சரி செய்து என்னைப் படிக்க வைப்பதில்
அக்கறையோடு இருப்பார்.
அந்தக் கதிரையோடு ஒரு பலகையையும்
படிப்பதற்கு மேசையாக்கித் தந்திருந்தார்.

இப்போது எனது வீட்டில்
வசதி வாய்ப்பான தளபாடங்களும்
காட்சி தருகின்றன.
எனது வீட்டில்
நான் பாவித்த கதிரையும்
புத்தகம் வைத்துப் படித்த பலகையும்
எறியப்படாமல்
பாதுகாக்கப்படுகின்றன.
இவைகள் தான்
என்னை முன்னே வரச் செய்த
பொக்கிஷங்கள்!



# நல்ல செய்தி

- ஆனந்தி

வேர் கழன்று, முழுவதுமே சரிந்து விழுந்து விட்ட வாழ்க்கை விருட்சத்தின் ஒரு சிறு கிளை போலவே, வேறு வழியின்றி வசந்தனும் அங்கு வந்து சேர்ந்திருந்தான். அது ஓர் அகதி முகாம். அநாதைகள் போல், எல்லாமிழந்து வந்திருக்கிறவர்களை உயிருடனோ, பாதியாகவோ காப்பாற்றி வாழ வைக்கிற, புண்ணிய கைங்கர்யத்தின் பொருட்டே, அது அந்த இடைத் தங்கல் முகாம் அவர்களுக்காக அங்கு நிறுவப்பட்டிருந்தது. அதில் வந்து குளிர்காய வேண்டுமென்ற தலைவிதியல்ல, விதியின் சாபம் வசந்தனின் தலையில் மட்டுமல்ல, இலட்சக் கணக்கான தமிழர்களுக்கும். அதுவே சாபமாக இன்று சந்திக்கு வந்துவிட்ட தமிழரின் வரலாறும், வாழ்க்கையும், களை பூசப்பட்டுக் கண்ணீரே வாழ்க்கையாகிப் போன. இந்தச் சரித்திரம் எப்போது முடியுமென்றே தெரியவில்லை.

இப்படித் தீக்குளித்தே சாகிற தமிழர்களில் ஒருவன் தான் இந்த வசந்தனும் கூட. பதினாறு வயது கூட நிரம்பாத அந்த வாலிப இளைஞனுக்கு, வயதுக்குத் தகுந்த மாதிரி வாழ்க்கை பற்றிய உணர்ச்சி மயமான உயிரோட்டம் கொண்ட ஞாபகங்கள் எதுவுமின்றி, சடம் போல மரத்துப் போன வெறும் நடைப்பிணமாகவே இன்று அவன் மாறியிருந்தான். உயிரைக் காப்பாற்றுவதற்காக மட்டுமே தலைதெறிக்க மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்க ஓடிவரும் போது, அவன் கண்ட காட்சிகளே [illegible] அறுத்தெறியப் போதும். அப்ப [illegible] கோரமான நெஞ்சை உருக் குலைக்கும் அவலக் காட்சிகள். மனி தன் [illegible] மனிதனே சாகும் இந்த அவலம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. ஒரு யுகமாக இதுதான் இங்கே வாழ்க்கையென்று பழகிப் போய்விட்டது.

இப்படித் தெருவிலே, நாதியற்றுச் செத்து மடிய தமிழர் செய்த பாவம் தான் என்ன? வசந்தனுக்கு நெஞ்சு கொதித்தது. இப்போது அவன் கூட உறவுகள் அழிந்து போன ஒரு தனி ஆள் தான். வரும் வழியில் ஷெல் விழுந்து, அவனது அப்பா அம்மா கண்ணான ஒரே தங்கச்சி எல்லோருமே துடிதுடிக்கச் செத்து மடிந்ததை அவன் அவ்வளவு எளிதில் மறந்து விடுவானா? அவனைப் போல இன்னும் எத்தனை மனிதர்களோ?

களைக்கக் களைக்க ஓடி வந்ததால் கால் வேறு வலித்தது. இரண்டு நாட்களாக ஒன்றுமே சாப்பிடாததோடு, பச்சைத் தண்ணீர் கூட, வாயிலே படவில்லை. ஒரு சொட்டுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணீருக்கே வானத்தை அண்ணாந்து பார்த்து அழ வேண்டியிருக்கிறதே! அவன் நினைத்தான். 'இனி யாருக்காக நான் வாழ வேணும்? நான் சாக என்ன வழி?' அதற்கா வழியில்லை இந்த மரண பூமி யில்? அவன் செத்தால் தான், யாருக்கு நட் டம்? அவன் இறந்த பின்னும், இந்த மண் வாழும். இழப்பென்பது அவரவர் நிலை யிலேயே பிடிபடும்.

அப்பா இருந்த வரைக்கும் வாழ்க்கை ஒரு மாதிரி ஓடியது. அவர் கஷ்டப்படுகிற, ஒரு விவசாயி. ஒரு மண் குடிசையிலே தான் அவர்களுக்கு வாழ்க்கை. சொந்த நிலம் கூட இல்லாமல், குத்தகை நிலத் திலே தான் அப்பா பயிர் செய்து வந்தார். அவனைக் கஷ்டப்பட்டு ஆளாக்கி, படிக்க வைத்துக் கொண்டிருந்தார். அவனும் நன் றாகப் படிப்பான். வருகிற வருடம் தான் அவன் ஏ. எல் எடுக்க இருந்தான். அதற் குள் இப்படி ஒரு சரிவு. இனி அவன் படித்து யாருக்காக உழைத்துக் கொட்டப் போகி றான்? அது தான் பெரும் கவலையாக இரு ந்தது, அவனுக்கு. அப்பாவோ அம்மாவோ, அருமைத் தங்கச்சியோ இனித் திரும்பி வரப் போவதில்லை. நானும் அவர்கள் இடத்திற்கே போய்விட வேண்டும்.

இது தான் சரியான முடிவு என்று அவ னுக்குப்பட்டது. அவ்வளவு பொறுக்க முடி யாத பெருஞ் சோகம் அவன் மனதில். இது வரை தான் வாழ்க்கையை எட்டிப் பிடிக்க முடியவில்லை. அவன் கண் முன்னால், கண் நிறைந்து பார்க்கும் படியாகத் துரு வத்தில் எத்தனை பேர் கப்பல் விட்டுப் போகிறார்கள். நல்ல நவீன வசதிகளுடன் தலை கால் புரியாமல் வாழ்கிறார்கள். அந் தத் துருவம் இங்கு மட்டுமல்ல, வெளி நாடுகளிலுமே கொடி கட்டிப் பறக்கிறது. அவர்களுக்காகவும் தான், இங்கு இப்படி உயிர் போகிற நிலைமை.

'யாராவது எப்படியாவது வாழ்ந்து விட் டுப் போகட்டும். என்னை எரிக்க, இந்தக் கானலே போதும். இங்கு கண்பட்ட இட மெல்லாம் கண்ணீர் வெள்ளம் தான். கால் இடறுகிற, இடமெல்லாம் பிணக் குவியல் கள் தான். இதையெல்லாம் பார்த்தே, கண் அவிஞ்சு போயிருக்கு. நான் இனி எதுக்கு உயிரோடு இருக்க வேணும்.' என்று அவன் வருந்தி அழுதாலும், சாவு வரவில்லை. அது விதிக்கப்பட்ட கணக்கில் தான், வந்து முடியும். அதுவரைக்கும் இங்கேயிருந்து சாக வேண்டியது தான்.

அவர்களை பார்க்க யார் யாரோவெல் லாம் வந்து போனார்கள. சிவப்புக் குறி யிட்ட சிலுவை சுமந்தவர்களும் நல்ல பிள் ளைகள் போல் வந்து போனார்கள். பிள் ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டி விடுகிற மகா கைராசிக்காரர்கள் அவர்கள். அவனுக்கு எவர் முகத்தையுமே ஏறிட்டுப் பார்க்க மனம் வராமல், ஒரு மூலையிலேயே முடங்கிப் போய்க் கிடந் தான். அழுக்கு ஆடையும், பரட்டைத் தலையுமாய், பார்ப்பதற்கு அவன் ஓர் அரை விசரன் போல் தோன்றினான். அந் தப் பாசாங்குக்காரர்களினிடையே ஓர் ஒளியுலாப் போல, ஓர் உள நல மருத்துவ ரும், அங்கு அடிக்கடி வந்து போனார். நிறைந்த முகத்துடன் தோன்றுகிற, ஓர் இளம் டாக்டர் அவர். அவன் வசந்தன் மீது, தனிப்பட்ட கருணையோடு பழகுவார்.

அவனின் நிலைமை அப்படி இருந்தது. இவ்வாறான மன நெருக்கீடுகளிலிருந்து



மீண்டு வருவது கஷ்டமென்பது அவர் அறியாத ஒன்றல்ல. இதிலிருந்து அவன் விடுதலையாகி முழு மனிதனாக மாற, பல காலம் பிடிக்கும். கொஞ்சம் கொஞ்சமாகத் தான் அவனை மாற்ற முடியும். அதற்கு அவனுக்குத் தேவைப்படுவது, உளநலச் சிகிச்சையே. அவனோடு அவர் நீண்ட நேர மாக மனம் திறந்து உரையாடுவார். ஒரு நாள் அவர் கேட்டார்:

''வசந்தன்! நீ சரியாகச் சாப்பிடுவதில் லையென்று சொல்லுனமே. அப்படியிருப்ப தாலே, உனக்கு என்ன வரப் போகுது? வீணாய் வருத்தம் தான் வந்து பிடிக்கும்''

''நான் சாப்பிட்டால் மட்டும் எல்லாம் கிடைச்சிடுமே? அப்பா அம்மா திரும்ப வரு வினமே? சொல்லுங்கோ டாக்டர்''

''அப்பிடி நீ நினைக்கப்படாது. உன்னை விட இன்னும் எவ்வளவோ பேருக்கு, இழப்புகள நிறைய வந்திருக்கு. அவையள் கூட, ஓரளவு சந்தோஷமாய், தேறி வருகினம். நீ ஏன் அப்படி இருக்கக் கூடாது?''

''எப்பிடி டாக்டர், என்ரை அப்பா அம் மாவை விட்டிட்டு? நான் செத்தால் தான் எனக்கு நிம்மதி''

''உணர்வுகளை, நாமே தான் உரு வாக்கிக் கொள்கிறம். எதுவும் எங்க ளுக்குரியதாய், எங்களோடு நிலைச்சு நிற் கப் போறதில்லை. அப்படி நினைக்கிறது கூட, வெறும் பிரமைதான். என்றைக்கும் நீ நீயாகத்தான் இருக்க வேணும். நீ வாழ வேண்டியவன். மனதை ஆறுதல் படுத்த, எத்தனையோ வழிகள் இருக்கு. நீ நல் லாய்ப் பாடுவியாமே? ஏன், நீ ஒரு பாடக னாக வரக் கூடாது? ப்ளீஸ் இப்ப எனக் காக, நீ ஒரு பாட்டுப் பாட வேணும்''

அவரது வார்த்தைகளை உணர்ச்சி மாறாமல் அவன் கேட்டுக் கொண்டிருந் தான். அவரின் ஆழ்ந்த சொற் பிரவாகத்தி னால் மன உளைச்சல் தீர்ந்து தான் ஒரு புது மனிதனாய் மாறிக் கொண்டிருப்பதாய் அவன் உணர்ந்தான். திடீரென்று மனதில் சூழ்ந்த கவலையெல்லாம் மறந்து போன வனாய், எங்கோ சஞ்சரித்தபடி உயர் வானில் பறந்த வண்ணம், அவன் குரலெடுத்துப் பாடத் தொடங்கினான். அவனின் குரல் கொஞ்சமும் லயம் பிசகாமல் சுருதி சேர் ந்து கணீரென்று கேட்டது. அவர் அதைத் தன்னை மறந்து கேட்டுக் கொண்டிருந்தார்.

மறுபடியும் அவர் வரும் நேரங்களில் அவனுக்கு இதுவே பழக்கமாகிவிட்டிருந் தது. அவர் கேட்காமலே அவன் தன்னை மறந்து ராகமிழுத்துப் பாடத் தொடங்கு வான். அவனின் அறிவுக்கு எட்டியவரை உணர்வுகள் மறந்து போன, அது ஓர் உன் னத உலகமாக அவனை மனம் குளிர வைத்தது. அதன் பிறகு அவன் அடியோடு மாறிப் போனான். மறந்து போயிருந்த வாழ்க்கை பற்றிய நினைப்புத் தானாகவே வந்தது. நன்றாகப் பாடுவதோடு மட்டுமல்ல, படிக்க வேண்டுமென்றும் விரும்பினான். உலகம் அறியத் தவறுகிற அவனுடைய அந்த மானஸீக உலகில், அவனது இருப் பும் மெய்யான ஒன்றாகவே அவனைப் புது உத்வேகம் கொண்டு, விழிப்படைந்த ஒருவனானான், அவன் அப்படி ஒரு முழு மனிதனாய் மாறிய போதெல்லாம், டாக்டர் ஆற்றிய அரும்பணியின் விளைவாகவே அது நடந்திருப்பதாய், அவன் பெருமிதம் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரிடமிருந்து அவன் இன்னும் நிறைய விடயங்கள் கற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. அவர் தானொரு பொது நலத் தொண்டனென்று முத்திரை குத்திக் கொண்டு அங்கு வந்து கடமை புரிய வில்லை என்பதை அவன் நன்றாகவே அறிந்து வைத்திருந்தான். சேவை மனப்பான்மையே அவரின் உயர் நிலைக் குறிக்கோளாக இருந்தது. மனநலம் பாதிக்கப்பட்ட அனைவருடனும், அவர் சமமாகவே பழகுவார். அவரது ஒப்பற்ற கருணை மூலமே, உணர்வு மரத்துப் போய்க் கிடந்த, வசந்தன் மீண்டும் உயிர் பிழைத்துக் கொண்டான். அவனுக்கு உயிர் கொடுத்து, வாழ்வித்த பொறுப்பை அவர் இயல்பான கருணையோடு நிறைவேற்றி வைத்ததால், அனைவருக்குமே அவர் மீது நம்பிக்கை வந்தது.

அன்றாடம் ஒரு போலி நாடகமாக, அவர்களுக்குச் சேவை செய்ய வந்து போகிறவர்களை விட, அவரே மேலானவர் என்று பட்டது. கடவுள் கனிந்து பேசுகிற அவர் முகமோ அவர்களது இருண்ட உலகிற்கு ஒளி ஏற்றி வைக்கிற ஒரு விடிவெள்ளி போலானது.

வெறும் பிரசாரத்துக்காக மட்டுமே அந்த அகதிக் கூட்டத்தைப் பொருளாகக் கொள்பவர் மத்தியில், விளம்பரம் தேடாமல், அங்கு வந்து பணியாற்றி வரும், அவரின் மேலான அன்பே பேசப்பட வேண்டிய ஒரு கருப்பொருளாய் நிலைத்து நிற்பதைப் பறை போட்டுச் சொல்ல வேண்டிய நிலைமையை எண்ணி அவன் பெரும் கவலை கொண்டான். தான் ஒரு முழு மனிதனாய் வெளியேறும் சமயம், அதுவும் தானாக வெளிவருமென்று இப்போது அவனுக்குப் பட்டது. அந்த ஒரு நல்ல செய்திக்காகவே இன்னும் அவன் காத்திருந்தான்.



## மல்லிகை ஆசிரியரின் 84-வது பிறந்த தினம்

27.6.2010 ஆண்டு மல்லிகை ஆசிரியரின் 84-வது பிறந்த நாளாகும்.

இலக்கிய நல் இதயங்களின் மனமார்ந்த வாழ்த்துக்கள் இன்னும் இன்னும் இளமையையும் புதுப் புது உத்வேகத்தையும் இலக்கிய வீரியத்தையும் நல்கும் என அவர் நெஞ்சார நம்புகின்றார்.



# யாதுமாகி மகிழ்வேன்

வெ. சாரங்கன்

[illegible] நூலகம்
யாழ்ப்பாணம்.



பூமியின் மேற்பரப்பில்
அநாமதேயப் புள்ளிகளாய்
முளைக்கின்றன
கேள்விக் குறிகள்
என்னை நோக்கி.

யாரோ அருந்திவிட்டுப் போன
பானம்
அலைமோதுகின்றது.

கால்கள் இழய
காடுகளை நோக்கி
இனிமேல்
நடக்க முடியாது.

வானும் இறந்துபோன

இரவொன்றில் தொடங்கிய
பயணம் முடிவிலியாய்
முடிகிறது.

யாரோ விதைத்த
நம்பிக்கை விதைகளில் இருந்து
நச்சுக் கொடிகள்
முளைவிடுகின்றன.

முளைவுக் கட்டும்

யாதுமாகி
காலம் கடந்து
நட்சத்திரங்களின் வெளியில்
நானே மகிழ்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# வாழா வெட்டியன்

— வேல் அமுதன்

ராகு காலம் முற்பகல் மணி பத்து முதல் பதினொன்று வரை. மாறுகலையோடு மணமகள் அறைக்குத் திரும்பிய மணமகனை ஒரு மணித்தியாலம் காலம் தாழ்த்திய பின் மீண்டும் மேடைக்கு அழைத்துவர ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்த இடைநேரத்தைக் கழிக்கச் சபையோர் வெற்றுப் பேச்சில் இறங்கினர். எனக்குப் பக்கத்தில் இருந்த இருவரின் பேச்சு என் காதில் விழுந்தது.

"செல்வா! உன்னைக் கனக்க இடத்திலை பார்த்திருக்கிறன். தனிச்சுத் தான் வாறாய். ஏன் மனிசியையும் கூட்டி வரலாம் தானே?"

"அவள் வாறாளில்லையடா!"

"என்னடா நீங்க ரெண்டாப் படிச்சு- ரெண்டாய் கூடித் திரிஞ்சு- ஒன்று சேர்ந்தனீங்கள் தானே? Love Marriage. வாடெண்டா வருவாள், தானே! ஏண்டா, இந்தப் பரக்கணிப்பு?"

"அவள் இப்ப என்ரை சொல்லைக் கேட்கிறாளில்லை. விழுந்து கும்பிட்டாலும் வருவாள் போலையில்லை."

"என்னடா! புதிசா இருக்குது. கொஞ்சம் புரியும்படி விளக்கமாச் சொல்லன்ரா!"

"சொன்னால் அது கன்றாவியடா!"

"டேய், நான் உன்ரை நண்பனெல்லோ. உள்ளதை உள்ளபடியே அப்பிடியே சொல்லன்!"

"சொல்லுறன், கவனமாகக் கேள். எங்கடை காதல் கலியாணம் ஒரு வருசம் வரைக்கும் நல்லாய் ஓடிச்சுது. அதுக்குப் பிறகு தெரிஞ்சுப் போச்சு. நான் Auditor ஆக வேலை செய்தது உனக்குத் தெரியும். அந்த Audio Firm முறிஞ்சு போக. Petrol [illegible] பிள்ளையாக [illegible] வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு வந்துது. [illegible] Shift [illegible] அவளோடை நான் [illegible] இரண்டொரு [illegible] பத்தாவது நான் [illegible]. அவள் பட்டப் படிப்புக்கு [illegible] McCom [illegible] வேலை செய்கிறா. [illegible] கொண்டு போக நான் விரும்பேல்லை. ஒரு சாதாரண [illegible] பிள்ளை போல [illegible] இருக்காம்!"

"கேக்கிறன் என்டு குறை நினையாதை. உன்ரை தாம்பத்திய வாழ்க்கை?"

"இப்ப படுக்கையிலும் புறக்கணிப்புத் தான்."

"[illegible] செய்யாதை! [illegible] புரிந்துணர்வோடை இல்லாமல் [illegible] வாழா வெட்டியாக இருந்து வாழ்க்கையைப் பாழாக்காதை."

"அப்ப நான் என்ன செய்ய...?"

"மனம் திறந்து [illegible] பேசு. அவள் இசைந்து, இணங்கி வாறாளெண்டால் [illegible] நேரம் [illegible] விட்டாள், காலத்தை வீணடிக்காமல் இன்னொரு [illegible]"



நூல் நயப்பு

# விஷ்ணுவர்த்தினியின் 'மனதில் உறுதி வேண்டும்'

கௌசிகன் [illegible]

அரியரத்தினம் விஷ்ணுவர்த்தினியின் பத்துச் சிறுகதைகள் 'மனதில் உறுதி வேண்டும்' என்னும் தொகுப்பாக வெளிவந்திருக்கிறது. இது ஒரு ஜீவநதி வெளியீடு. இத்தொகுதியிலுள்ள கதைகள் செங்கதிர், யாழ். தினக்குரல், மல்லிகை, ஞானம், ஜீவநதி, படிகள், கதிரவன் ஆகிய சஞ்சிகைகள், பத்திரிகைகளில் வெளிவந்தவையாகும். இக்கதைகளுள் ஒன்றின் தலைப்பே நூலின் தலைப்பாகவும் அமைந்துள்ளது.



விஷ்ணுவர்த்தினி யாழ். பல்கலைக்கழகக் கலைப் பீட மாணவி. இளம் எழுத்தாளர். இவர் எழுத்துலகில் காலடி எடுத்து வைத்து இரண்டு ஆண்டுகள் என நாடறிந்த எழுத்தாளர் தெளிவான தெரிவித்திருக்கிறார்.

"நான் வாழும் வடமராட்சிப் பிரதேச மக்களின் வாழ்வுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், மனத்தாக்கங்கள், ஏக்கங்கள், நம்பிக்கைகள், சிந்தனைகள், கனவுகள் என்பவற்றைத் தரிசித்த வகையில் பெண்ணியக் கொடுமை, சாதியக் கொடுமை, சமூக நடத்தை, குடும்ப உறவு, புரிந்துணர்வு போன்ற கருப்பொருள்களைக் கொண்டு இக்கதைகளைப் படைத்துள்ளேன். எனது வீடு தொடக்கம் இன்று நான் கல்வி கற்கும் பல்கலைக்கழகம் வரை நான் பெற்ற அநுபவங்கள் இச்சிறுகதைகளுள் கலந்துள்ளன" என விஷ்ணுவர்த்தினி நூலின் முன்பக்கத்திலுள்ள என்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

சிறுகதைத் தொகுப்பை வாசிக்கும் போது, அவரது கூற்றுச் சரியானதே என்ற எண்ணம் எழுகிறது. சமுதாயச் சீர்கேடுகளைக் கண்டு வெகுண்டு வேதனைப்படுபவராக எழுத்தாளரை அவரது கதைகளில் தரிசிக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கதைகள் அவரது வளர்ச்சியையும் காட்டுகின்றன. 'உல்லாச நுமபித்தானோ' லிருந்து முதிர்ச்சி பெற்றதாக 'ஆர்கோவோ' எனும் சிறுகதை அமைந்துள்ளது. இந்த வளர்ச்சி தொடரப் போகின்றது. அநுபவம் அதிகரித்து விரிந்து செல்லப் போகும் எதிர்காலத்தில், மேலும் சிறந்த கதைகள் அவரிடமிருந்து உருவாகப் போகின்றன என்பதை நாம் நிச்சயித்துக் கொள்ளும் வகையில் இத்தொகுப்பிலுள்ள கதைகள் அமைந்துள்ளன.

எமது சமுதாயத்திலே கலந்து கிடக்கும் தவறுகளையும், பிரச்சினைகளையும் தன் கதைகளூடாக எமது கவனத்திற்குக் கொண்டு வந்து, அவற்றைத் திருத்திவிட முனையும் வேட்கையுடன் இவரது கதைகள் எழுதப்பட்டுள்ளன. "நான் ஏன் இவர்கள் முன் அழ வேண்டும்?" என நிமிர்வு கொள்ளும் மகேஸ்வரி. "என்ன பிரதீபா அழுகிறாய்? இது ஒரு சின்ன விசயம். இதுக்குப் போய் படிப்பை விடப் போறனென்று சொல்றாய். இதுக்கே இவ்வளவு நாளும் கஷ்டப்பட்டனி?" எனத் தெம்பூட்டும் அன்னலெட்சுமி, சகலருடன் சந்தோசமாக வாழ முடியும் என்று நம்பிக்கை கொள்ளும் நிருபா என இந்தப் பிரச்சினைகளை எதிர்கொண்டு முன்னேறும் மனவுரம் கொண்ட பாத்திரங்கள் அவரால் படைக்கப்பட்டு, உலவவிடப்பட்டிருப்பது, அவர் பிரச்சினைகளுக்குக் காணும் தீர்வாகத் தென்படுகிறது.

இலக்கியப் பொழிலில் முகையவிழ்த்து மணம் பரப்ப ஆரம்பிக்கும் போட டோஸ்னாவின் 'மனதில் உறுதி வேண்டும்' சிறுகதைத் தொகுப்பிலே தரிசிக்க முடிகின்றது.

HAPPY PHOTO

Excellent Photographers
Modern Computerized Photography
For
Wedding Portraits
&
Child Sittings

Photo Copies of
Identity Cards (NIC),
Passport &
Driving Licences
Within 15 Minutes

300, Modera Street,
Colombo - 15.
Tel : 2526345





# தம்பிஐயா தேவதாஸ் நூல்: இணைப் பழமொழிகள் (சிங்களம்- தமிழ்)

—மா. பாலசிங்கம்

அச்சு ஊடகங்களைக் கிரமமாக வாசிக்கும் தமிழ் வாசகருக்குத் தம்பிஐயா தேவதாஸ் அந்நியமானவராக இருக்கமாட்டார். அவரது எழுத்துக்களை வாசிப்பதன் மூலம் வாசகருக்கு அவர் மிக நெருக்கமாகிவிட்டார். அவரது சமகால எழுத்துக்களை நோக்கின் பெரும்பாலும் அவரது கருப்பொருள் சினிமாவாக இருப்பதை அறியமுடியும். இந்த விடயத்தில் அச்சு ஊடகங்களின் இச்சைக்கு அவர் துணை போகின்றார் என்றே கூற வேண்டும். இருந்தும் அவர் தனது அறிவுக் கடற்கரைக் காலர வாசித்து, அரைவேக்காட்டு இரசனை வாசகனின் இரசனையை நிறைவுபடுத்துவதற்காகச் சினிமாவை எழுதுவதில்லை. நடிகைகளின் காந்தக் கவர்ச்சி குறித்து அவர் எழுத்துக்கள் பேசா. தமிழகத்தின் தரங்கெட்ட திரைப்படங்கள் குறித்து அவரது எழுத்துக்கள் புகழாரம் தொடுக்காது. இன்று பெருமளவிலான பணத்தை அள்ளக் கூடிய துறை சினிமா. ஏராளமான பணியாளர்களை உள்வாங்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது. எனவே வாழ்வுக்கு பெரும் ஊடகத்தை வழங்கும் சினிமா. தான் பிறந்த மண்ணிலும் செழிப்படைந்து மக்களை வாழ வைக்கும் என்ற நோக்கில் அதன் மாற்றுப் பக்கங்களைத் தமிழ் வாசகருக்கு பெரும் தேடுதல்களைச் செய்து சினிமா குறித்து இதுவரை அறியாத பக்கங்களை வழங்கிக் கொண்டிருக்கிறார். இதில் ஈழத்துச் சிங்களச் சினிமாவும் தமிழ்ச் சினிமாவும் அடங்கும். இந்த உண்மையை ஆதாரப்படுத்துவதாகத் தம்பிஐயா தேவதாஸின் 'இலங்கைத் திரையுலகச் சாதனையாளர்கள்', 'இலங்கைத் திரையுலக முன்னோடிகள்', 'இலங்கைத் தமிழ்ச் சினிமாவின் கதை', 'பொன் விழாக் கண்ட சிங்களச் சினிமா' ஆகிய நூல்கள் விளங்குகின்றன. இவைகள் எதிர்காலச் சந்ததிக்காகப் பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷங்கள்.



இன்றைய தமிழ் வாசகன் தம்பிஐயா தேவதாஸின் சினிமா எழுத்துக்களைப் படித்துவிட்டு அவரைச் சினிமாக்காரன் வைத்துப் பார்த்தால் அது அத்தகைய வாசகரின் குறுகிய வாசகப் பரப்பையே குறிக்கும்.

தசாப்தங்களை ஐந்துக்கு முன்னரே அவர் சிங்கள-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழி பெயர்ப்பினூடாகவே தமிழ் வாசகர்களது கவனத்தைப் பெற்றார். பிரபல சிங்கள நாவல்களைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டார். இதில் கருணா சேன ஜயலத் என்பவரது **'கொலு கதவத்த'** என்ற நாவலும் அடங்கும். புனைவிலக்கியங்கள் குறித்த திறனாய்வுகளையும் செய்துள்ளார். தான் பிறந்த ஊரான புங்குடுதீவின் வரலாற்றை **'புங்குடுதீவு வாழ்வும் வளமும்'** என்ற நூலாகத் தந்துள்ளார். கல்விசார் பட்டதாரி. மதுரை, காமராஜர் பல்கலைக்கழகத்தில் ஊடகம், வெகுஜனத் தொடர்பு என்பவற்றில் முதுமாணிப் பட்டம் பெற்ற தகைசார் ஊடகவியலாளர். இலங்கை, ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பகுதிநேரத் தமிழ் அறிவிப்பாளர். ரூபவாஹினி தொலைக்காட்சியில் நேர்காணல் தயாரிப்பாளர். தொலைக்காட்சி நடிகர்.

தம்பிஐயா தேவதாஸின் 11ஆவது நூலாக 'இணைப் பழமொழிகள்' (சிங்களம்- தமிழ்) என்ற 94 பக்க நூல் வெளிவந்துள்ளது. கொழும்பு- 13, வித்தியாதீபம் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. இவரது இருமொழி- தமிழ் சிங்கள மொழிப் புலமைக்கு இந்நூல் கட்டியம் செப்புகின்றது. 369 சிங்களப் பழமொழிகளின் நேரடித் தமிழாக்கத்தோடு, அவைகளுக்கு இணையான தமிழ் பழமொழிகளையும் இந்நூல் தருகிறது. ஏலவே இவர் 2005இல் 'சிங்களப் பழமொழிகள்' என்ற நூலையும் தந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

உரத்த கல்விமான்கள் சமூகத்தில் மட்டுமன்றி, பாமரச் சனங்களது குழுமங்களிலும் இன்றும் ஆதிக்கம் பெற்று வாழ்பவை பழமொழிகள். இவைகள் வானத்திலிருந்து கொட்டுப்பட்டவை அல்ல. மக்களிடமிருந்தே கசிந்தவை. நாட்டாரியல் வழங்கிய செவிமொழி இலக்கியம். அனைத்து மொழிகளிலும் இவை வாழ்கின்றன. மொழியின் அவயமாக இவை பயன் தருகின்றதெனில் மிகையாகாது. இருவருக்கிடையில் நடைபெறும் தொடர்பாடலை இலகுபடுத்துபவை. அனைவருக்கும் பரிச்சயமான உயிரினங்கள், சடப்பொருட்கள், காலங்கள், ஊர்கள் என்பவைகளை ஒப்பீடு செய்வதன் மூலம் எடுத்தாளும் விடயத்தை இலகுபடுத்திப் புரிய வைக்கும் வல்லமை பழமொழிகளுக்கு உண்டு. உவமானங்களைச் சுட்டும் சொற் கூறுகளும் பழமொழிகளுள் அடங்குகின்றன. 'அத்தி பூத்தாப் போல, ஆனைக்கும் அடி சறுக்கும்' இவை இரண்டும் பழமொழிகளாகவே மக்கள் மத்தியில் கையாளப்படுகின்றன.

இந்நூலுக்கு மகுடம் இலங்கை, சப்ரகமுவ பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் வழங்கி இருக்கும் பொக்கிசமான அணிந்துரை. நந்தியாக நிற்கிறார். நூலின் ஆவண வலுவை உச்சமாக்குகின்றது. பழமொழியின் வரைவிலக்கணத்தை மிக நுண்ணியமாக அலசி அதன் தோற்றம், தன்மை, பரம்பல் அவை குறித்தான நூல்கள், ஈழத்தில் அவை குறித்தான ஆய்வுகளைச் செய்த ஆய்வறிஞர் பட்டியல் என்பவைகளோடு 'இணைப் பழமொழிகள்- சிங்களம், தமிழ்' என்ற இந்நூலையும் உகந்த முறையில் கொழித்துப் பார்த்துள்ளார்.

சிங்கள மொழியில் பூரண அறிவில்லாமல், நூலாசிரியரின் நேரடித் தமிழாக்கத்தின் உதவியோடு நூலைப் படித்தபோது ஏற்பட்ட உணர்வுகளை இங்கு தர விழைகிறேன்.



'அ'கர வரிசையில் சிங்களப் பழமொழிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. இது தேடுதல் சிரமத்தைக் குறைக்கின்றது.

ஒரே அர்த்தத்தைப் புகட்டும் பழமொழிகள், வெவ்வேறு உவமான ஒப்பு நோக்கலோடு காணப்படுகின்றன. ஊர்கள் சில வற்றிற்குச் சில தனித்துவங்கள் உண்டு. அத் தனித்துவங்கள் அந்த ஊர்களைப் பழமொழிகளுக்குள் இருத்தி, அவைகளின் சிறப்பைப் பரம்பல்படுத்துகின்றன. அத்தோடு சில பாவனைப் பொருட்கள், அவை தயாரிக்கப்படும் ஊர்களை மேன்மைப் படுத்துபவை. அவைகளும் பழமொழிகளாக்கப்பட்டு மக்களுள் வந்துள்ளன.

**தொட்டகமுவ** (215), **தம்புள்ள**(218), **கதிர்காமம்**(119) இவைகள் கீர்த்தி பெற்ற வணக்க ஸ்தலங்களாக உள்ளவை. பழமொழிகளுக்குள் இவைகளும் வருகின்றன.

**'தம்புள்ளையை** வணங்கிக் கொண்டு உடும்பைக் கொல்லப் போனவன் போல'. **தும்பர**(233) என்ற கிராமம் பாய்க் கைவினைக்குப் பிரசித்தமானது. **'தும்பர**வுக்குப் போயும் படுக்கப் பாய் கிடைக்காதது போல' என்ற பழமொழி அதை அறியத் தருகிறது. தமிழ் மாவட்டங்களும், சிங்களப் பழமொழிக்குள் செல்வாக்கைப் பெற்றிருக்கின்றன.

**'புத்தளத்**துக்கு உப்புக் கொண்டு போனது போல'(273). மற்றொன்று **'மட்டக்களப்பு**க்குச் சென்றும் ஒரு சாரமாவது கொண்டு வராதது போல'(301). இப்பழமொழி மிகவும் இளமையான தென்றே சொல்லத் தோன்றுகிறது. சார உற்பத்தி இங்கு கடந்த நூற்றாண்டின் மையப் பகுதியிலே தான் தோன்றியிருக்க வேண்டும்!

பெண்ணொடுக்கு முறையில் சிங்கள இனமும் சளைத்ததல்ல என்பதைச் சில பழமொழிகள் ஆதாரப்படுத்துகின்றன. 'பெண்ணின் மூளை அகப்பைக் காம்பை விடச் சிறியதாம்' என ஒரு பழமொழி பெண்களைச் சிறுமைப்படுத்துகிறது. தமிழர்கள் 'பெண்புத்தி பின் புத்தி' என்பது போல.

சாதி ஒடுக்குமுறைக்குப் பௌத்தம் இடம் கொடுப்பதில்லையெனப் பரவலான அபிப்பிராயமொன்றுண்டு. ஆனால், அதுவும் கீழைத்தேய மதமே! அதன் வேர் இந்து மதந்தான்! அந்த வகையில் அதிலும் சாதியம் கொலுவிருப்பது பழமொழியொன்றின் மூலமாக அறிய முடிகின்றது. 'கோழை அம்பட்டனைக் கண்டால் ஆடு கூடத் தாடியை நீட்டுமாம்'(256) இதுவேயது.

கீழைத்தேசக் கலாசார, பண்பாடுகளில் வேர் கொண்டதே தமிழ், சிங்கள வாழ்வியல் முறை. அத்தகைய நிலைப்பாட்டைத் தான் இந்த இணைப் பழமொழிகள் வெளிக்காட்டுகின்றன. அப்படியான ஒட்டுறவு இருந்தும் இவ்விரு இனங்களும் அர்த்தமில்லாது முரண்பட்டு வாழ்வதையே இந்நூலில் படித்த பழமொழிகள் சிந்திக்க வைக்கின்றன. சொல்லப் போனால் இப்பழமொழிகள், உறவுப் பாலங்களே.

தேசிய ஒருமைப்பாட்டுக்கு மொழி பெயர்ப்பாளர்களது பங்குப் பணி இன்றைய நிலையில் மிகவும் அத்தியாவசியமானது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலாசிரியர் தம்பிஜயா தேவதாஸ் எந்தவொரு குழுவையும் அடையாளப் படுத்தாது, அடக்கம் பேணி இந்நாட்டின் இரு மொழிகள் மீதும் இத்தகைய கரிசனை காட்டுவது மிகக் காத்திரமான தேசியப் பணியெனலாம். இதற்காக அவரைப் பாராட்டுவதோடு இத்தகைய தேசிய ஒருமைப்பாட்டுக்கான நன்முயற்சிகள் ஒரு வழிப் பாதையானதாக இருக்கக் கூடாது! இதே போல்- இதே வழியில் தமிழ்ப் பழமொழிகளைச் சிங்கள மக்கள் விளங்கிக் கொள்வதற்குத் தக்கதாகச் சிங்கள மொழியில் வெளியிட வேண்டும். அன்பர், பண்பாளர், இனியர் தம்பிஜயா தேவதாஸ் இதற்கு உந்து சக்தியாக இருக்க வேண்டும். பாராட்டுக்கள்.

தொடர்புகளுக்கு: வித்தியாதீபம் பதிப்பகம், புதுச்செட்டித் தெரு, கொழும்பு 13.


**மல்லிகை ஆண்டுச் சந்தாதாரராகச் சேருபவர்கள் கவனத்திற்கு....**



**ஆண்டுச் சந்தா 600/-**
**தனிப்பிரதி 40/-**
**ஆண்டு மலர் 200/-**

**ஓராண்டுச் சந்தாவுக்குக் குறைந்தது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.**

வங்கித் தொடர்புகளுக்கு:

Dominic Jeeva 072010004231,- Hatton National Bank, Sea Street, Colombo - 11.

காசோலை அனுப்புபவர்கள் Dominic Jeeva எனக் குறிப்பிடவும். காசோலை அனுப்புவோர் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது. **Dominic Jeeva** என எழுதுவோர் இந்தப் பெயருக்கு முன்னாலோ பின்னாலோ வேறெதுவும் கண்டிப்பாக எழுதக் கூடாது. காசுக்கட்டளை அனுப்புபவர்கள் Dominic Jeeva, Kotahena, P.O. எனக் குறிப்பிட்டு அனுப்பவும்.

தனித்தனி இதழ்களைப் பெற விரும்புவோர் 5 பத்து ரூபா தபால் தலைகளை அனுப்பியும் பெற்றுக் கொள்ளலாம்.

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :**
201/4, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 13. தொலைபேசி : 2320721






# புதியதோர் வாழ்க்கை

-செங்கை ஆழியான்

பேராதனைப் பல்கலைக் கழகத்திற்கு நாங்கள் தெரிவானோம். மலைநாட்டின் பயங்கர அழகை நமக்குக் காட்டியபடி முக்கி முனகிக் கொண்டு புகையிரதம் விரைந்தது. அதிகாலைக்குரிய குளிர்காற்று வேகமாக உடலில் பட்டு, மெல்லிய நடுக்கத்தை உண்டாக்கியது. இரவு முழுவதும் கும்மாளமிட்டபடி பாடிச் சத்தமிட்டு வந்த பல்கலைக் கழகத்துக்குக் காலடி எடுத்து வைக்கும் மாணவர் கூட்டம் கண்டிக்குச் செல்லும் புகையிரதத்தில் பொல்காவலையில் ஏறியதும் பெட்டிப்பாம்பாக அடங்கிவிட்டது. என்னுடன் என் கொம்பாட்மென்றில் மாணவர் பலர் இருந்தனர்.

எல்லோரது முகங்களிலும் கொலைக்களத்துக்குச் செல்கின்ற உணர்வு.

நான் இதற்கு விதிவிலக்கல்ல. யன்னலில் முகத்தைப் பதித்தபடி மலைச்சாய்வின் செங்குத்துச் சாய்வில் வெண்புகை திரையாகப் படர்ந்திருக்கின்ற அழகைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அதள பாதாளத்தில் வெள்ளிப் பாதரசமாக சிற்றாறு ஒன்று நெளிந்தது. இவற்றை இரசிக்கின்ற மனநிலை எனக்கில்லை. பல்கலைக்கழகத்தில் எதிர் கொள்ளப் போகின்ற றாக்கிங் என்ற கொடூரத்தின் பயமிருந்தது. இருந்தாற்போல எங்கள் கொம்பாட்மென்றில் பரபரப்பு ஏற்பட்டது.

"சரசவி உயன வந்துவிட்டது."

இனிய கனவுகளோடு பைகளைப் பற்றிக் கொண்டு, சரசவி உயன என்ற பல்கலைக்கழக புதிய புகையிரத நிலையத்தில் இறங்கினோம். சூட்கேசுகள், காட்போட் பெட்டிகள் என்பன இறக்கப்பட்டன. நான் முதன் முதலாக லோங்ஸ் அணிந்து சப்பாத்துப் போட்டிருந்தேன். சப்பாத்து வேறு பாதங்களை வெட்டியது. கூற்றிலை எப்படியாவது சுகமாக இருக்கும் என எண்ணிக்கொண்டேன். அது ஒரு சிறிய ஸ்டேசன். எல்லோருக்கும் கார் கிடைக்கவில்லை. பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு நடக்கத் தொடங்கினோம்.

நாங்கள் வந்து கொண்டிருந்த வீதியின் வலது பக்கத்தில் விளையாட்டு மைதானம் பச்சைக் கம்பளமாகக் காட்சிதந்தது. தொழிலாளர் சிலர் வளைவான கத்தி கொண்டு புல் வெட்டிக் கொண்டிருந்தார்கள். வீதியின் இடது பக்கத்தில் உயர்ந்த கட்டிடங்கள் காணப்பட்டன. நாங்கள் வந்து கொண்டிருந்த வீதி கலஹா வீதியில் ஏறியது. அச்சந்தியில் பலர் நின்றார்கள்.

"சீனியோஸ்..... தொலைந்தோம்....."

"வாருங்கோ.. வாருங்கோ..." என வரவேற்பு எழுந்தது. வரவேற்பில் இருந்தது உணர்ச்சி நக்கல்.

''எல்லாரும் வரிசையசக நில்லுங்கோ.. பிளடி பிறெசஸ்..... உன் பெயரென்ன?'' என்று தாடிக்காரன் ஒருவன் கேட்டான்.

''சிவராசா''

'':சிவராசனோ?.. நீ எப்படியடா சீனியர் ஒருவனின் பெயரை வைத்திருக்கலாம். உடனே பெயரை மாற்றிக் கொள்..''

''சரி..''

''சரி சேர் எண்டு சொல்லு....''

''சரி சேர்....''

''அதென்ன நீ சப்பாத்துப் போட்டிருக்கிறாய். கழட்டு.. சீனியர்ஸ் முன் போடக் கூடாது.. தெரிஞ்சுதா?''

இதைத்தான் நான் நீண்ட நேரமாக எதிர் பார்த்தேன். பாதங்களை வெட்டிஎ சப்பாதத்தைக் கழற்றி லேஸ்களை ஒன்றாக்கி தோளில் மாட்டிக் கொண்டேன். பாதங்களுக்கு விடுதலை. கோபா லரத்தினம் சிரித்து வைத்தான்.

''ஒருத்துரும் சிரிக்கவில்லை.. நீ மட்டும் சிரிக்கிறாய்? உன்ரை பெயர் என்னடா?''

''கோபர்லரத்தினம்.. நான் மட்டுமல்ல அவயளும் சிரிச்சவை......''

''எவையள்?''

''பொம்பிளைப் பிற்ளையள்.''

''சிரிக்கட்டும்.. அவை வாழ்க்கையில சிரிக்கிற காலம் குறைவு. நல்லாச் சிரிக்கட்டும்.... அழவென்றே பிறந்த சாதி....'' என்றான். ''நீர் வந்த உடனேயே பொம்பிளையளைப் பார்க்கத் தொடங்கிவிட்டீர்? இவரை மெதுவாகத் தூக்கி பொண்டில போடுங்க....''

அச்சந்தியில் சிறியதொரு நீர்த்தேக்கம் அழகிற்காகக் கட்டப்பட்டிருந்தது. முழு அசுத்தம். கோபாலரத்தினத்தைக் கதறக்கதற அதில் தூக்கிப் போட்டார்கள்.

''நீந்தடா....!''

திக்குமுக்காடியபடி கோபால் எழுந்து நின்றான். பொலபொலவெனக் கண்களிலிருந்து நீர் பொங்கியது.

''இனிமேல் எந்த பிரஷேசாவது பெட்டை யளைப் பாப்பியளா? இந்தமுறை வந்திருக்கிற பெண்கள் சீனியர்சுக்குரியவர்கள். அவர்கள் காதலித்த பின்னர் தான் நீங்கள் காதலிக்க வேணும்.'' என்று தாடிக்காரன் பிரசாரம் செய்தான்.

''உமக்கு என்ன பேர்?'' என்று ஒரு பெண்ணிடம் ஒருவன் கேட்டான்.

''மிஸ் கனகப்பு....''

''நான் வடிவா இருக்கிறேனா? நாங்கள் காதலிப்போமா?''

அந்தப் பெண்ணின் விழிகள் கலங்கின. நிலத்தைப் பார்த்தபடி நின்றாள். இவர்களை நம்பித்தான் நாளைய இலங்கை இருக்கப் போகிறது. இவர்கள் சகோதர சகோதரிகளோடு பிறக்கவில்லையா?

''அது சரி அழாதையும்.....'' என்றான் தாடிக்காரன். அவன் பார்வை என்னில் திரும்பியது.

''டேய் உன் பெயர் என்ன?'' உறுமினான்.

''குணராசா'' என்றேன். என் பின்னால் நின்றவன் அவசரப்பட்டு, ''என் பெயர் தெய்வசிகாமணி, பொடியா....''என்றான்.



இப்பதில் பழைய மாணவனின் கோபத்தைக் கிளறிவிட்டது.

''பிளடி பிறேசெஸ்.....''

''பிளடி சினியோர்ஸ்..'' என்றான் தெய்வசிகா மணி. எல்லாரும் ஒரு கணம் திகைத்துப் போனார்கள். என்ன நடக்கப் போகிறதோ?

''இவனை'' என்று மூத்தமாணவன் சொல்வதற்கு இடையில் நீர்ப் பொன்டுக்குள் சிகாமணி பாய்ந்தான். நன்றாக முழுகி எழுந்து, ''இன்னமும் ஏதாவது செய்ய வேண்டுமே?'' என்றான்

''எல்லாரும் இந்தப் பொன்டுக்குள் நீராடுங்கள்.''

சொன்னபடி நடந்தது.

''எல்லாரும் தங்கள் பெட்டிகளைத் தூக்கித் தலையில் வைத்துக்கொள்ளுங்கள்... பல்கலைக் கழகத்தில் முழு மீசை வைக்கக் கூடாது. றேசரோடு ஸ்ரீ வந்திருக்கிறார். ஆண்கள் எல்லா ரும் ஒரு பக்க மீசையை வழித்துக் கொள்ளுங்க.''

''எனக்கு மீசை இல்லை....'' என்றான் சிகாமணி

''கறுவல் தடியா..... உனக்கிருந்தாலும் தெரியாது.....''

''இவர் மீசைகள் மட்டும் தான் எடுப்பாரா?''

''டேய் யோக்கர்.....பேசாதிரு..... ரூ மச்...... எல்லாரும் இப்ப போகலாம். பேந்து சந்திப்போம்....''

''இதுவா பல்கலைக்கழகம்...?'' என எண்ணிக் கொண்டேன்.

நானும் சில நண்பர்கனும் தங்கவேண்டிய மார்க்கஸ் பெர்னாண்டோ மண்டபம் ஒரு குன்றின் உச்சியைத் தட்டையாக்கி அதில் அமைத்திருந் தார்கள். இம்மண்டபத்திலிருந்து பல்கலைக்கழ கத்தின் பெரும்பாலான பகுதி களைப் பார்க்க முடியும். பல மாணவ விடுதிகள் எங்கள் மண்டபம் போலவே அமைக்கப்பட்டி ருந்தன.

தூரத்தில் மகாவலி கங்கை மெல்லென அசைவது தெரிந்தது. மூங்கில் மரங்கள் பற்றையாக வளர்ந்திருந்தன. இம்மண்டபத்தில் எனக்கும் கோபாலுக்கும் கீழ் மாடியில் 11 இலக்க அறை தரப்பட்டன. சீனியோர்ஸ் மேல் மாடியில் இருந்தனர்.

யாழ்ப்பாணத்தின் சுற்றாடலில் வாழ்ந்து பழகி விட்ட எனக்குப் பல்கலைக்கழகத்தின் சூழல் திகைப்பையும் பயத்தையும் ஏற்படுத்தின. மொழியால் வேறுபட்ட இரு இன மக்கள் இங்கி ருந்தனர். 1956 இனக்கலவரம் முடிந்திருந்த சூழலில் 1958 இல் வந்திருந்தோம். உள்ளூரப் பயமிருந்தது. இரு இனங்களிடையேயும் சகிப்புத் தன்மை நிலவாத காலம்.

ஒரு வாரம் முழுவதும் பழைய மாணவர்க ளின் றாக்கிங் தொல்லை நிகழ்ந்தது. சாப்பிடச் சென்றால், குளிக்கச் சென்றால் றாக்கிங் தொல்லை. பிறசை எப்படிப் பாவிக்கவேண்டும். வைக்கவேண்டும் என்று காட்டித்தந்தார்கள். பாத் ரூமில் பூட்டிவிட்டு ஒட்டுத் துணியில்லாமல் குளிக்கச் செய்தார்கள். சீனியோர்ஸ் குளிக்கப் போகும்போது அவர்கள் பின்னால் துவாயும் சோப்பும் காவிச்செல்ல வைத்தார்கள். ரை கட்டப் பழக்கினர்கள். முள்ளுக் கரண்டி பிடித்துச் சாப்பிடப் பழக்கினாகள். யோசித்துப் பார்த்தால் தொல்லையாக இருந்தாலும், அந்த றாக்கிங் நவீன சமூகத்தை எதிர்கொள்ள எம்மைத் தயாரித்துத் தான் தந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரை விமர்சனம்

# யதார்த்த வாழ்வைச் சித்திரிக்கும் 'அங்காடித் தெரு'

—ச. முருகானந்தன்

தமிழ்த் திரைப்படத்திற்கும் யதார்த்தத்திற்கும் இடையே பெரிய இடைவெளி இருப்பது தமிழ்த் திரையுலகின் சாபக்கேடாக இருந்து வருகிறது. கதாநாயகனுக்கு அதீத முக்கியத்துவம் கொடுப்பதும், வாய்ப்பாட்டு முறையிலான கனவுக் காட்சிகள், சண்டைக் காட்சிகள், உப்புச் சப்பற்ற நகைச்சுவை, டப்பாங்குத்து நடனம், ஆபாசத்தொனியில் பாடல்கள் என உண்மை வாழ்வுக்கு வெகு தொலைவில் இருக்கிறது. தொழில்நுட்ப ரீதியில் எவ்வளவோ முன்னேற்றம் கண்ட பின்னரும், பல திரைப்படங்கள், பார்வையாளரைப் பக்குவப் படுத்தாததுடன், வெறும் கையாலாகத் தனங்களிலேயே மூழ்க வைத்துள்ளன.

இத்தகைய வாய்ப்பாட்டு தனமான படங்களிடையே அவ்வப்போது சில வித்தியாசமான திரைப்படங்களும் வரத் தான் செய்கின்றன. கடந்த வருடத்தில் நான் கடவுள், அயன், ஈரம், நாடோடிகள், பேராண்மை முதலான சில படங்கள் வித்தியாசமானவையாக அமைந்திருந்தன. இவற்றில் சில படங்கள் பிரபலங்களின் படங்களை விட வரவேற்பும் பெற்றன.

இவ்வருடம் சற்று வித்தியாசமான களத்தைத் தரிசிக்க வைத்த ஆயிரத்தில் ஒருவனுக்குப் பிறகு, இப்போது யதார்த்தமான வாழ்வை இயல்பாகச் சொல்லும் ஒரு திரைப்படமாக 'அங்காடித் தெரு' வெளிவந்துள்ளது. வசந்தபாலனின் இயக்கத்தில் விளிம்பு நிலை மக்களின் அவல வாழ்வைச் சொல்லும் இத்திரைப்படத்தில், புதியவர்கள் ஒரு கலக்குக் கலக்கியிருக்கிறார்கள் என்றால் அது மிகையாகாது. மகேஷ், அஞ்சலி நாயகன் நாயகியாக நடிக்கும் இப்படத்தில் 'ஏகப்' இன்றி படரும் நடித்திருப்பது இன்னொரு சிறப்பான அம்சம். தொழில்நுட்ப ரீதியிலும், ஒளி, ஒலி, இசை, எடிட்டிங், இயக்கம், நடிப்பு என எல்லாமே சிறப்பாகவும், இயல்பாகவும் இருக்கிறது. 'அவள் அப்படி ஒன்றும் அழகில்லை' பாடலின் இசையும் வரிகளும் மனதோடு ஒன்றி நிற்கின்றன. படத்தைப் பார்க்கும் போதும், படம் பார்த்து விட்டு வந்த பின்னரும் மனம் உருகித் தவிப்பதுடன் மனதில் இச்சமூகம் பற்றி ஆயிரம் கேள்விகள் எழுகின்றன.

நகரிலுள்ள பிரபலமான அங்காடித் தெருவில் அமைந்துள்ள பலமாடி அடுக்குக் கொண்ட ஒரு புடவை விற்பனைக் கடையில் நடக்கும் கதை. புடவைக் கடை உரிமையாளரின் சுரண்டலும், அடாவடித்தனமும் அங்கு பணிபுரியும் தொழிலாளர்கள் படும்



அவலமும், படத்தின் கதைப் பொருளாக அமைந்துள்ளது. அங்கு பணிபுரியும் நாயகன், நாயகியின் யதார்த்தக் காதலினூடே, யதார்த்தமாகப் புதிய ஒரு களத்தில் கதை நகர்ந்து செல்கிறது. சினிமாவின் முதன்மை அம்சம் காட்சிப்படுத்தலே என்ற புரிதலுடன் கதை நகர்த்திச் செல்லப்பட்டாலும், வசனங்களும் தேவைக்கு ஏற்ப நிறையவே இருக்கின்றன. உரையாடல் சில வேளை புரிதலின்றி இருத்தல் குறைபாடாக இருக்கின்றது. புதுமுகங்கள் என்று சொல்ல முடியாதளவு நடிகர்கள் அற்புதமாக நடித்துள்ளார்கள். வசந்தபாலனின் கைவண்ணம் நடிகர்களிலும் பிரபலிக்கிறது. நன்றாகவே செதுக்கப்பட்டுள்ளார்கள். உணர்ச்சி பூர்வமான காட்சிகள் பல நெஞ்சில் ஈரக் கசிவை ஏற்படுத்துகின்றன.



நாம் இதுவரை அறியாத, கடைத் தொழிலாளர்களின் அவல வாழ்க்கை தரிசனமாக்கப்படுகிறது. உணவு, உறையுள் எல்லாமே எவ்வளவு மோசமாக இருப்பதையும், காலை முதல் நள்ளிரவு வரை உழைக்கும் அவலமும், அவர்கள் அடிமைகள் போல் அடக்கியாளப்படுவதும், சமயங்களில் துன்புறுத்தப்படுவதும் உருக்கமாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. மறுபுறம் தொழிலாளர்கள் தமது குடும்ப வறுமை காரணமாகத் தொழிலை உதறவும் முடியாமல் அவஸ்தைப்படுவதும், சகித்துக் கொள்வதும் மனதைத் தொடும்படி சொல்லப்படுகிறது. பெரும் எண்ணிக்கையிலான சிப்பந்திகளிடையே ஏற்படும் இயல்பான பிரச்சினைகளை அழகாகச் சொல்ல வசந்த பாலனுக்கு சபாஷ் போடலாம்.

திரைப்படம் உட்பட, கலை இலக்கியங்கள் பொழுது போக்கு மாத்திரமானவை அல்ல. அவை சமூகத்தின் வெளிப்பாடும் ஆகும். 'அங்காடித் தெரு'வும் சமூகத்தின் குறிப்பிட்ட ஒரு தளத்தைச் சித்திரிப்பதோடு, அச் சமூகத்தின் அவலங்களையும், தேவைகளையும் சித்திரிப்பதோடு தன்னம்பிக்கையையும் வளர்க்கிறது. பண முதலைகளுக்கென்றே அரசியல்வாதிகளும், பொலிசாரும் ஏன் அடியாட்களும் கூட ஒத்தாசையாக இருப்பதும் புட்டு வைக்கப்படுகிறது. சமூகப் பார்வையுடன் ஒரு சாரரின் பிரச்சினையையும், அதன் பல்வேறு பரிமாணங்களை அலசி, தெளிவுபடுத்துகிறது. மார்க்ஸ் அறும் அந்நிய மாதலை வெகுவாக இத்திரைப்படத்தில் உணர்கிறோம். இவ்வருடத்தில் ஒரு நல்ல படமாக 'அங்காடித் தெரு' தரிசனமாகியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஈழகேசரி' இராஜ அரியரத்தினம்

-செல்வி திருச்சந்திரன்

**சொ**ல்லும் செயலும் ஒன்றிணையும் பொழுது தான் ஒரு மாமனிதன் பிறக்க முடியும். சொல் வேறு செயல் வேறாக இருக்கும் புன்மை மனிதர்களிடம் இருக்கலாம். அவர்கள் மாமனிதர்கள் அல்ல. அம்மனிதர்கள் ஆசிரியர்களாக இருக்கலாம், பேராசிரியர்களாகவும் கூட இருக்கலாம், பண்டிதர்களாக இருக்கலாம், இலக்கியக் கர்த்தாக்களாக இருக்கலாம், அரசியல்வாதிகளாக இருக்கலாம். ஆனால், அங்கு இந்த சொல், செயல் ஒருங்கிணைந்த ஒருமைப்பாடில்லாவிட்டால் அவர்களுக்குப் பெருமை இல்லை. இப்பெருமை தான் தனக்கிருப்பதாகக் கொள்ளப்படுவதில்லை. ஆத்மாவின் வெளிப்பாடாகத் தொனிக்கும் இம்மானுடப் பெருமை ஏனையோரது ஆத்மாவின் வெளிப்பாடாக அவரைப் பற்றி முன் வைக்கப்படும் ஒரு கருத்தாக ஒருவரைப் பற்றிய வியாக்கியானமாக அவர்களது உள்ளுணர்ச்சியின் உறுத்தலாக இருக்கும். இப்படிப் பார்க்கப்படும் இந்தப் பாக்கியம் இவ்வுலகில் ஒரு சிலரையே அண்டும். போட்டி, பூசல், பொறாமை, சத்தியமற்ற வார்த்தை, மற்றவரைக் கீழே தள்ளி அதனால் பெறும் அற்பத்தனமான இன்பம், வாய்மொழி வன்முறை போன்றவை சாதாரண மானிடப் பண்புகளாகி விட்ட இந்நாட்களில் (இவை எந்நாட்களுமிருந்தன என்பதற்கு எமது வரலாறுகள் சான்று என்றலும் இவற்றை அங்கீகரித்து ஏற்றுக் கொண்டு ஒருவரைப் பெரிய மனிதர் என்று கூறுவது இப்போது சகஜமாகி விட்டது) **இராஜ அரியரத்தினம்** ஒரு மாமனிதர் என்ற சிறப்பைப் பெறுகிறார் என்பதில் ஐயமில்லை. ஒருவரது கருத்தியலை முற்றாக வரவேற்காதவர்கள் கூட, அம்மனிதர் பண்பானவர் என்று கூறும்படி வாழ்ந்தவர்கள் ஒரு சிலரே. முற்போக்கான கருத்தியல் கொண்டவர்கள் கூட, பண்பிழந்து தங்கள் வாழ்க்கைத் தடத்தை அமைத்துக் கொண்டால், அங்கு முற்போக்குக் கருத்தியல் வரவேற்கப்படலாம். ஆனால், அந்த மனிதரை அருவருப்புடன் தான் சமுதாயம் பார்க்கும். அதாவது ஏனையோரின் மனப்பாங்கின் அடித்தளத்தில் இந்த அருவருப்புணர்ச்சி தான் மேலோங்கும். நடைமுறையில் அவ்வுணர்ச்சியுடன் சமரசஞ் செய்தாலும், மனநிலையிலிருந்து அவ்வுணர்ச்சியை அகற்ற முடியாது. ஒரு சில நண்பர்களும் அந்தரங்கத்தில் அந்த அருவருப்புணர்ச்சியை வெளிப்படுத்தியே ஆவர். இதனால் முற்போக்கு வாதங்களி லேயே நம்பிக்கை இழக்கும் முற்போக்கு வாதிகளும் இப்பொழுது தோன்றுகிறார் கள். இராஜ அரியரத்தினம் எனது தந்தையிடம் நெருங்கிப் பழகியவர். வீட்டுப் பிள்ளை போல எந்நேரமும் வருவார். அரிய பல விடயங்களைக் கதைப்பார். அறிவுத் தளத்தில் உரையாடுவார். சிறுவயதில் இருந்து இச் சந்திப்புகளை அவதானித்த நான் இவர் ஒரு அரிய மனிதர், சிறந்த அறிவாளி என என்னுள்ளே ஒரு பதிவை ஏற்படுத்திக் கொண்டேன். அப்பதிவு காலம் செல்லச் செல்ல, வளர்ந்து கொண்மே சென்றது. **ஈழகேசரிப் பொன்னையா** என்று அழைக்கப்பட்ட நா. பொன்னையா யாழ்ப்பாணத்து வாலிபர் சங்கத்தின் தனாதிகாரியாக இருந்து, அதன் ஆங்கிலப் பத்திரிகையான கேசரியுடன் மிக நெருங் கிய தொடர்புடையவராக இருந்தவர். அப்பத்திரிகையின் பெயரையே தேசிய இதழாக மாற்றி ஈழகேசரி என்று தான் தொடங்கிய பத்திரிகைக்குப் பெயர் வைத் தவர். இலக்கியப் பணியையும் அறிவியல் பணியையும் அதனுடன் சேர்த்து தனலக் குமி புத்தகசாலையையும் சுன்னாகத்தில் நிறுவினார். இப்பாரிய பொறுப்பை வகிக்க இராஜ அரியரத்தினமே தகுந்தவர் என்று பொன்னையா அவர்கள் எடுத்த முடிவு மிகவும் சரியானது. அதன் பின் யாழ்ப்பா ணத்தில் ஈழகேசரியின் தாக்கம் எப்படிப் பட்டது என்பது இப்போது வரலாறாகி விட்டது. அப்பன் முகத் தாக்கம், இலக்கி யம், பத்திரிகை வளர்ச்சி, சிறுவர் இலக்கி யம், அரசியல் விமர்சனம் போன்றவற்றில் ஒரு கூர்மையான போக்கை ஆழமாகப் பதிந்து விட்டது என்பதை யாழ்ப்பாண வரலாற்றிலிருந்தும் வட இலங்கை வரலாற்றிலிருந்தும் மறைக்க முடியாது இருந்த இராஜ அரியரத்தினத்தின் ஆற்றல், கல்விப் புலமை, ஆங்கிலப் புலமை மட்டுமே காரணமாகாது. அவரது ஆளுமை, அவரது தனிமனிதப் பாங்கான பண்பு எப்படி மற்றவர்களை ஆகர்ஷித்தது என்பதைப் பலர் சொல்லி விட்டார்கள். எப்படி அவர் ஏனையோரை வளர்த்தார். எப்படித் தன் கொள்கைகளிலிருந்து நழுவாமல் சமரசம் செய்யாமல் தொடர்ந்து பணி செய்தார் என்பது பற்றிப் பலரின் பல சொல்லாடல்களின் மூலம் நாம் அறிகி றோம். அண்மையில் இலங்கையின் பத்தி ரிகைகளில் (வீரகேசரி, தினக்குரல், தின கரன்) வந்த அவர் பற்றிய கட்டுரைகள் இவ ற்றைத் தெளிவாக்கி யுள்ளன.

அவர் காலமான செய்தியை மிக அண்மையில் கேள்விப்பட்ட பொழுது அவரைப் பற்றிய பல எண்ணக் கருத்துகள் என்மனதில் தோன்றின. அவர் இலக்கியக் கர்த்தா. அவரது **வெள்ளம்** என்ற சிறுகதை இதற்குச் சான்று. நல்ல ஒரு சிறுகதை யென இது ரஷ்யமொழியில் மொழி பெயர்க்கப்பட்டது. சிறந்த பத்திரிகையா சிரியர் வாழ்க்கையின் நிஜங்கள், சமயங் கள், பிரச்சினைகள் என்று சிறுகதைகள், நாவல்கள் மண்வாசனையுடன் வெளிவரத் தொடங்கியது, ஈழகேசரியிலேயே என்பது மிகைப்பட்ட வாதம் அல்ல. இதற்கு- இம் முயற்சிக்கு ஆதார சுருதி இராஜ அரியரத் தினம் களமாகவும் தளமாகவும், வடிகாலா கவும் ஈழகேசரியை அமைத்துக் கொடுத்த வர். இதே பணியைத் தொடர்ந்து **ஈழநாடு,**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிந்தாமணி** என்ற பத்திரிகைகள் மூலமும் தொடர்ந்தார். தேசியவாதியாகத் தன்னை இனம் காட்டிக் கொண்டார். நடை, உடை பாவனை மூலம் குறுகிய வக்கிரங்களி லிருந்து, இலஞ்சம் போன்றவற்றிலிருந்து விலகி விலகல் மனப்பான்மையை வளர்ந் தவர். இதற்கு அவரது ஆழ்ந்த அகன்ற வாசிப்புத் துணை புரிந்தது. பத்திரிகையை வணிக நோக்கில் விற்பதற்கு ஆபாசம் மருவிய எழுத்துகளையோ கிடு கிடு பரபரப்பையோ கிளு கிளுப்புச் செய்தி களின் துணையையோ நாட மறுத்தவர். பாங்கான செம்மை நிறைந்த செப்பமிட்ட பக்கங்களாகவே அவரது பத்திரிகைகள் தோன்றி மறைந்தன. ஒருவரது அறிவுத் திறத்திற்குச் சாட்சியாக இருப்பவை கலைக் களஞ்சியத்திற்கு அவர் இலங்கை பற்றி எழுதிய விளக்கங்களும் சிறுகட்டுரைக ளும். அவரது சிறந்த பணிகளில் ஒன்றாக இலக்கியக் கர்த்தாக்களால் ஒருங்கே இனங்காணப்பட்டது. அவரது திறமை கண்டு இளைஞர்களை திறமை காணத் தூண்டிய செய்கை எழுத்தாளர்களை அழைத்து ஊக்கமும் உற்சாகமும் நல்கி அவர்களை வளர்த்தெடுத்ததில் அவரது பங்கு கணிச மானது. அதை நாம் கட்டாயமாக நினைவு கூர்ந்து, அதற்குரிய மதிப்பை வழங்க வேண்டும். அவரது அரசியல் விமர்சனம் தீர்க்க தரிசனப் பண்பைக் கொண்டிருந் ததை அந்தக் காலத்தில் பலர் சிலாகித்துப் பேசியுள்ளனர். இப்பொழுது அவரைப் பற்றி நான் எழுதும் பொழுது கூட எனக்குள் அங்கலாய்க்கும் ஒரு கருத்து உண்டு. இவ்வளவு சிறப்பம்சங்கள் பொருந்திய ஒரு மனிதரை இலங்கைத் தமிழ் உலகம் பூரணமாகப் பயன்படுத்தி உள்ளதா? அவரது ஆளுமையும் பண்பும் ஏனைய போரை அடைந்து பெற்பட போதிய அளவில் சந்தர்ப்பங்களும் சூழ்நிலையும் அவருக்கு சாதகமாகத் தொழிற்பட்டனவா? கடைசிக் காலத்தில் எம்மை விட்டு, எம் நாட்டை விட்டு அந்நிய நாட்டில் வேலையை திருப்தியுடனும் சந்தோஷமாகவும் அவர் இருந்திருப்பார். இது என்னுள்ளே எழும் விடை தெரியாத தெரிந்த கேள்வியாக இருக்கிறது. இந் நிலை வேறும் பல மேதா விகளுக்கு ஏற்பட்டுத்தான் இருக்கிறது. என்றும் நாம் சமரசம் செய்ய முடியாது என்ற வாக்கியத்துடன் இச் சிறு கட்டு ரையை முடித்துக் கொள்கிறேன். இராஜ அரியரத்தினத்தின் கதையும் எம் சமகால இருப்புகளுக்கு ஒரு துர்ப்பாக்கியமான ஒன்று.

**புத்தாண்டுச் சந்தா செலுத்தி விட்டீர்களா?**

புதிய ஆண்டு பிறந்து, ஐந்து மாதங்களாகி விட்டன. தயவு செய்து தமது சந்தாக்களைப் புதுப்பித்துக் கொள்ளவும்.

மனம் திறந்து மல்லிகையுடன் ஒத்துழையுங்கள். ஏனெனில் மல்லிகை உங்கள் ஒவ்வொருவரினதும் இலக்கியக் குரலாகும்.

அசட்டை செய்வோருக்கு முன்னறிவித்தலின்றி இதழ் நிறுத்தப்படும்.

-ஆசிரியர்



பொது நூலகம்
யாழ்ப்பாணம்.

# சர்வதேச தமிழ் எழுத்தாளர் ஒன்றுகூடலின் செயற்திட்டம்

(முரண்பாடுகளுக்கு அப்பால் தூரநோக்குப் பார்வையுடன் இயங்குவதற்கான களம் உருவாக்கப்படும்.)

**-முருகபூபதி**

தமிழ் கலை இலக்கியம், ஊடகம், மொழிபெயர்ப்பு, பதிப்புத்துறை, ஆவணப்படுத்தல் சார்ந்து 2011 ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெறவுள்ள சர்வதேச தமிழ் எழுத்தாளர் ஒன்றுகூடல் தொடர்பாக மேலும் சில விளக்கங்களை அறிவிக்கும் முகமாக இந்த ஆக்கத்தை எழுதுகின்றேன்.

ஏற்கனவே இந்த ஒன்றுகூடல் தொடர்பாக 12 அம்சங்களைக்கொண்ட யோசனைகளை முன்வைத்து கலந்துரையாடலை நிகழ்த்தியிருக்கின்றோம். எனினும் சில ஊடகங்களும் அறிஞர்களும் தொடர்ந்த [illegible] இலங்கை வரும் படைப்பாளிகள் [illegible] ஒன்றுகூடல் தமிழகத்தில் [illegible] வேண்டும் என்று [illegible] பணிகளில் [illegible] ஆக்க இலக்கியவாதிகள் [illegible] கொள்வதில்லை [illegible] இலக்கியப் [illegible] ஆக்க இலக்கியத் துறைகளில் [illegible] நாம் இந்த ஒன்றுகூடல் [illegible] தெரிவிக்க [illegible] சர்வதேச ஒன்றுகூடல் பற்றிய சிந்தனை [illegible].

எந்தவொரு [illegible] 'புனைக்கு [illegible]' என்ற விவாதத்திலேயே [illegible] அறிந்திருந்த கருத்து முரண்பாடுகள், அரசியல் சித்தாந்த வேறுபாடுகள் [illegible] நிலையில் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் [illegible] அறியாததை அறிந்துகொள்ளல் என்ற நோக்கத்துடன் இச்சர்வதேச ஒன்றுகூடல் ஒழுங்குசெய்யப்படுகின்றது.

இதனை தமிழர்கள் வாழும் எந்த ஒரு தேசத்திலும் நடத்தலாம். அதற்கு [illegible] பின்னர் [illegible] முதலாவதிலிருந்து [illegible] சிந்தனை [illegible] கலை, இலக்கியம், ஊடகம், மொழிபெயர்ப்பு [illegible] காட்சிப்படுத்தல், ஆவணப்படுத்தல், பதிப்பு [illegible] நிகழ்ச்சி நிரலுடன் 2011 இல் ஒன்றுகூடல் [illegible] நடைபெறவுள்ளது.

ஆக்க இலக்கியப் படைப்பாளிகள் மாத்திரந்தான் இலக்கியவாதிகள் என்று எந்த ஒரு [illegible] நாம் குறிப்பிடவில்லை. இந்தப்பணியில் சிறுகதை, நாவல், கவிதை, விமர்சனம், [illegible] இலக்கியம், மொழிபெயர்ப்பு, நாடகம், கூத்து, இசை, நடனம், ஓவியம், நாடகக்கலை, ஆவணப்படுத்தல், பதிப்பு, சிற்றிதழ், அறிவியல், [illegible] கல்வி [illegible] தமிழின் சிறந்த [illegible] அனைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைகளிலும் ஈடுபடுபவர்கள் பங்கேற்கும் ஆரோக்கியமான ஒன்றுகூடலாகத்தான் நிகழ்ச்சி நிரல் வடிவமைக்கப்படும். நூலகம் மற்றும் கல்விப்பீடங்களில் பணியாற்றுபவர்களும் இதில் பங்கேற்பர்.

இந்தத்துறைகளில் ஈடுபாடுள்ளவர்களின் அனுபவங்கள் பகிரப்படும்போது பயன்பாட்டின் கனதி புரிந்துகொள்ளப்படும். எழுத்துத் துறைக்கு வந்து மாற்றுக்கருத் துக்களினால் முரண்பட்டு பகைமை பாராட்டிக் கொண்டிருப்பவர்களிடம் இறுக்கம் தளர்ந்து குறைந்தபட்ச புரிந்துணர்வும் ஏற்படும் என்பதும் எமது நம்பிக்கை.உரையாடல் இடைவெளி தவிர்க்கப்படுவதன் மூலம் தப்பபிப்பிராயங்கள் களையப்படலாம்.

தற்காலத்தில் நாம் கணனி யுகத்தில் வாழ்ந்துகொண்டிருப்பதனால் மூத்த, இளம் தலைமுறையினர் நாம் மேலே குறிப்பிட்ட அனைத்து துறைகளிலும் தீவிரமாக இயங்குவதையும் அறியமுடிகிறது. குறிப்பாக மின் புத்தகங்களின் வரிசையில் ஏராளமான தமிழ் நூல்களை பதிவு செய்திருப்பவர்கள், வலைப்பதிவுகளை இயக்குபவர்கள், நூலகம் பவுண்டேசன் ஊடாக தீவிரமாக செயல்படுபவர்கள், சிற்றிதழ்களை நடத்துபவர்கள், வருடக் கணக்காக பல்வேறு சிரமங்களுக்கும் மத்தியில் நூல்களைப் பற்றிய விபரங்களை தனித்தனி தொகுதிகளாக பதிவுசெய்து நூல் தேட்டம் தொகுப்புகளை வெளியிட்டுவரும் லண்டன் நூலகர் செல்வராஜா, இவர்கள் எம்மவர் என்ற வரிசையில் ஏராளமானவர்களைப் பற்றிய விபரங்களை ஆவணமாக்கிவரும் புன்னியாமீன் போன்றவர்களின் பணிகள் பற்றியும் சர்வதேச ஒன்றுகூடலில் விவாதிக்கப்படும், உரையாடப்படும்.

எனவே ஆக்க இலக்கியவாதிகள் மாத்திரம் பங்கேற்கும் ஒன்றுகூடல் அல்ல என்ற தெளிவை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றோம். அங்கீகாரங்கள் குறித்து நிறைய விவாதங்கள் தொடருகின்றன. பட்டியல் விமர்சனங்களினால் மனம் நொந்துள்ளவர்கள் மௌனமாக குமுறுகிறார்கள். அளவுகோல்களை வைத்துக்கொண்டு புறக்கணிப்புக்கள் நீடிப்பதனால் அங்கீகாரத்துக்கு ஏங்குபவர்களும் வாடுகிறார்கள். இந்தச்சூழலுக்குள் குளிர்காயும் சில பதிப்பகங்கள் செம்மைப்படுத்தல் ஏதும் இன்றி படைப்பாளிகள் மீது சவாரி செய்கின்றன.

இந்தியாவில் தமிழகத்தில்தான் இந்த ஒன்றுகூடல் நடத்தப்பட்டிருக்கவேண்டும் என்று சிந்திப்பவர்கள், முதலில் கண்ணீரும் இரத்தமும் சிந்தி தமிழை வளர்த்துவருபவர்களையும் சொந்தத் தாய்மண்ணில் வாழ முடியாமல் உலகெங்கும் ஏதிலிகளாகி முகவரி தேடியவாறு தமிழ் கலை, இலக்கியத்தை பனிக்குளிருக்கும் கோடை வெப்பத்துக்குள்ளுமிருந்து வெளிப்படுத்திக் கொண்டிருப்பவர்களையும் சற்று விழியுயர்த்திப் பார்க்க வேண்டும்.

நாம் மேலே சுட்டிக் காண்பித்த தமிழ் சார்ந்த துறைகளில் ஈடுபடுபவர்களின் மானசீகமான ஆதரவு மற்றும் பொருளாதார பங்களிப்புடன்தான் சர்வதேச ஒன்று கூடல் நடைபெறவிருக்கிறது. எந்தவொரு அரசு சார்பு நிறுவனத்திடமிருந்தும் நிதிவளம் பெறாமலேயே இந்தப்பணி முன்னெடுக்கப்படுகிறது.

இலங்கையில் வெளியாகும் தமிழ் ஊடகங்கள் மற்றும் இலக்கிய சிற்றிதழ்கள் இதற்கு அனுசரணை வழங்கும் என்ற நம்பிக்கையுடனேயே செயலில் இறங்கியுள்ளோம்.ஏழுநாட்கள் கொழும்பில் நடைபெறவுள்ள இந்த ஒன்றுகூடலின் நிருவாகப்பணிகளுக்காக பின்வருவோர் தெரிவாகியுள்ளனர். அவர்களின் விபரம் வருமாறு:- ஞானம் ஆசிரியர் டொக்டர் தி. ஞானசேகரன், மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா, பூபாலசிங்கம் ஸ்ரீதரசிங், தெளிவத்தை ஜோசப், செங்கை ஆழியான், சட்டத்தரணி சோ.தேவராஜா, வசந்தி தயாபரன், திக்குவல்லை கமால், பேராசிரியர் மௌனகுரு, மேமன்



கவி, சட்டத்தரணி ராஜகுலேந்திரன், லெ.முருகபூபதி.

இந்த சர்வதேச ஒன்றுகூடலின் பிரதான அமைப்பாளர் முருகபூபதியினால் கடந்த ஜனவரி மாதம் குறிப்பிட்ட நிருவாகக்குழு தற்காலிகமாக அமைக்கப்பட்டது. சர்வதேச தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் (International Tamil Writers Forum) என்ற பெயரில் இயங்கும் இந்த அமைப்பின் அமைப்பு விதிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. விரைவில் வங்கிக் கணக்கு விபரங்கள் அறியத்தரப்படும். இலங்கை மற்றும் வெளிநாடுகளிலிருந்து ஒன்றுகூடலில் ஆர்வமுள்ள அன்பர்களிடமிருந்து நிதியுதவி பெறப்பட்டு பணிகள் முன்னெடுக்கப்படும்.

பச்சைத் தண்ணீரில் பலகாரம் பொரிக்கும் வித்தை தெரியாத நாம், பலரதும் ஆதரவு, அனுசரணையுடனேயே செயல்படுவோம். எந்தவொரு பொது வேலைத்திட்டமும் முறையான நிருவாகத்தின் அடிப்படையிலேயே உருப்படியாக இயங்கும். தற்போது இடப்பட்டுள்ளது அத்திவாரமே. இதிலிருந்து புரிந்துணர்வு மிக்க தமிழ் கலை, இலக்கியம் சார்ந்த பணிகளை சர்வதேச தூர நோக்குப் பார்வையுடன் முன்னெடுப்போம். கருத்துக்கள், பங்களிப்புகள் வரவேற்கப்படுகின்றன.

ஒன்றியத்தில் உறுப்புரிமை, அங்கத்துவம் பற்றிய விபரங்களை ஒன்றியத்தின் தற்போதைய நிருவாகக்குழு விரைவில் அறியத்தரும். இலங்கையில் 2011 ஆம் ஆண்டு நடைபெறும் ஒன்றுகூடலின் பின்னர், காலத்துக்குக்காலம் தெரிவாகும் சர்வதேசக்குழு மற்றும் தேசியக்குழுக்கள் பற்றிய தீர்மானங்கள் ஆராயப்படும். தற்சமயம் ஒன்றியத்தின் தொடர்பாளராக டொக்டர் தி.ஞானசேகரன் இயங்குகின்றார்.

நடைபெறவுள்ள ஒன்றுகூடலில் சில நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து வடிவமைக்கும் பணிகளில் ஈடுபடுவதற்கு சிலர் முன்வந்துள்ளனர் அவர்களின் விபரம் வருமாறு:

1.டொக்டர் தி. ஞானசேகரன் - செவ்வி தாக்கம் (படைப்புகளில் செம்மைப்படுத்தல்)
2.மேமன் கவி - வலைப்பதிவுகள்,
3.நூலகர். என்.செல்வராஜா- ஆவணமாக்கல்.
4.சிறுவர் இலக்கியம் - ஓ.கே.குணநாதன்
5.கூத்து - பேராசிரியர் மௌனகுரு.
6.இலக்கிய சிற்றிதழ்கள் - அந்தனிஜீவா
7.பிரதேச இலக்கியம்- தெளிவத்தை ஜோசப்.
8.தமிழ்-சிங்கள இலக்கியப்பரிவர்த்தனை. – திக்குவல்லை கமால்.

மேலும் சில நிகழ்ச்சிகளை வடிவமைக்க வேண்டியிருப்பதனால் தாம் ஆர்வம் காண்பிக்கும் துறைகள் சார்ந்தவர்கள் தொடர்பு கொள்ளலாம். தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை புறம் ஒதுக்கிவிட்டு, நிகழ்ச்சிகளில் கட்டுரை சமர்ப்பிக்க அல்லது பயிற்சிப் பட்டறைகள் நடத்த விரும்புவோர் இவர்களுடன் அல்லது தொடர்பாளருடன் உரையாடலாம். மேலதிக விபரங்களுக்கு: 011 2586013 (இலங்கை)

அல்லது 00 61 3 9308 1484 (அவுஸ்திரேலியா) ஆகிய தொலைபேசி இலக்கங்களில் தொடர்புகொள்ளலாம். மின்னஞ்சல்: international.twfes@yahoo.com.au

சர்வதேச ஒன்றுகூடலில் பங்கேற்கவும், கருத்தரங்குகளில் கட்டுரை சமர்ப்பிக்கவும் விரும்புவோர் தபாலில் தொடர்பு கொள்ள முகவரிகள்:
3 B, 46th Lane, Colombo-06 அல்லது, P.O.Box 350, Craigie burn, Victoria-3064, Australia

**செய்திமடல் - 2.**

## சர்வதேச தமிழ் எழுத்தாளர் ஒன்றுகூடலுக்கு சில ஆலோசனைகள்

-முருகபூபதி

தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் இலங்கை உட்பட சர்வதேசம் பூரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் பரவி வாழ்ந்து கொண்டிருக்கும் படைப்பாளிகளை ஒன்று கூடச் செய்யும் நிகழ்வை இலங்கையில் 2011 ஆம் ஆண்டு ஜனவரியில் நடத்தவிருக்கும் தகவல் அறிந்த பலர் மின்னஞ்சல் ஊடாகவும் கடிதங்கள் வாயிலாகவும் உற்சாகமூட்டும் வார்த்தைகளையும் ஆலோசனைகளையும் தெரிவித்து வருகின்றனர்.இதனை பகிர்ந்து கொள்வதற்காக இந்த ஆக்கத்தை இங்கு பதிவு செய்கின்றேன். சர்வதேச ஒன்றுகூடல் தனிமனித ஒருகைஓசை அல்ல என்பதையும் இதன் மூலம் நிறுவமுடிகிறது.

## வாழைச்சேனையிலிருந்து எழுதும் இத்ரீஸ்:-

இலங்கையில் இவ்வாறான ,விழா ஒன்றின் தேவை பலராலும் உணரப்படுகிறது. சமூகங்களுக்கிடையிலான உரையாடலை வளர்த்தெடுப்பதற்கு இம்மகாநாடு நகர்வது காலத்தின் தேவையாகப்படுகிறது. எழுத்தாளர்களின் சமூகப்பெறுமானம் இதனால் உறுதிப்படுத்தப்படும். மேலும் வாசகர் பதிப்பாளரை எழுத்தாளருடன் இணைக்கும் நிகழ்ச்சிகளையும் இதில் சேர்த்துக் கொள்ளலாம்.

## பிரான்ஸில் வதியும் வி.ரி.இளங்கோவன்

விழாவின் நோக்கங்கள் பாராட்டுக்குரியவை. ஈழத்து நூல்களை சேகரித்து ஒவ்வொருநாட்டிலும் குறைந்தது ஒரு நூல் நிலையமாவது நிறுவ உதவுவது நல்லதென நினைக்கின்றேன். இதனைத் தமிழர்கள் புலம்பெயர்ந்துவாழும் நாடுகளில் இயங்கும் பொதுநூல் நிலையங்களில் ஒரு அங்கமாகவோ தனியாகவோ நிறுவலாம். எம் எதிர்காலச் சந்ததியினரின் வாசிப்புத் திறனை ஊக்குவிக்க இது உதவலாம்.

வத்தளையிலிருந்து எழுத்தாளர் எஸ். ரஞ்சகுமார் நீண்ட இரண்டு மின்னஞ்சல்களை எமது பார்வைக்கு அனுப்பியிருக்கிறார். அதிலிருந்து குறிப்பிடத்தகுந்த சில பகுதிகள்:-

இதர நாடுகளிலும் மொழிகளிலும் எப்போதோ நிகழ்த்தப்பட்ட இச்செயற் திட்டங்கள் இப்போதாவது எங்களிடையே தொடங்கப்படுவதற்கான முயற்சிகள் ஆரம்பிப்பதையிட்டு மகிழ்ச்சி. இவை செயற் படுத்தப்படும் போது கட்சியாடல்க ளும்...'அரசியல் சித்து விளையாட்டுகளும்' நிகழும் என்பது உண்மையேயாயினும் அவற்றை கவனத்தில் எடுக்காது நமது கருமமே கண்ணாக இவை கட்டாயம் செய்யப்படவேண்டும்.

முக்கியமாக புதிய தலைமுறையை அடையாளம் கண்டு முன்னிறுத்தவேண்டிய தேவை இப்போ உக்கிரமாக உணரப்படுகிறது. பலமான படைப்பாளிகள் அமைப்பு ஒன்று இன்றைய காலத்தின் கட்டாயத் தேவை. உங்களது இந்த முயற்சியிலிருந்து அதற்கான முளைகள் அரும்பலாம்.

மௌனமாக இருந்ததன் பயனை அனுபவித்தாயிற்று. இனியாவது குரல்கள் அச்சமற்று எழவேண்டும். இந்த முயற்சியிலிருந்து அதற்கான அருட்டதல்கள் பல மட்டங்களில் ஏற்படவேண்டுமென ஆசையுண்டாகிறது. எழுத்தாளர் சந்திப்பு என மட்டுப்படுத்தாது படைப்பாளிகளின் சந்திப்பாக இதை விரிவுபடுத்தலாம்.

## ரஞ்சகுமாரின் மடல்-2

உலகெங்கும் பரந்துவாழும் தமிழர்களிடையே இருந்து தமது அனுபவங்களையும் திரட்டிய அறிவினையும் படைப்புகளாகவும் ஆய்வுகளாகவும் மாற்றும் திறன்கொண்டவர்களை ஒருங்கே சேர்க்க முயலும் ஒரு முயற்சியின் பயனாக ஏற்பட்டிருக்கும் இந்த ஒன்றுகூடலில் கலந்துகொள்ள வரவிருக்கும் படைப்பாளிகளை சந்திக்க ஒரு நல்ல வாய்ப்பாக இது எனக்கு அமையும். அதிலும் குறிப்பாக இளைய தலைமுறையினரை சந்திப்பதில் எனக்கு மிகுந்த ஆர்வம் உண்டு.

தமிழ் கூறும் உலகின் அரசியல் பண்பாட்டு கலாசார உந்துவிசையின் மைய அச்சாக இன்று இலங்கையின் தமிழ்ப்



பிரதேசங்கள் மாறியுள்ளன. அதன்காரணமாக தமிழ்ப்படைப்பாக்கம் எதிர்வரவிருக்கும் ஆண்டுகளில் சில மாற்றங்களை காட்டி நிற்கும். இதே மாதிரியான ஒருபோக்கு 1980 களில் ஆரம்பித்தது. அது பின்னர் சில ஆண்டுகளுக்குள் முடங்கிப்போனது. பாரிய அழிவுகளின் பின்னர் சிதறுண்ட ஒரு சமூகத்தின் சகல கூறுகளும் இன்று மீளுருவாக்கம் பெற்றுவருகையில் இந்த ஒன்றுகூடல் நிகழ்வது முக்கியத்துவம் வாய்ந்தது. அதன் குறிகாட்டிகளை இந்த ஒன்றுகூடலில் தெளிவாக காண இயலும் என்று நம்புகிறேன்.

## வலைப்பதிவுகளும் இணையத்தின் அம்சங்களும்

வலைப் பதிவுகள் என்ற வகைக்குள் தமிழ் இணையத்தின் சகல அம்சங்களும் அடங்காது என்பது எனது கருத்து. சிற்றிதழ்களும் வணிக இதழ்களும் தினசரிகளும் கொண்டிருக்கும் 'அதிகாரத்தை' உடைக்கும் பணியை வலைப்பதிவுகள் ஆரம்பித்திருக்கின்றன என்றாலும்... இணையத்தின் தொழில்நுட்பம், ஏனைய பயன்பாடுகள், புதிய கண்டுபிடிப்புகள் பற்றிய விரிவான கலந்துரையாடலும் ஆய்வுகளும் பயிற்சிப் பட்டறைகளும் இந்த மகாநாட்டில் முக்கிய இடம் பெறவேண்டும் என்பது எனது கருத்து. உதாரணமாக கணினிப் பயன்பாடு, இணையம் ஆகியன சம்பந்தப்பட்ட பல விடயங்கள் அதற்கான புதிய சொல்லாடல்களையே வேண்டி நிற்கின்றன. மொழியியலுக்கு இது ஒரு சவாலாக அமைந்துள்ளதை நாம் காண்கிறோம்.

மிகவும் துடிப்புள்ள புத்திக்கூர்மையுள்ள இளந் தலைமுறையினர் தமிழ் இணையத்தை கட்டி எழுப்புவதிலும் புதுக்குவதிலும் ஆர்வத்துடன் உழைத்து வருகின்றனர். அரச ஆதரவை அதிகளவில் பெற்ற சிங்கள இணையத்துடன் ஒப்பிடுகையில் தமிழில் இணையம் தொழில்நுட்ப ரீதியாக பெற்றுள்ள வளர்ச்சி பிரமிக்கத்தக்கது. அந்த தொழில்நுட்ப அறிவு பரவலாக்கப்பட வேண்டும். அவர்கள் நாட்டுக்கு நாடு சிதறிப் போயிருக்கிறார்கள். அவர்கள் ஒன்றிணைக்கப்பட வேண்டும். ஏனைய பயனுள்ள அம்சங்களை உங்களது நோக்கு புலப்படுத்துவது போலவே இதையும் கருத்திற் கொண்டு செயலாற்ற வேண்டுகிறேன்.

தமிழ்நாட்டு மாநில அரசின் அனுசரணையுடன் தமிழ் இணைய மகாநாடு நடத்தப்பட்டதை இங்கு சுட்டிக்காட்டுவது அதன் முக்கியத்துவத்தை உணர்த்தும்.

இந்த அம்சம் தொடர்பாக அதிக கரிசனை காட்டவேண்டுமென்பது எனது விண்ணப்பம். உதாரணமாக நண்பர் மேமன்கவி போன்றோர் இணைப்பாளர்களாக இங்கு பயனுள்ள பணியை ஆற்றவல்லவர்கள்.... இன்னும் பல இளைஞர்கள் உலகெங்கும் பரந்து இருக்கின்றார்கள்.

**அவுஸ்திரேலியாவில் மேற்கு அவுஸ்திரேலியா மாநிலத்தில் (பேர்த்) மொடெக் பல்கலைக்கழக பொருளியற் துறை விரிவுரையாளரும் இலக்கிய ஆர்வலருமான அமீர்அலி தமது கருத்துக்களை இவ்வாறு எழுதியிருக்கிறார்:-**

கடந்த கால்நூற்றாண்டுக்கும் மேலாக தேமதுரத் தமிழோசையை உலகெலாம் பரவச் செய்ததில் புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழர்களின் பங்கு அளப்பரியது. இயல், இசை, நாடகம் ஆகிய முத்துறைகளிலும் உலகின் பல திசைகளிலிருந்தும் இவர்கள் தொண்டாற்றியுள்ளனர். நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், நாடகங்கள், இசை, நடனங்கள் என்றவாறு ஏராளமான படைப்புகளை இவர்கள் ஒலி, ஒளி, எழுத்து வடிவங்களில் உலகுக்கு தந்துள்ளனர். மேற்குலகில் இன்று நடமாடும் தமிழ் நூல்களும் தமிழ்ப் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் புலம்பெயர்ந்த தமிழரின் தமிழார்வத்தைப் பறைசாற்றி நிற்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத்தமிழரின் புலப்பெயர்வின் புதிய அலையும் நவீன தொடர்பு சாதனத் தொழில்நுட்பப் புரட்சியும் பூகோளமய வாக்கத்தின் நுழைவும் சமகாலத்தில் உருவாகியமை இத்தமிழ் வளர்ச்சிக்கு ஏதுவாய் அமைந்ததெனலாம்.

இருந்தும் இவ்வளர்ச்சியினால் இலங்கைத் தமிழரின் வாழ்வும் வளமும் சிங்கள, முஸ்லிம் இனங்களுடனான அவர் தம் புரிந்துணர்வும் தமிழகத்துடனான உறவும் எவ்வாறு தாக்கமடைந்துள்ளன? இவ்வுறவுகளுக்கும் உணர்வுகளுக்கும் உந்துகோலாகப் புலம்பெயர் தமிழரின் படைப்புகள் அமைந்துள்ளனவா? எதிர்காலத்தில் இப்படைப்புகளின் போக்கும் நோக்கும் எவ்வாறிருக்கும்? புலம்பெயர் தமிழரின் படைப்புகளுக்கு ஏதேனும் தனித்துவப் பண்புகளுண்டா? இவ்வாறான வினாக்களுக்கு விடை காண்பதும் கால் நூற்றாண்டுக்கும் மேலான புலம்பெயர் தமிழரின் இருப்புக் கணக்கெடுப்பதும் காலத்தின் கட்டாயம் எனக் கருத வேண்டும்.

எனவே தமிழ்ப் படைப்பாளிகளுக்கும் பொதுவான ஓர் அரங்கினை இலங்கையிலேயே அமைத்து இவ்விடயங்களையிட்டு ஆராயுமுகமாக ஒரு மகாநாடு அமைய வேண்டும். இதில் சிங்கள முஸ்லிம் தமிழக படைப்பாளிகளும் கலந்து கொள்வது அவசியம்.

## சிற்றிதழ்களுக்கான கருத்தரங்கு- கண்காட்சி

தமிழ்நாட்டில் சிற்றிதழ் மகாநாட்டில் கலந்துகொண்ட மலையக கலை,இலக்கிய பேரவையின் ஸ்தாபகரும் கொழுந்து இதழின் ஆசிரியருமான அந்தனி ஜீவா எழுதியிருந்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்ததாவது:-

இலங்கையில் நடைபெறவுள்ள சர்வதேச தமிழ் எழுத்தாளர் ஒன்றுகூடலில், சிற்றிதழ்களுக்காக ஒரு அரங்கு நடத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து தமிழக சிற்றிதழ் ஆசிரியர்கள் ஆர்வம் காட்டுகின்றனர். அனைத்துலகிலும் வெளிவரும் தமிழ் சிற்றிதழாளர்களின் சந்திப்பும் கருத்தரங்கும் நடத்தப்படவேண்டும். இதில் தமிழகம் சிங்கப்பூர், மலேசியா இலங்கை உட்பட புலம்பெயர்ந்தவர்களினால் வெளியிடப்பட்ட சிற்றிதழ்களின் கண்காட்சியும் நடைபெற வேண்டும். இலங்கையில் மறுமலர்ச்சி முதல் இன்றுவரையில் வெளியாகும் சிற்றிதழ்கள் தொடர்பான விரிவான கட்டுரை அரங்கத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

கொழும்பிலிருந்து எழுதியிருக்கும் எழுத்தாளர் ஆனந்தி, நீண்டகாலம் இலங்கையில் வெளியாகும் தமிழ் இலக்கிய சிற்றிதழ்களுக்கு அரச மானியம் பெற்றுக் கொடுப்பதற்கு இந்த சர்வதேச ஒன்று கூடல் தூண்டுகோலாக அமையவேண்டும் என்று வலியுறுத்தியிருப்பதுடன், வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க மகாநாடு ஆக்கபூர்வமான திட்டங்களை செயற்படுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். அது ஒன்றுதான் மனிதரை செம்மைப்படுத்தும். பார்த்து, ரசித்து, உணர்வது வேறுவழி. அதற்குத் தான் நிறைய சாதனங்கள் ஆழ்ந்து யோசிக்கவும் படித்ததை மீட்டிப் பார்த்து மனம் செம்மைப் படவும் கைகொடுத்து உதவுவது இந்த வாசிப்பு பழக்கம்தான். இளம்தலைமுறையினரை இந்தவழியில் நிலைப்படுத்துவது ஒரு சவாலாக அமையும். எனினும் அவர்களை சிறந்த நற்பிறஜைகளாக உருவாக்குவதற்கு வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிப்பது முக்கியமானது.

இவ்வாறு பலரும் தமது யோசனைகளை தெரிவித்துவருகின்றனர். சர்வதேச ஒன்றுகூடலுக்கு முன்னோடியாக வெளியாகும் கருத்துக்களை கவனத்தில்கொண்டு இயங்கவிருக்கின்றோம்.

செம்மைப்படுத்தல் (செவ்விதாக்கம்) மொழிபெயர்ப்பு தொடர்பாகவும் சிலர் தமது கருத்துக்களை தெரிவித்திருக்கின்றனர். அவைபற்றி அடுத்த மடலில் பார்க்கலாம்

international.twfes@yahoo.com.au



‘அனைவருக்கும் சம உரிமை, சமவாய்ப்பு மூலம் பெண்களின் முழுமையான பங்களிப்போடு அபிவிருத்தி’ என்ற தொனிப் பொருளோடு, இவ்வருடம் பெண்களின் கோஷம் சர்வதேச மகளிர் தினத்தில் ஓங்கி ஒலித்தது. உலகளாவிய ரீதியில் இவ்வாறு பரவலாகப் பெண்ணியக் கோஷம் ஓங்கி ஒலித்தமைக்குத் தகவல் தொழில்நுட்பமும், கோளமயமாதலும் முக்கிய காரணம் எனலாம்.

பெண்ணியம் என்பது வெறும் ஆரவாரமான கோஷம் மாத்திரமல்ல. செயற்திறனுடன் முன்னெடுக்கப்படும் கோஷமாகும். இவ்வுலகில் பெண்களுக்கு எதிராக நடைபெறும் சகல பாராபட்சங்களுக்கும், அடக்கு முறைகளுக்கும் எதிரான மனிதநேயமிக்க நியாயத்தின் குரலே பெண்ணியம்! அடிப்படை மனித உரிமைகள் அனைத்தும் பாராபட்சமின்றி பெண்களுக்கு இருக்க வேண்டும். மனித நேயத்திற்குப் புதுப் பொலிவும் அர்த்தமும் ஆழமும் பாய்ச்சுவதாகப் பெண்ணிய நகர்வுகள் முன்னெடுக்கப்பட வேண்டிய தகவல் தொழில்நுட்ப யுகம் இது.

# கோளமய செயல் முறையாக எழுச்சி கொண்டுள்ள பெண்ணியம்

-யுகாயினி

சமகாலப் பண்பாட்டின் பன்முகப் பரிமாணங்களும், மாறுதல்களும் பெண்ணியத்திற்குச் சார்பான நிலையில் நகர்வதன் ஒளிமயம் தெரிகின்றது. சமூகத்தில் நிகழும் பல்வேறு இயக்கப்பாடுகளோடு, தகவலியமும் இணைந்து இன்றைய பெண்ணிய எழுச்சிப் போக்கிற்கு உந்து சக்தியாகப் பரிணமிக்கின்றது. பெண்ணிய அம்சங்களின் உள்ளீர்ப்பும், ஆணாதிக்கப் பண்பாட்டு அம்சங்களின் ஒதுக்கலுமாக ஏற்பட்டு வரும் மாற்றங்களுக்குத் தகவல் வலைப் பின்னல் அமைப்பு உயரிய பங்களிக்கிறது என்றால், அது மிகையாகாது. இன்றைய சிறப்பான மாற்றங்கள் மார்க்சிய இயங்கியல் முறையிலும், அமைப்பியல் கண்ணோட்டத்துடனும், பின்னைய மனிதத்துவங்களுடனும் ஏற்பட்டதுடன் உலகளாவிய ரீதியில் பரம்பலானமைக்குக் கோளமய செயல்முறையின் எழுச்சியும் ஒரு காரணம் என்பதை எவரும் புறம் தள்ளிட முடியாது. தகவலியத்தின் தொழில் புத்தாக்கங்களும் பொருண்மிய நிலவரங்களும், குடும்ப இயல்பியலும் அடுக்கமைப்பிலும் மாற்றங்களை வெளிப்படுத்தி நிற்கின்றன. இவற்றோடு இணைந்த அம்சமாகப் பெண்ணியம் ஒரு கோளமயச் செயல் முறையாகத் துரிதமாகவும் உச்சமாகவும் எழுச்சி கொண்டு வருகிறது. இதன் பலாபலனாக அபிவிருத்தியில் பெண்களின் வகிபங்கு அதிகரித்து வருகிறது. பெண்களின் ஆற்றலை வெளிப்படுத்தக் கூடிய ஆரோக்கியமான சம வாய்ப்பும் சமசந்தர்ப்பமும், இதுவரை அசாத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யமாக சம வாய்ப்பும், சம சந்தர்ப்பமும், இது வரை அசாத்தியமாக இருந்த நிலைமைகளை மாற்றி அமைக்கிறது. அபிவிருத்தியில் பெண்களின் பங்களிப்பும் ஆண்களுக்கு நிகராக உயர்ந்து வருகிறது. குடும்ப வன்முறையும், பாலியல் வன்முறைகளும் பெண்களுக்கு எதிராகத் தொடரும் அதே வேளை, இந்நிலைமைகளையும் இவற்றின் சவால்களையும் துணிச்சலுடன் எதிர்கொள்ளும் வண்ணம் பெண்ணியம் மேம்பட்டு வருவதையும் அவதானிக்க முடிகிறது.

ஏகாதிபத்தியம், நிலவுடைமை, முதலாளியம், பின்னைய முதலாளியம் என்பவற்றில் காணப்படாதளவு நெகிழ்ச்சிப் பாங்கும், உலகம் தழுவிய வலைப் பின்னல் வியாபகமும் தற்போதைய தகவல் முதலாளியத்தில் காணப்படுகிறது. அறிவின் மீது அறிவு விளைபாடு கொள்ளலும், அதுவே அபிவிருத்திக்கு மூல வளமாகி, உற்பத்தித் திறனை அதிகரிக்கும் என்ற தகவலகத்தின் கூற்று எந்தளவுக்குச் சரியானது, சாத்தியமானது என்பது கேள்விக்குறியே. ஏனெனில் வழமை போலவே முதலாளியம் தற்போதும் தலையாய பங்கினைத் தன்கையிலே எடுக்கத் தொடங்கியுள்ளது.

முதலாளிய அமைப்பை மாற்றியமைப்பதிலேயே தகவலகத்தின் பங்கு முக்கியமானதாக அமைகின்ற போதிலும், அடிப்படையான சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதிலே தகவல் வலைப் பின்னல் அமைப்புச் சிறப்பார்ந்த இடத்தை வகிப்பதைத் தடுக்கும் சக்தியாக முதலாளியம் சாதுரியமாகத் தனது நகர்வுகளை மேற்கொள்கிறது. இதன் அம்சமாகத் தகவலியத்தையே தனக்கு ஏற்றவாறு பிரயோகித்து, தொடர்பாடல் வலைப் பின்னலால் தன்னை பலப்படுத்திக் கொள்வதற்கும் வலுப்படுத்திக் கொள்வதற்குமாக வினைத் திறனுடன் படையெடுக்கத் தொடங்கியுள்ளது. வர்க்க பேதத்தை நிலை நிறுத்தலின்றி, சுரண்டலை மேற்கொள்ள முடியாதென்பதனால், அந்நியமாதல் நிலையைத் தொடர்ந்தே தகவலிய முதலாளியம் முனைப்புடன் இயங்குகிறது. இதனால் பால்பாகுபாடும், அசமத்துவமும் நிரந்தரிக்க வேண்டிய நிலைக்குட் பின்தள்ளப்படுகிறது. இதனால் வீறு கொண்டெழும் பெண்ணியமும் அமர்முடுகலுக்கு உட்படுத்தப்படுகிறது. சுயரூபத்தை வெளிப்படுத்திக் கொள்ளாது மூலதனச் சந்தையின் நவீன வழி நெறிப்படுத்தலை ஆக்கிரமித்து, தகவல் முதலாளியம் புதிய வடிவங்களை எடுத்துக் கொள்ளத் தொடங்கியுள்ளது. இதனால் வர்க்கமற்ற சமூகம் என்பது முன்பு போலவே இப்பொழுதும் ஒரு மாயத் தோற்றமாகவே தொடர்கிறது. தொழிலாளர் வர்க்கம் என்பது இல்லாதொழிகிறது என்னும் ஒரு போலியான கருத்தாக முதலாளியத்தைக் காக்கும் அம்சமாகவே இருக்கிறது. தகவல் தொழிலாளர்களாகத் தகவல் தொழில் நுட்பப் பணியாளர்கள் உருவாகின்றார்கள். பெண்ணிய மேம்பாடு என்பதும் இவ்வாறான ஒரு மாயைத் தோற்றப்பாடாக மிளிர்ந்துள்ளதாகவும் கருதப்படுகிறது.

இவ்வாறு விரிந்து ஆக்கிரமித்து வருகின்ற, தோன்றியிருக்கின்ற தகவல் முதலாளியத்தின் முகமூடிகளைக் கிழித்தெறிதல் கலை இலக்கியங்களாலேயே சாத்தியமாகும். உலக வரலாற்றின் எல்லாப் புரட்சிக் காலங்களிலும் கலை இலக்கியங்களின் பங்களிப்பு முக்கியமாக அமைந்திருந்தது போலவே, இன்றைய பின்னைய தகவலிய முதலாளியத்தினை தோலுரித்துக் காட்டவும், பெண்ணிய மேம்பாட்டிற்குத் தடையாக இருக்கும் அம்சங்களைப் பட்டுக்காட்டவும் கலை இலக்கியங்களால் தான் முடியும். தகவல் யுகத்திலே இலக்கிய உருவாக்கங்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்து வருகிறது. புதிய வளர்ச்சிக்கு ஊடகங்களின் பெருக்கமும், தகவல் தொழில் நுட்பமும் பெரிதும் உதவுகின்றன. இணையத்தள வருகை இதைச் சாத்தியமாக்கினாலும், புத்தக வெளியீடு என்பது எதிர்காலத்தில் கேள்விக்குறியாகவே உள்ளது. இன்று இணையத்தளங்களின் ஊடாகப் பெருக்கமடையும் இலக்கியப் பிரவாகத்தைக் கூட, முதலாளியம் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் போது, கருத்தாளமற்ற படைப்புகளே பரம்பலடைகின்றன. எனவே தகவலின் பெருக்கத்தால் வாழ்வின் இருப்புச் சாதகமான நல்ல மாற்றத்தை அடையும் என்பதும் கூடச் சந்தேகமாகவே உள்ளது. ஒரு நாணயத்தின் இரண்டுபட்ட இரு பக்கங்கள் இருப்பது போல, தகவலியத்திற்கும் இவ்விரண்டு நிலை இருக்கின்றது. விளம்பரங்கள் மூலம் தரமற்றவற்றை தரமானதாகக் காட்டி, சுரண்டலை அதிகரிக்கவும் தகவலியத்தை முதலாளியம் பயன்படுத்துகிறது.

மனிதத்துவத்தை விடத் தொழில்நுட்பமே மேலானது என்ற மாயைத் தகர்த்தெறியப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும். மனிதத்துவம் உயர்வானதாகக் கருதப்படும் போதுதான், தகவலிய சமூகத்திலே, முதலாளிய ஆக்கிரமிப்பைப் பின்தள்ளி, சமமான பங்காளர்களை அனுபவிக்க முடியும். அதிகார வர்க்கம், மனிதத்துவம் மேலோங்குதலை இரும்புக் கரம் கொண்டு நசுக்குவதும் இதனால் தான். இன்று எமது நாட்டில் ஊடகங்களுக்கு எதிரான கடும் போக்கும் கூட இவ்வாறான ஓர் அம்சம் தான். ஊடகத்தை அதிகாரத்திற்கு சார்பாக்கும் முயற்சிதான்.

மார்க்சியத்தின் கூற்றின் வர்க்கமற்ற சமூகம் ஒன்று ஏற்படும் போது, பெண்ணடிமைத் தளமும் நீங்கும் என்பது தான் நிஜம் போல் தோன்றுகிறது. அதுவரை தகவலிய சமுதாயத்திலும் பெண்ணிய முன்னெடுப்புக்கள் தொடர வேண்டிய நிலையே உள்ளது.


**A. R. R. HAIR DRESSERS**

89, Church Road,
Mattakkuliya,
Colombo - 15.
Tel : 0112527219

**[illegible] குளிரூட்டப் பெற்ற சலூன்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் வகுத்த வியூகம்

**-சிவசிவா**

அரச உத்தியோகம் கிடைத்து நான் கொழும்புக்கு வந்தபோது, எனக்குத் தங்க இடம் தந்தவன், எனது நண்பன் தேவராஜன். அவன் இருக்கும் அறையில் இருவர் இருந்த போதிலும், வசதிக் குறைவு என்று தெரிந்தும் நண்பன் என்ற முறையில் எனக்கு அடைக்கலம் தந்தவன். அந்த நேரம் அது பெரிய ஆறுதல் என்றே சொல்லலாம்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் விடியற் காலை எழுந்து ஒப்சேவர் பத்திரிகையை வாங்கிக் கொண்டு அறை தேடும் படலம். ஆனால் எனக்கு வசதியாக அறையொன்றும் அமையவில்லை.

இந்த நேரத்தில் தேவராஜன் சொன்னான்: "மச்சான் பாலா, நானும் உன்னோடை வந்திருக்கக் கூடியதாக வாற ஞாயிற்றுக் கிழமை பேப்பரைப் பார்த்து அறை ஒன்றை எடுப்பம்"

"நீ என்னோடை வந்திருக்கிறது எண்டால் எனக்கும் சந்தோசம் தான்ரா" என்றேன்.

வெள்ளவத்தையில் ஒரு வீட்டின் முன் அறை வாடகைக்கு என்ற விளம்பரத்தைப் பார்த்துக் காலை ஏழு மணிக்குச் சென்று பார்த்தோம். அறை பிடித்துப் கொண்டபடியால் வீட்டுக்காரருடன் கதைத்து, அந்த அறையை எடுப்பதாக இருந்தோம்.

"தம்பியவை தண்ணி பாவிக்கிறவை, புகை பிடிக்கிறவர்களுக்கு அறை கொடுக்கமாட்டம். இரவு ஒம்பது மணிக்கு முன்பு வீட்டுக்கு வந்துவிட வேண்டும். நாங்கள் கதவைச் சாத்தினால், நீங்க உள்ளுக்குள் வரமுடியாது. வீட்டுக்கு விசிற்றேஸ் வரக் கூடாது. வீட்டில பொம்பிளைப் பிள்ளைகள் இருக்கின்றபடியால் ஒழுக்கமாக இருக்க வேண்டும்" என்று பலவகைப்பட்ட நிபந்தனைகளைச் சொன்னார்கள்.

எல்லா நிபந்தனைகளையும் ஏற்று, அறையை வாடகைக்கு எடுப்பதாக ஒத்துக் கொண்டோம். தங்க அறை வேண்டுமல்லவா?

என்னை முதலில் போய் அறையில் இருக்கும் படியும், தான் மாதம் முடிய வருவதாகவும் தேவராஜன் சொன்னான்.

நானும் சரி என்று சொல்லி ஒரு கட்டிலும் ஒரு மேசையும் கதிரையும் வாங்கிக் கொண்டு போய் அறையில் போட்டேன். தலையணை பெட்சீற் என்று தேவையான பொருட்களையும் வாங்கிக் கொண்டேன். அன்று கடையில் இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு அறைக்குச் சென்றேன்.

காற்று வருவதற்காக யன்னலைத் திறந்தேன். அடுத்த வீட்டு அறையில் ஒரு இளம் பெண் நிற்பதைக் கண்டேன். உடனே எனது அறை லயிற்றை ஒவ் பண்ணிவிட்டு யன்னல் வழியாக அப்பெண்ணைப் பார்க்கின்றேன். அந்தப் பெண் நிற்கும் அறை யன்னல் இரண்டும் திறந்திருந்தபடியால் அங்கு இருப்பதையெல்லாம் வடிவாகப் பார்க்கக் கூடியதாக இருந்தது. அழகான இளம் பெண் நயிற்றியுடன் உலாவிக் கொண்டிருந்தாள். எனக்கு அவளைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போல் இருந்தது. அந்த றூமின் லயிற் ஒவ் பண்ணும் வரை அவள் அங்குமிங்குமாக நடந்து திரிந்து கொண்டே இருந்தாள். அவளுடைய உடற் கட்டு முகவசீகரம் என்னைச் சுண்டி இழுத்தது.

அன்று இரவு படுத்துக் கொண்டு, தேவராஜனைக் கூப்பிடாமல் தனிய இருந்தால் தான் முன்வீட்டுப் பெட்டையைச் சயிற்றடிக்கலாம் என்று யோசித்துத் தீர்மானத்திற்கு வந்தேன்.

அடுத்த நாள், காலையில் தேவராஜனைச் சந்தித்து "மச்சான் வீட்டுக்காரர் தங்கடை மருமேன் வாறபடியால் ஒரு ஆள் தானாம் அறையில் இருக்கலாம் எண்டு சொல்லீனம். அப்ப வேறு அறை பாப்பமே" என்றேன்.

"இப்ப உடனே வேறு அறை பாக்க முடியாது. நான் கொஞ்ச நாளைக்கு இஞ்ச இருக்கலாம். வசதியாக அறை கிடைக்கும் வரை, நீ மச்சான் அங்க இரு" என்று தேவராஜன் தானாகவே சொன்னது, எனக்கு ஆறுதலாக இருந்தது.

நேற்றுக் கண்ட பெட்டைக்காக நான் தேவராஜனை ஒதுக்குவது பாவம். அவனுக்கு எங்கே தெரியப் போகின்றது? நான் சொன்னதை அவன் நம்பியே விட்டான்.

நான் இருக்கும் வீட்டிலும் இரண்டும் பருவ வயதுப் பெட்டைகள் இருந்தார்கள். அதுகளும் என்னைப் பார்த்துச் சிரிக்கும் போது, நானும் பதிலுக்குச் சிரித்து வந்தேன். அதேவேளை இரவில் மட்டும் முன் வீட்டுப் பெட்டையைப் பார்த்து வந்த நான் அவளைப் பகலிலும் பார்க்கத் தொடங்கினேன்.

காலையில் எழுந்து எனது அறை யன்னல் இரண்டையும் திறந்து விட்டு உடற்பயிற்சி செய்வேன். பக்கத்து வீட்டுப் பெட்டை பார்க்கும் படியாக. நான் நினைத்த மாதிரி அவளும் தினமும் பார்க்கத் தொடங்கினாள். அவள் பார்ப்பதைக் கவனித்த நான், தெரிந்தும் தெரியாத மாதிரி இருந்தேன். ஆனால், இரவில் மட்டும் அவள் படுக்கும் வரை தினமும் அவளைப் பார்ப்பேன்.

ஒரு நாள் இரவு அவள் வீட்டு வாசலில் கார் ஒன்று வந்து நின்றது அதிலிருந்து ஒரு வாலிபன் இறங்கி வீட்டுக்குள் சென்றான். அன்றிரவு மட்டும் அவளுடைய அறையில் லயிற் எரியவில்லை. அதனால் அவளைப் பார்க்க முடியவில்லை.

அடுத்த நாள் காலை எழுந்து வழமை போல் உடற்பயிற்சி செய்து கொண்டிருந்தேன். அவள் என்னைப் பார்ப்பது தெரிந்து, நானும் அவளைப் பார்த்துச் சிரித்தேன். அவளும் சிரித்தாள். என் உடம்பில் ஒருவித உணர்ச்சி தோன்றுவதாக உணர்ந்தேன். எனவே கையைக் காட்டினேன், அவளும் காட்டினாள். அது சில நிமிடங்கள் நீடித்தன.

அன்று சனிக்கிழமை. லீவு நாள் என்றபடியால் உடுப்புகளைத் தோய்த்துக் காயப் போட்ட பின் முழுகுவதற்காக பாத்றூமுக்குள் சென்று கதவைப் பூட்டிவிட்டு உடையைக் கழற்றி றாக்கையில் போட்டு விட்டு, முழுகுகின்றேன். சவர்க்காரம் போடும் போது கதவு தட்டுப்பட்ட மாதிரி இருந்தது. நிமிர்ந்து பார்த்தேன். கதவின் மேல் மூலையில் சிறிய ஓட்டை தெரிந்தது. நானும் சாதாரணமாக ஒருவித சலனமும் இன்றி அந்தத் துவாரத்தைப் பார்த்தேன். யாரோ அதன் வழியாகப் பார்ப்பது தெரிந்தது. நானும் அதைப் பொருட்படுத்தாத மாதிரி, முழுகி விட்டுக் கதவைத் திறந்து கொண்டு வெளியில் வந்தேன்.

சற்றுத் தூரத்தில் நின்ற நான் இருக் கும் வீட்டுக்காரரின் மூத்த பெண் பார்த்துச்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்தாள். நானும் பதிலுக்குச் சிரித்து விட்டு "அன்ரி இல்லையா?" என்று கேட்டேன்.

''அப்பாவும் அம்மாவும் தங்கச்சியும் மோதரைக்குப் போய் விட்டார்கள்.''

"அப்ப நீங்க போகவில்லையா?" என்றேன்.

''நான் ரியூசன் கிளாசுக்குப் போனபடியால் அங்கு போகவில்ல. இப்பத்தான் வந்தனான்'' என்றாள்.

நான் பாத்றூமுக்குள் நிற்கும் போது இவள் தான் பார்த்திருப்பாள் என்று எண்ணிக் கொண்டு எனது அறைக்குள் சென்று உடுப்பு மாற்றிக் கொண்டு வெளியில் சாப்பிடுவதற்காகப் புறப்படும் போது....

"அங்கிள் எனக்குத் தனியாக இருக்கப் பயமாக இருக்கு கெதியாய் போய்ச் சாப்பிட்டுக் கொண்டு வாங்கோ'' என்றாள்.

நானும் கிட்ட உள்ள கடையில் ஒரு சாப்பாட்டுப் பார்சலை எடுத்துக் கொண்டு வீட்டுக்குள் வந்துவிட்டேன்.

"அங்கிள், சாப்பிடேல்லையா?"

"இல்ல. பார்சல் எடுத்துக் கொண்டு வந்தனான்'' என்றேன்.

நான் எனது அறையில் இருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். அந்த வீட்டுப் பெண் ஒரு கோப்பையில் கோழி இறைச்சிக் கறியை எடுத்து வந்து, "இதையும் சேர்த்துச் சாப்பிடுங்கோ" என்று தந்தாள்.

நானும் வாங்கிச் சாப்பிட்டேன். சாப்பிட்டதும் அன்றைய பத்திரிகையைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அவள் வந்தாள் "அங்கிள்! உங்கட பெயர் பாலா மட்டும் தானா?''

"இல்ல! எனக்குப் பெயர் பாலசிங்கம். பாலா எண்டுதான் எல்லாரும் என்னைக் கூப்பிடுவார்கள்''

"என்ர பெயர் உங்களுக்குத் தெரியுமே?"

"ஓம் உங்களை உங்கள் அம்மா அப்பா சித்திரா என்று கூப்பிடும் போது எனக்குத் தெரியும்''

''அப்ப நீங்களும் நல்லாகக் கவனிக்கிறீங்கள், என்ன?'' என்று சொன்னவள் நான் படித்துக் கொண்டிருந்த பத்திரிகையை வாங்கி ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு "அப்பா அம்மா வருவதற்கு முன்பு கொஞ்ச நேரம் கதைப்பமே" என்றாள்.

''முன்பு இந்த றூமிலை செல்வராசா அங்கிள் இருந்தவர். அவர் நல்ல பணக்காரர். சொந்தமாகக் காரும் வைச்சிருந்தவர். பக்கத்து வீட்டு அக்காவை லவ் பண்ணிக் கல்யாணம் முடிக்க இருந்தவர். காரில் எல்லா இடமும் கூட்டிச் செல்லுவார். இந்த றூமுக்கும் கூட்டிக் கொண்டு வந்து அவவோடை தங்குவார். அவை இரண்டு பேரும் றூமுக்குள் இருக்கும் போது அவர்கள் செய்யும் விளையாட்டுகளை அடுத்த றூமில் நின்று அதைப் பார்க்க அந்த நேரம் நல்ல விருப்பமாக இருந்தது. வீட்டில் ஆக்கள் இல்லாத நேரம், அவர் என்னையும் றூமுக்கு வரச் சொல்லிக் கூப்பிடுவார். நான் பயந்து போறதில்ல. ஒரு நாள் வீட்டில் ஒருவரும் இல்லை. பாத்றூமில் அவர் குளிச்சுக் கொண்டிருந்தார். நான் கதவு ஓட்டையால் பார்த்துக் கொண்டிருந்தேன். அவர் கண்டு விட்டார். உடனே கதவைத் திறந்து என்னைப் பாத்றூமுக்குள் இழுத்துப் கொண்டு போய் ''ஏன் ஒளித்திருந்து பார்க்க வேண்டும்? நேராகப் பாரும்'' என்றார். நான் கண்களைப் பொத்திக் கொண்டு "என்னை வெளியால போக விடுங்கோ'' என்று கத்தினேன். உடனே அவர் வெளியால அதன் பிறகு அவரைப் பார்ப்பதேயில்லை'' என்றாள்.

''இன்று நான் பாத்றூமுக்குள் நிற்கும்



போது நீர் பாத்தனீரோ?'' என்று கேட்டேன். சித்திரா மௌனமாக நின்றாள்.

"சரி, பக்கத்து வீட்டு அக்காவைப் பற்றிச் கொஞ்சம் சொல்லும்'' என்றேன்.

"பக்கத்து வீட்டு அக்காவை ஏமாத்திப் போட்டுச் செல்வராசா அங்கிள் லண்டனுக்குப் போய்விட்டார். அதன் பிறகு பக்கத்து வீட்டு அக்காவுக்கு கிஸ்ரீறியா வருத்தம் வந்து, எல்லாரோடும் சண்டை பிடித்துக் கத்துவா. சில வேளைகளில் எங்கட வீட்டுக்கு வந்து றூம் கதவைத் தட்டி, டேய் செல்வராசா வெளியாலை வாடா எண்டு கத்துவா. அவவைக் கண்டால் எங்களுக்குச் சரியான பயம்'' என்றாள்.

"இது எப்ப நடந்தது?'' என்று கேட் டேன்.

''இந்த றூமை விட்டு செல்வராசா அங்கிள் போய் இரண்டு வருசம் இருக்கும். அன்று தொடக்கம் நீங்கள் வரும்வரை இந்த றூமை ஒருவருக்கும் கொடுக்காமல் வைச்சிருந்தம்''

''அப்ப இப்பொழுது ஏன் றூமைத் தந்தனீங்கள்?''

"உங்களோடை வீடு பார்க்க வந்த தேவராஜன் அங்கிள் என்ர சித்தப்பாவின் ஒப்பீசில் தான் வேலை பார்க்கின்றார். சித்தப்பாதான் தேவராஜன் அங்கிளுக்கு றூம் கொடுக்கச் சொல்லிச் சொன்னவர்''

தேவராஜனுக்குச் சொன்ன பொய்யை நினைக்க எனக்கு ஏதோ மனத்தை உறுத்திக் கொண்டிருந்தது.

அப்பொழுது "பாலா அங்கிள்! தேவராஜன் அங்கிள் றூமுக்கு வருவதற்கு முன்பு நீங்கள் தனிய இருக்கேக்க உங்களிடம் ஒரு விடயம் கேட்க விரும்பி இப்ப வந்தனான்'' என்றாள்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்ட மாதிரி இருந்தது. இருந்தும் என்னைச் சமாளித்துக் கொண்டு, ''என்ன விடயம்?'' என்று கேட்டேன்.

"நான் ஒரு போயை லவ் பண்ணுகிறன். அவர் மூண்டு மணிக்கு வீட்டுக்கு வருவதாகச் சொல்லியிருக்கிறார். உங்கடை றூமைத் தந்துவிட்டு நீங்கள் கொஞ்ச நேரம் வெளியில் இருக்க வேணும் சம்மதமா?'' என்றாள்.

நானும் சம்மதம் தெரிவித்து வெளியில் காவல் இருந்தேன். ஒரு அரை மணித்தியாலயத்தில் சித்திராவின் பெற்றோரும் தங்கையும் வந்துவிட்டார்கள். எனது அறைக் கதவைத் தட்டினேன். திறந்திருந் தது. உள்ளே சென்று பார்த்தேன் சித்திரா மட்டும் எனது கட்டிலில் அலங்கோலமாகப் படுத்திருந்தாள். பெடியனைக் காணவில்லை. நான் கட்டிலுக்குக் கிட்டப் போய் "சித்திரா எழும்பு. அப்பா அம்மா வந்துவிட்டினம்'' என்றேன்.

அவள் என்கைகளைப் பிடித்துத் தனக்குமேல் இழுத்துவிட்டாள். அந்த நேரம் அவளது பெற்றோர்கள் அந்தக் காட்சியைக் கண்டுவிட்டார்கள்.

நான் எழுந்து அவளின் பெற்றோரைப் பார்க்கின்றேன். அவர்கள் கடுங் கோபத்துடன் என்முகத்தைப் பார்க்கிறார்கள்.

"அம்மா நான் மாட்டன் மாட்டன் எண்டு சொல்ல, இவர் தான் என்னைத் தூக்கி வந்து கட்டிலில் போட்டு இப்படிச் செய்து போட்டார்'' என்று சொல்லியே விட்டாள்.

நண்பனை ஏமாற்றிவிட்டுப் பெட்டைகளைச் சயிற் அடிப்பதற்காக நான் வகுத்த வியூகம், என்னையே பெரிய ஆபத்துக்குள் கொண்டு வந்து சேர்த்துவிட்டது.

மனதில் தாங்க முடியாத சுமையுடன் நண்பன் தேவராஜனைத் தேடிச் செல்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வாழும் நினைவுகள்: 39*

# புண்படுத்தும் போட்டிகள்

**—திக்குவல்லை கமால்**

**போ**ட்டிகளில் பங்குபற்றுவதில் என்றுமே எனக்கு அலாதிப் பிரியம். சின்ன வயதில் நிறைய விளம்பரப் போட்டிகளில் பங்கு பற்றியிருக்கிறேன். சவர்க்காரம், பால்மா, பிஸ்கட் நிறுவனங்கள் கவர்ச்சியான போட்டிகளை நடாத்துகின்றன. இப்படி எக்கச் சக்கமான போட்டிகளில் பங்குபற்றி எதிலுமே பரிசு கிட்டவில்லை. அங்கு திறமைக்கு அல்ல, அதிர்ஸ்டத்திற்குத் தான் பரிசு. பின்னர் படிப்படியாக எழுத்துப் போட்டி, பேச்சுப் போட்டியென்று பங்குபற்றும் நிலைக்குத் தள்ளப்பட்டேன்.

உண்மையில் அது எனக்கு சாதகமாகவே அமைந்தது. பத்துப் பன்னிரண்டு வயது முதல் பாடசாலை, பொதுப்பணி மன்றங்கள் நடாத்தும் போட்டிகளிலே பல்வேறு பரிசுகளை வென்றேன். கவலைக்குரிய விஷயமென்வென்றால் அந்நாட்களில் பெரிய பெரிய பரிசுப் பொதிகளைத் தருவார்களே தவிர, சான்றிதழ் தரும் முறை இருக்கவில்லை. சான்றிதழ் தந்திருந்தால், இன்றும் அதனைப் பார்த்துப் பரவசமடையலாம். பிள்ளைகளுக்கும் காட்டி உற்சாகமூட்டலாம்.

ஏழாம் வகுப்பில் கல்வி கற்கும் போது, தினகரனில் 'என்னைக் கவர்ந்த பூங்கா' என்றொரு கட்டுரைப் போட்டி அறிவிக்கப்பட்டிருந்தது. இப்படிப்பட்டதொரு போட்டியில் பங்கு கொள்ளும் முதல் சந்தர்ப்பம் அது. என்ன ஆச்சரியம்! எனது கட்டுரை தெரிவாகியிருந்தது. பரிசு ஆக இருபது ரூபாதான். ஆனால், பின்நாளில் பல்லாயிரங்கள் பரிசு பெற்ற போது அடைந்த மகிழ்ச்சி அதற்கு நிகராகவில்லை.

ஒவ்வொரு நாளும் தபால்காரனை வழி பார்த்தபடியிருந்தேன். காசு கிடைக்காதது பற்றிக் கடிதமெழுதினேன். மூன்று மாதமும் நகர்ந்தாயிற்று. இன்னொரு கடிதம் எழுதினேன். ஒரு பதிலையும் காணோம். அத்தோடு கதையை விட்டுவிட்டேன்.

ஆறு மாதங்களின் பின்பு காசோலை வந்து சேர்ந்தது. காசு அனுப்புவதற்கும் பத்திரிகை ஆசிரியருக்கும் நேரடிச் சம்பந்தமில்லாத விடயங்களொன்றும் அப்போது எனக்குத் தெரிந்திருக்கவில்லை.

எழுத்துத் துறையில் இறங்கிய பின் நிறையவே கதை, கவிதைப் போட்டிகளில் பங்கு பற்றிப் பரிசு பெற்றுள்ளேன். 1971ல் என்று ஞாபகம். நாவலர் நூற்றாண்டை முன்னிட்டு,



நாவலர் சபை சிறுகதைப் போட்டியொன்றை நடாத்தியது. அதில் பங்கு கொண்டு மூன்றாம் பரிசு பெற்றேன். விழாவில் கலந்து கொண்டு பரிசு பெறுமாறு தந்தி கொடுத்திருந்தார்கள். யாழ்ப்பாணத்திற்கு எப்படி நான் போவது? பிரயாண அநுபவம் அவ்வளவாக இல்லை. வரமுடியாதது பற்றியும் பரிசுத் தொகையையும் சான்றிதழையும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கடிதமெழுதினேன். இன்றுவரை சான்றிதழோ பரிசுப் பணமோ வந்து சேரவில்லை. அந்தத் தந்திப் பத்திரம் தான் சான்றாதாரமாக இன்னும் இருக்கின்றது.

'கதை மலர்' என்ற சஞ்சிகை ஒரு சிறுகதைப் போட்டி நடாத்தியது. எனக்கு இரண்டாம் பரிசு. பரிசு விபரத்திற்குக் கீழே ஒரு குறிப்பு எழுதியிருந்தார்கள். 'பரிசு பெற்றவர்கள் பரிசுத் தொகையைச் சஞ்சிகை வளர்ச்சிக்காக வழங்கிவிட்டார்கள்' என்பது தான் அந்தக் குறிப்பு!

இப்படி இன்னும் நிறையவே அநுபவங்கள் எனக்குண்டு. அவற்றையெல்லாம் பட்டியல் படுத்துவது எனது நோக்கமல்ல. போட்டிகளில் பங்கு கொள்வது பணத்துக்காகவுமல்ல. ஆனால் அதைச் செய்பவர்களும் ஓர் அடிப்படை நேர்மை இருக்க வேண்டும். பரிசை அறிவித்துவிட்டு, அதை வழங்காமல் இருந்து விடுவது உருப்படியான காரியமல்ல.

இனப்பிரச்சினை காரணமாக இலங்கைத் தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து உலகெலாம் சென்றது எவரும் அறிந்ததே. இதனால் சர்வதேச சிறுகதை, கவிதைப் போட்டிகளில் நடந்தேறுகின்றன. தேசிய மட்டப் போட்டிகளில் மட்டுமே பரிசு பெற்றிருந்த நான், மிகுந்த ஆர்வத்தோடு, லண்டனிலிருந்து நடாத்திய சிறுகதைப் போட்டியொன்றில் பங்கு கொண்டேன். எனது நோக்கம் நிறைவேறியது. மூன்றாம் பரிசு கிட்டியுள்ளதாகத் தகவல் வந்தது.

எதிர்பார்த்தது போலவே பரிசுக் காசோலையும் வந்து சேர்ந்தது. சான்றிதழ் பின்னர் அனுப்பி வைக்கப்படுமென்றும், அவர்களது பத்திரிகையில் கதை பிரசுரமானதும் பிரதி அனுப்பப்படுமென்றும் எழுதியிருந்தார்கள். இன்றுவரை சான்றிதழும் வரவில்லை. கதை பிரசுரமானதா? என்றும் தெரியவில்லை.

போட்டி நடாத்துபவர்கள் எவ்வளவு பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொள்ள வேண்டுமென்பதை இச்சம்பவங்கள் உறுதிப்படுத்துகின்றன. எல்லாவற்றையும் விடப் பரிசுப் படைப்புக்கள், வெற்றியாளர்களின் சுயம் தானா? என்பதை உறுதிப்படுத்திக் கொள்வது மிக முக்கியமானதென்பதை அண்மைக் காலச் சம்பவங்கள் பல எடுத்துக் கூறுகின்றன.

*வாழும் நினைவுகள்: 40*

# காணாமல் போன கவிஞர்கள்

**எ**ழுபதுகளிலேயே புதுக்கவிதை பிரவாகமெடுத்தது. அதற்கு முன்பெல்லாம் கவிதை என்றால் அது மரபுக் கவிதை தான். அதில் கருத்தோ, உணர்வோ இருந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாலும் இல்லாவிட்டாலும் மரபு இருக்க வேண்டும்.

68-72 காலப் பகுதியிலேயே தினபதி நாளிதழில் கவிதா மண்டலமும் தோற்றம் பெற்றது. இது இளம் கவிஞர்களுக்கான களம். அதன் பொறுப்பாசிரியர் பாலபாரதி இளம் கவிஞர்களோடு உரையாடுவார். அவர் என்ன சொல்கிறார் என்பது இளம் கவிஞர்களின் எதிர்பார்ப்பாகவிருக்கும். இப்படி அழகாக வழி நடாத்திக் கொண்டு வந்த அவர், சொல்லாமல் கொள்ளாமல் காணாமல் போய்விட்டார். இந்தியா போய் விட்டதாகச் சொன்னார்கள். பின்னர் சில காலம் ஈழவாணன் நடாத்தினார். அதன் பிற்பாடு ஏனோதானோ என்ற நிலைதான். பத்திரிகையும் நின்றுவிட்டது.

எவ்வாறாயினும் அந்த ஐந்தாறு வருடங்கள் மிக அற்புதமான காலம். நினைத்து மகிழத்தக்க காலம். இளம் கவிஞர்களை நேரடியாகவோ, கடிதம் மூலமாகவோ பெயர் பெற்ற கவிஞர்களோடு இணைத்து வைத்தது தினபதி கவிதா மண்டலம் தான்.

மூத்த கவிஞர்கள் அவற்றைப் படித்துத் திருத்தி ஆலோசனை வழங்கிச் சிபார்சு செய்ய வேண்டும். அதன் பின்னர் அக்கவிதைகள் அறிமுகம் செய்த கவிஞர் பெயரோடு வெளிவரும். நேரில் சம்பந்தப்பட வாய்ப்புப் பெற்றவர்கள் அதிர்ஷ்டசாலிகள் தான். அந்த வகையில் நானும் ஒருவன். ஏனென்றால் கவிஞர் ஏ. இக்பால் நான் கல்வி கற்ற தர்கா நகர் ஸாகிறாக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றினார்.

அந்தக் கால கட்டத்தில் (1968) தினபதி மதிப்பீடு செய்திருந்த, சிறந்த வாழும் கவிஞர்கள் ஐம்பது பேருக்குட்பட்டவர்கள் தான். 1956ல் தனது முதற் கவிதையை எழுதிய ஏ. இக்பால் பன்னிரண்டே ஆண்டுகளுக்குள் தனது புலமையை நிலைநாட்டி, பத்திரிகை ஜாம்பவான் எஸ்.ரி. சிவநாயகம் ஐயாவின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளார் என்பது இப்போது நினைக்கும் போதும் வியப்பாகவேயுள்ளது.

அப்பட்டியலில் இடம் பெற்றிருந்த மகாகவி, சொக்கன், முருகையன், நீலாவணன், சில்லையூர் செல்வராசன், ஆ.மு. சரிபுத்தீன், ஈழவாணன், பஸீல் காரியப்பர்..... இப்படியாகப் பெரும்பாலானவர்கள் இன்று நம் மத்தியில் இல்லை. கால முதிர்ச்சியும் மரபு வழியும் கொண்ட ஒரு சிலர் தான் அடக்கமாக எங்கள் மத்தியில் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றனர்.

அதே நேரத்தில் தினபதி கவிதா மண்டலத்தைப் பயன்படுத்திக் கொண்ட பலர் இன்று முன்னணிக் கவிஞர்களாகத் திகழ்கிறார்கள். பாலமுனை பாறூக், அன்புடீன், சோலைக்கிளி.... இவர்கள் போதாதா என்ன?

இருந்தும் இதனை உறுதிப்படுத்த ஆவணப்படுத்தலோ அடையாளப்படுத்தலோ இல்லாமல் போனமை கவலைக்குரியதே. இலக்கியச் செயற்பாடுகள் தகுந்த வகையில் பதிவு செய்யப்பட வேண்டுமென்பதை இவ்வாறான சந்தர்ப்பங்களில் தான் உணர முடிகிறது.

கவிதா மண்டலப் பத்தியில் அவ்வப்போது உரையாடிய பாலபாரதி இரண்டு விடயங்களை எமது மனதில் போட்டு வைத்தார். அறிமுகமாகும் கவிஞர்களின் கவிதைகளை உள்ளடக்கிய தொகுப்பு நூலொன்றை வெளியிடுவதாகத் தெரிவித்திருந்தார். அது சாத்தியமாகியிருந்தால், அதனை வைத்துக் கொண்டே எவ்வளவோ விடயங்களைப் பேசியிருக்க முடியும்.

அதே போன்று, இளங்கவிஞர்களையெல்லாம் கொழும்புக்கழைத்து மகாநாடொன்றை நடாத்துவதாகவும் தெரிவித்தார். அதுவும் சாத்தியப்படவேயில்லை.

எங்கெங்கிருந்தோ எழுதிக் கொண்டிருப்பவர்கள் ஒன்றாகக் கூடி, அளவளாவக் கிடைத்தால், அதை விடப் பெரிய ஆனந்தம் என்னதானிருக்க முடியும்?

எப்படியோ வளர்ந்து பெரும் பெரும் கவிஞர்களாகிவிட்டதால், காலப் போக்கில் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டுமென்ற எதிர்பார்ப்பு, இத்தனை ஆண்டுகள் கடந்தும் அவ்வளவாக சாத்தியமாகவில்லை.

பெரும்பாலானவர்களுக்கு இடைநடுவில் என்னதான் நடந்ததென்றே தெரியவில்லை.

ஜெனபர் மௌலானா, கவிவாணன், எஸ். ராஜம் புஷ்பவனம், நீள்கரை நம்பி போன்றவர்கள் காலம் சென்றுவிட்டார்கள்.

சம்மாந்துறை அஸீஸ், நோ. இராசம்மா, ச.பாலதேவி, செந்தீரன், மன்சூர். ஏ. காதர், மு. இ.மு. நஜிமுதீன், இதயஒலி வரதராஜ், சிவாஞான சூரியம் போன்றவர்கள் இடைவிடாது எழுதியவர்கள். முற்று முழுதாகத் தங்கள் எழுத்தை முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டார்கள் போலும்!

செ. சிவானந்ததேவன், கட்டைப் பறிச்சான் கனகசிங்கம் போன்றவர்கள் அவ்வப்போது எழுதுகின்றனர்.

கவிதா மண்டலக் காலகட்டத்தின் இன்னொரு குறிப்பிடத்தக்க இளம் கவிஞர் தான் கருணையோகன். மற்றவர்கள் பொறாமைப்படும் படியாக எழுதியவர். தினபதி நடாத்திய வள்ளுவர் நினைவுக் கவிதைப் போட்டியில், **'வள்ளுவன் புகழ் பாடு'** என்ற தலைப்பில் அறிமுகக் கவிஞனாகக் கலந்து கொண்டு மூன்றாம் இடத்தை வென்றவர். இவர் கூடக் காணாமல் போய் விட்டார்.

அதே வேளையில் இவர் தமிழ் மொழியை அரவணைத்து, கல்வித்துறையில் உயர்ந்து பல்கலைக்கழக மட்டத்தில் பேராசிரியராகச் செயற்படுகிறார். பொதுவாகப் படைப்பிலக்கியம் பற்றியும் குறிப்பாகக் கவிதைத்துறை பற்றியும் நிறையவே ஆய்வு, விமர்சனம், மதிப்பீடென்று காரியமாற்றி வருவது மகிழ்ச்சி தருகிறது. இந்தக் கருணை யோகன் வேறு யாருமேயல்ல, கலாநிதி செ.யோகராசாதான்.

ஆரம்ப காலத்தில் ஆரவாரத்தோடு மரபுக் கவிதை எழுதிய அந்தக் கவிதா முகங்களில் ஓரிருவரைத் தான் காண முடிந்தது. கதைக்க முடிந்தது. தொடர்பு வைக்க முடிந்தது. ஏனையவர்களையும் ஒரு முறையாவது கண்டு விட வேண்டுமென்ற ஆவல் என்றும் மனதிலிருந்து அகலப் போவதில்லை.

Dickwellekamal@gmail.com


'பரன்' அவர்கள் தொடராக எழுதி வந்த 'பேய்க் கூத்தும் ஆமணக்கம் தடியும்' தொடர் இந்த இதழில் இடம் பெறவில்லை

- ஆசிரியர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தமிழகத்தைச் சேர்ந்த முனைவர் மு.பழனியப்பன் அவர்கள் கணினியில் தமிழ் சம்பந்தமான கட்டுரை எழுதுவதில் ஆர்வமிக்கவர். அதையிட்டு பல இணையத் தளங்களில் எழுதி வருபவர். அத்தகைய ஆக்கங்களை பல நூல்களாக வெளியிட்டுள்ளார். அவர் திண்ணை இணைய இதழில் அண்மையில் தமிழும் எனும் தலைப்பில் எழுதிய கட்டுரையை பார்வைக்கு......

# இணையத்தில் தமிழ்

தமிழ் மொழி காலத்திற்கு ஏற்ற வகையில் தன்னை வளர்த்துக் கொண்டே வருகிறது. இன்றைய மிகப் பெரிய தகவல் ஊடகமாக விளங்குவது இணையம் ஆகும். இந்தத் தகவல் சாதனத்திலும் தமிழ் அதிக அளவில் பயன்படுத்தப் பெற்று வருகின்றது. ஏறக்குறைய இணையப் பயன்பாட்டில் தமிழ் மொழி குறித்த தகவல் பரிமாற்றம் உலக அளவில் இரண்டாம் இடத்தில் இருப்பதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இணையத்தில் தமிழ் பற்றி அறிந்து கொள்ள, தமிழ்ச் செய்திகளை அறிந்து கொள்ள பற்பல வாய்ப்புகள் உள்ளன. தமிழில் உள்ள நூல்களை இணையத்தில் வாசிக்கமுடியும். தமிழ் நூல்களை மின்நூல்களாக மாற்றி இணையத்தில் அனைவரும் பயன்கொள்ளும்படிச் செய்யப்பட்டு வருகிறது. இவற்றை மின் நூலகம், இணைய நூலகம் என்று அழைக்கின்றனர். கள்வரால் களவாடப்பட முடியாமல், வெள்ளத்தில் வெந்தணலில் மாளும் தமிழ் ஏடுகள் தற்போது இணையத்தில் ஏற்றி அழியா நிலைக்குச் சென்றுவிட்டன.

மதுரைத்திட்டம் என்ற இணைய தளம் ஏறக்குறைய பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் தன்னுள் மின்பதிப்பாகக் கொண்டுள்ளது. http://www.projectmadurai.org என்ற இணைய தள முகவரிக்குச் சென்றால் இத்தளத்தைப் பார்வையிடலாம். இத்தளத்தின் சிறப்பு உலகளாவிய அளவில் பல தமிழ் அன்பர்கள் ஒன்றுகூடி, அவர்கள் அவர்களாகவே சிலச்சில நூல்களை மின் வடிவமாக மாற்றி ஒட்டுமொத்தமாகத் தந்திருப்பதுதான். இது ஒரு கூட்டு முயற்சியாகும்.

தமிழ் இணையப் பல்கலைக் கழகத்தின் இணைய நூலகம் மிகவும் பயன்பாடு மிக்கது. இதனுள் பல நூறு நூல்கள் சேமிக்கப் பெற்றுள்ளன. நூல்களை அடுத்த அடுத்த பக்கங்களுக்குச் சென்று படிப்பது போல இணையப் பக்கங்களைப் புரட்டி நூல்களைப் பார்வையிட முடியும். மேலும் இந்நூலகத்தில் தேடுதல் வசதி உள்ளது. அதாவது தேடுதல் வசதி என்பது சொல் தேடல் என்பதாகும். திருக்குறளில் ஏதாவது ஒரு சொல் வந்திருக்கும் இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று காண விரும்பினால் இத்தளத்திற்குச் சென்று திருக்குறள் பகுதியை அழுத்தி அதன்பின் தேடல் பகுதியில் தேவையான சொல்லை இட்டால் அந்தச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ள இடங்கள் அனைத்தும் கிடைக்கும். இப்படியே ஒவ்வொரு நூலிலும் தேடல் வசதி தரப் பெற்றுள்ளது. தற்போது தமிழ் இணையப் பல்கலைக் கழகம் என்ற பெயர் உலகத் தமிழ் இணையப் பயிற்சிக் கழகம் என்பதாக பெயர் மாற்றம் பெற்றுள்ளது. இதுபற்றியும் http://www.tamilvu.org என்ற முகவரியில் இத்தளம் இயங்கி வருகிறது. இத்தளத்தில் கலைக்களஞ்சியங்களும் உள்ளன. இவற்றைப் பயன்படுத்தி சொல் வளம் பெற இயலும்.

அடுத்து சென்னை லைப்ரரி (http://www.chennailibrary.com) என்ற தளம் குறிக்கத்தக்கது ஆகும். சிறுகதைகள், நாவல்கள் முதலியனவற்றைப் படிப்பதற்கு இந்தத் தளம் உதவுகின்றது. குறிப்பாக சங்க இலக்கியம், சங்கம் மருவிய இலக்கியங்கள் போன்றவையும் இத்தளத்தில் கிடைக்கின்றன. கம்பராமாயணம் முழுவதும் இதனுள் கிடைக்கின்றது. பெரும்பாலும் இணையத்தில் தற்போது மூல நூல்கள் மட்டுமே கிடைக்கின்றன. உரை நூல்கள் கிடைப்பதில்லை. கல்கியின் நாவல்கள், புதுமைப்பித்தன் கதைகள், ஜெயகாந்தன் படைப்புகள் போன்றவற்றை இதனுள் பெற இயலும்.

அடுத்தும் பொள்ளாச்சி நசன் அவர்களின் தமிழம்.நெட் http://www.thamizham.net என்ற இணைய தளம் பல அரிய பழைய நூல்களைத் தன்னுள் கொண்டுள்ளது. இத்தளத்தில் இன்னும் பல சிறப்புகள் உள்ளன. முன்னூறு தமிழ் அறிஞர்களின் புகைப்படங்கள் கிடைக்கின்றன. மேலும் சிற்றிதழ்களின் கண்காட்சியாக பல சிற்றிதழ்கள் பார்வைக்கு உள்ளன. தமிழில் உள்ள குறிக்கத் தக்க இணையதளங்களுக்கான இணைப்பு தரப்பெற்றுள்ளது. இவ்வகையில் மிக முக்கியமான தளமாக இது விளங்குகின்றது.

இதுபோன்று தமிழ் மரபு அறக்கட்டளை (http://www.tamilheritage.org), நூலகம்.காம் போன்ற பல தளங்கள் வாயிலாக தமிழ் நூல்களை இணைய நூல்களாகக் காண முடிகின்றது. தமிழ் மரபு அறக்கட்டளை இணையதளம் ஓலைச்சுவடிகளை மின்வடிவில் தருவதில் பெரு முயற்சி எடுத்து வருவது குறிக்கத்தக்கது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமண சமய நூல்களினைப் பார்வையிட ஜெயின்வோர்ல்டு .காம் என்ற இணையதளம் பயன்படுகிறது.

தமிழ் விக்கிபீடியா என்ற இணையதளம் தமிழின் கட்டற்ற கலைக் களஞ்சியமாக உள்ளது. தமிழ்மொழியில் உள்ள தகவல்களைப் பெற இத்தளம் மிக முக்கியமானதாகும். மேலும் இதனுள் இடுகை இடுதலை யார் வேண்டுமானாலும் செய்யலாம். யார் வேண்டுமானாலும் திருத்தலாம். அதற்கான வழிமுறைகள் படி நுழைய வேண்டும். இதனை வளப் படுத்தவே தற்போது இளைஞர்களுக்குப் போட்டிகள் வைக்கப் பெற்றுள்ளன.

இணையப் பரப்பில் அடுத்து முக்கியமாகக் கருதத்தக்கது இணைய இதழ்கள் ஆகும். இணையத்தில் மட்டுமே இடம் பெறும் இதழ்களை இணைய இதழ்கள் என்று குறிப்பிடவேண்டும். பிரபல தமிழ நாளிதழ்கள், தமிழ் வார இதழ்கள் அனைத்தும் இணைய முகவரியைப் பெற்றுள்ளன. இருப்பினும் இவற்றை இணைய இதழ்கள் எனக் கருத முடியாது.

இணையத்தில் மட்டுமே செய்திகளைத் தருகின்ற இதழ்களே இணைய இதழ்கள் எனப்படும். அவ்வகையில் குறிக்கத்தக்க தமிழ் இணைய இதழ்களாக கருதத்தக்கனவாக திண்ணை, பதிவுகள், முத்துக்கமலம், வரலாறு. காம், வார்ப்பு, நிலாச்சாரல், தமிழோவியம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். பதிவுகள், நிலாச்சாரல், தமிழோவியம் போன் றன வெளிநாட்டுத் தமிழர்கள் நடத்தும் இணைய இதழ்கள் ஆகும். இவற்றுள் திண்ணை இதழ் மிகச் சிறப்பான இடத்தை வகித்து வருகின்றது. இது வாரம் ஒருமுறை தன் பக்கத்தை மாற்றி அமை க்கிறது. பல இலக்கியச் செய்திகள் இதில் இடம் பெறுகின்றன. வார்ப்பு இதழ் கவிதைகளை மட்டுமே தாங்கி வரும் இதழாகும். இதனுடன் கவிதை நூல்களின் விமர்சனங்கள், மற்றும் நிகழ்வுகளின் அறிவிப்புகள் போன்றனவும் இவ்விதழில் இடம் பெறுகின்றன. இது தவிர இன்னும் பல இணைய இதழ்கள் தமிழ் இணையப் பரப்பில் உள்ளன.

வரலாறு .காம் ttp//www.varalaaru.com/ என்ற இத்ழ் திருச்சி அறிஞர் கலைக்கோவன் அவர்களின் மேற்பார்வையில் நடத்தப் பெற்றுவருகின்றது. இராசமாணிக்கனார் வரலாற்று ஆய்வு மையத்தின் பல செய்திகளை, அரிய புகைப் படங்களுடன் தாங்கி வரும் இணைய இதழ் இதுவாகும். பழைய இதழ் களைக் காணும் வசதியும் இதில் உள்ளது. எனவே இது நல்லதொரு ஆவணமாக விளங்குகின்றது. ஏறக்குறைய ஆயிரம் செய்திகளைத் தொட்டுவிடும் தூரத்தில் இது வளர்ந்து வருகிறது. இது ஒரு மாத இதழாகும்.

செய்திகளை மட்டும் வழங்கும் தமிழ் இணைய இதழ்களும் உள்ளன. தட்ஸ் தமிழ்.காம், எம்.எஸ்.என் வெப்துனியா.காம், யாஹூ தமிழ்.காம் போன்ற தளங்கள் இவ்வகையில் குறிக்கத்தக்கன. இந்நிறுவனங்கள் உலக அளவில் பெருமை பெற்றனவாகும். இவை தமிழிலும் தளங்கள் வைத்திருப்பது தமிழின் இணைய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுவதாக உள்ளது. இவற்றின் வழி உலகத்தின் உடனடிச் செய்திகளை உடனே தெரிந்து கொள்ளமுடிகின்றது.

தமிழ் இணையப் பரப்பில் தற்போது வலைப்பூக்கள் அதாவது பிளாக்கர்



என்ற அமைப்பு மிகச் சிறந்த இடத்தைப் பெற்றுவருகின்றது. கூகிள் என்ற நிறுவனம் பிளாக்கர் என்ற வசதியை வழங்குகின்றது. இந்த வசதி கூகிளின் மின்னஞ்சலான ஜிமெயில் பெற்றிருப்பவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. ஜி மெயில் முகவரியைப் பெற்றுள்ள எவரும் பிளாக்கரைத் தொடங்கலாம். எத்தனை வேண்டுமானாலும் தொடங்கலாம். பிளாக்கரில் புகைப்படங்கள், அசை படங்கள், படக் காட்சிகள் போன்ற எவற்றையும் சேர்க்க முடியும். அவற்றைப் பகிர்ந்து கொள்ள முடியும். பகிர்ந்து கொண்ட செய்திகளுக்கான விமர்சனங் களையும் பார்ப்பவர்கள் வழங்கமுடியும். இந்த வசதி மிகச் சிறப்பானதாகும். வளவு பிளாக்ஸ்பாட்.காம், மானிடள் பிளாக்ஸ் பாட்.காம், இட்லி வடை பிளாக்ஸ்பாட்.காம், மலையருவிபிளாக்ஸ்பாட்.காம், தமிழ்க்கடல் பிளக்ஸ்பாட்.காம் போன்றன இவ்வகையில் குறிக்கத்தக்கன.

இந்த வலைப்பூக்களில் இடம் பெறும் செய்திகளை ஒன்று கூட்டும் அரங்கங்கள் பல உள்ளன. அதாவது ஒருவர் வலைப்பூவில் ஒரு செய்தியைப் பதிவு செய்கிறார் என்று வைத்துக் கொள்வோம் அதனை ஒருங்குகூட்டும் ஒரு அமைப்புக்கு அவர் தெரிவித்து விட வேண்டும். அதன்பின் அந்த ஒருங்கு கூட்டும் இணையப்பக்கத்திற்கு வரும் அனைவருக்கும் அந்தச் செய்தி தெரிய வரும். இதன் முலம் வலைப்பக்கச் செய்திகள் பரவலாக்க முடிகிறது. இந்த ஒருங்கு கூட்டும் இணையப் பக்கங்களில் திரட்டி.காம், தமிழிஷ் .காம், தமிழ் மணம் .காம், தமிழ் வெளி.காம் போன்றன குறிக்கத்தக்கன.

தமிழ் இலக்கியப் பாடல்களைத் தக்க இசையோடு பல இணையதளங்கள் தருகின்றன. இசைத்தமிழை வளர்க்கும் இனிய பணி இதுவாகும். முருகன் குறித்த தமிழ் இலக்கியப் பாடல்களைக் கேட்க வேண்டுமானால் கௌமாரம்.காம் செல்ல வேண்டும். தமிழ் மரபு இசை மாறாமல் திருப்புகழ், திருமுருகாற்றுப்படை போன்றவற்றை இதில் கேட்டு ரசிக்கலாம். பன்னிரு திருமுறைகளையும் மரபு இசையுடன் தேவாரம்.காம் என்பதில் கேட்டு ரசிக்க முடியும். ஓதுவார்.காம் என்பது தமிழக இசைவாணர்களான புகழ்பெற்ற ஓதுவார்களின் இசைவடிவங்களை இணைத்துத் தரும் தளமாகும். இதுபோன்று ஆழ்வார் பாசுரங்கள் ttp//www.maraNsdbg.cbm/ என்ற தளத்தின் வாயிலாகக் கேட்க முடியும்.

இணையத்தமிழ் வானொலி சேவை இன்னும் குறிக்கத்தக்கதாகும். பி.பி.சி தமிழ்ச்சேவை, வேரித்தாஸ்வானொலி, சக்தி பண்பலை போன்றன இவற்றுள் குறிக்கத்தக்கன. இதனுள் மிக முக்கியமான வசதி என்னவென்றால் நாள் தேதி குறிப்பிட்டு வானொலி நிகழ்ச்சிகளைத் திரும்பக் கேட்க இயலும் என்பதுதான். வானொலி நிகழ்ச்சிகளை உரிய நேரத்தில் கேட்க வேண்டும் என்ற கட்டுப்பாடு இவற்றில் இல்லை. தேவையான நிகழ்ச்சியை தேவையான போது கேட்டுக் கொள்ளும் வசதி இதனுள் உள்ளது.

இதுதவிர தமிழ்த் திரை இசைப் பாடல்களைக்கேட்க பல தளங்கள் உள்ளன. தேனிசை. காம், ஓசை.காம் போன்றன இவ்வகையில் குறிக்கத்தக்கன. இவ்வாறு இசைத்தமிழ் பல நிலைகளில் முன்னேறி இணையத்துக்குள் ஆட்சி செலுத்தி வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுதவிர குழந்தைகள் கற்பதற்கான தமிழ்ப் பாடத் தளங்கள் பல உள்ளன. குறிப்பாக தமிழ் இணையப் பல்கலைக் கழகத்தின் தளம் இதற்குப் பெரிதும் உதவுகின்றது. மழலைக் கல்வி முதல் இளங்கலைக் கல்வி வரை அனைத்து நாட்டுத் தமிழரும் கற்கும் வண்ணம் ஒலி, ஒளிக் காட்சிகளுடன் பாடங்கள் இதனுள் அமைக்கப் பெற்றுள்ளன. மேலும் இணைய வகுப்பறை சேவையும் இதனுள் தொடங்கப் பட்டுள்ளது. இதன் வழியாக வகுப்பறைத் தோற்றத்தினை வீட்டில் அமர்ந்து பெற இயலும். இணையவழித் தேர்வுகளும் இதன் வழியாக நடத்தப்படுகின்றன.

மழலைகள்.காம் என்ற தளமும் குழந்தைகளுக்கான தகவல்களை வழங்கி வருகிறது. இதுபோன்று பல தளங்கள் தமிழைக் குழந்தைகளிடம் கொண்டு சேர்ப்பதில் ஆர்வம் காட்டுகின்றன. இதுதவிர தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் தன் பாடநூல்களை இணையத்தில் இட்டுள்ளது. இதன் காரணமாக இந்தப் பாட நூல்களை உலகத்தமிழர் காணும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அவர்கள் குறிப்பிட்ட பாடநூலைத் தன் குழந்தைகளுக்கு வழங்கி அவர்களின் தமிழறிவை வளர்க்க இயலும். இவ்வாறு அடுத்த தலைமுறைக்குத் தமிழ் இணையத்தின் வாயிலாகக் கொண்டு சேர்க்கப்படுகிறது.

இதுதவிர நகைச்சுவைப் பக்கங்களும் உள்ளன. அப்புசாமி. காம் என்ற தளம் பிரபல எழுத்தாளர் பாக்கியம் ராமசாமியால் நடத்தப்படுகிறது. இவரின் கைவண்ணத்தில் எழுந்த நகைச் சித்திரங்களை இவற்றில் வாசிக்க முடியும். இதுபோன்று தனிநபர் இணையப் பக்கங்களும் தமிழில் அதிகமாக வாசிக்கப் பெறுகின்றன. எழுத்தாளர்களான ராமகிருஷ்ணன், ஜெயமோகன், சாருநிவேதிதா போன்றோர் தனக்கான இணையப் பக்கங்களை உருவாக்கியுள்ளனர். இதனுள் வாசகர்களுடனான உரையாடலையும் அவர்கள் நிகழ்த்துகின்றனர்.

சமையல் குறிப்புகள், ஜோதிடக் குறிப்புகள் போன்றவற்றைத் தமிழில் தரும் தளங்களும் உள்ளன.

மின்அஞ்சல் குழுமங்கள் என்ற குழு அமைப்பும் இணையத்தமிழுக்குப் பெருமை சேர்த்து வருகின்றது. அதாவது மின் அஞ்சலை ஒரே நேரத்தில் பலருக்கு அனுப்பலாம். இதற்குக் குழு மடல் என்று பெயர். இந்தக் குழு மடல் போலவே ஒரு குழுவை மின்அஞ்சல் காரர்கள் உருவாக்கிக் கொள்வார்கள். இதில் இணைவதற்கு உரிய நடைமுறைகளைச் செய்துவிட்டால் ஒருவர் மின்மடல் குழுமத்தில் உறுப்பினராகிவிடலாம். பின் ஒருவர் இடும் மடல் அனைத்து உறுப்பினருக்கும் கிடைக்கும். ஒரு செய்தியைப் பற்றி அனைவரும் விவாதிக்கலாம். இந்த முறையில் முத்தமிழ்குழுமம், மின்தமிழ் குழுமம் போன்ற மிகச் சிறப்பாக இயங்கி வருகின்றன. இவையும் பல இணையத் தமிழ் விவாதங்களுக்கு களம் அமைத்துத் தருகின்றன.

மொத்தத்தில் உலக அளவில் தமிழின் தரத்தை உயர்த்த இணையத் தமிழ் உதவி வருகின்றது. இதனைச் சரியான பாதையில் கொண்டு செல்ல வேண்டிய கடமை அனைத்து தமிழ் இணையப் பக்கங்களுக்கும் உண்டு.



கோவையில் ஜூன் மாதம் நடைபெறவுள்ள- செம்மொழி மாநாடு பற்றியது.

# தமிழ்ச் செம்மொழி மாநாடும்- தடம் மாறும் சில பேரறிஞர்களும்!

**-பிரகலாத ஆனந்த்**

**த**மிழ்ச் செம்மொழி மாநாட்டைக் கலைஞர் கருணாநிதி தலைமையிலான தமிழக அரசு நடாத்துவது பற்றிப் பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் தமிழகத்திலும், இந்தியாவிலும், தமிழ் மக்கள் வாழும் தேசங்களிலும் நிகழ்ந்த வண்ணமே இருக்கின்றன. இலங்கைத் தமிழருக்குத் தமிழகம் செய்த பச்சைத் துரோகத்தின் மூலம் கறைபூசப்பட்ட தன் முகத்தைச் செம்மைப்படுத்தவே இந்த மாநாட்டைக் கருணாநிதி நடாத்துவதாகவே பலரும் கருதுகின்றார்கள். இதில் வேடிக்கையும், வேதனையும் என்னவென்றால், நமது மதிப்புக்குரிய பேராசிரியரும், தமிழ்க் கடலுமான முனைவர் கா. சிவத்தம்பி இதற்கு ஆதரவாக இருந்து செயற்படுவது தான். தனது தளர்ந்த உடலையும் தேக வருத்தங்களையும் கூடப் பொருட்படுத்தாமல், பேராசிரியர் முழு மூச்சுடன் இம் மாநாடு வெற்றி பெற அயராது உழைக்கின்றார்.

தமிழுக்கு ஒரு விழா என்றால், அதற்குத் தோள் கொடுக்க வேண்டியது ஒவ்வொரு தமிழனின் கடமையுந் தான்! ஆனால், இந்தச் செம்மொழி மாநாடு தமிழுக்காக நடைபெறவில்லை. கருணாநிதியின் தமிழ் பற்றியது போலித்தனத்தை தமிழ் முகமூடி கொண்டு மறைப்பதற்கான முஸ்தீபு தான் இந்த ஆடம்பர மாநாடு. ஒரு தமிழ்த் தலைவனாக இருந்து கொண்டு, அண்டை நாட்டில் சகோதரத் தமிழர்கள், அதுவும் தான் அங்கம் வகிக்கும் மத்திய அரசின் ஆசீர்வாதத்துடனும், உதவிகளுடனும் கொன்று குவிக்கப்படும் அவலத்தை ஏற்றுக் கொண்டவராகச் செயற்பட்டார். முன்னர் அவர் அறிவித்தது போல, அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் பதவி விலகியிருந்தால், இந்திய நடுவண் அரசு ஆட்டம் கண்டிருக்கும். அத்துடன் இலங்கையில் யுத்தக் கொலைகளும், அழிவுகளும் தமிழ்ப் பகுதிகளில் நிகழ்ந்திருக்காது. இந்த நிலையில் கருணாநிதி இலங்கைத் தமிழருக்கு மட்டுமல்ல, அவர்களுக்காக கிளர்ந்தெழுந்த கோடானு கோடி தமிழர்களின் உணர்ச்சிகளைக் கண்டும், உணர்வற்றவராக இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டார். அவர் ஆடியதெல்லாம் வெறும் நாடகம் தான். வார்த்தைகள் எல்லாம் வெறும் வெற்றுக் கோடுகள் தான். ஈழத் தமிழரெல்லாம் நீலிக் கண்ணீர் தான். தனைக் காவத்தைக் கழுவிக் கொள்ளவும், கனிவைத் திரை மூடி மறைக்கவும் போடப்பட்ட வேடம் தான் இந்தச் செம்மொழி மாநாடு. இதற்கு ஒரு பழுத்த தமிழ்ப் பேராசிரியர் கருணாநிதிக்குத் தேவைப்பட்டார். கடல் கடந்தும் தன் அறிவினால் புகழ் பூத்த எமது மதிப்புக்குரிய பேராசிரியர், தமிழக அரசின் வலையில் சிக்கிவிட்டார், அவ்வளவுதான். உலகளாவிய ரீதியில் பேராசிரியருக்கு இருந்த நற்பெயரை இதனால் ஓரளவு உடைத்தெறிந்துள்ளார்.

தமிழ் மொழியின்றி தமிழன் இல்லை. அதுபோல தமிழன் இன்றி தமிழ் மொழியும் இல்லை. தமிழர்களை வேரோடு சாய்த்த பேரினவாத அரசுக்கு முட்டுக்கொடுப் பண்ணையில் வாழ்ந்த, முன்போக்கான ஒரு பேராசிரியர் துணை போவதுதான் பெரியதொரு மனக் கஷ்டம்! செம்மொழி என்பதற்கு, 'தொன்மை மொழி' என்று அடிக்கோடிட்டு அறிவு மேதையான பேராசிரியரின் அறிவு, தமிழரின் துயரத்தை மறந்து ஏன் போலிகளுக்குத் துணை போனது?

பிறமொழிகளின் கலப்பின்றிப் பேசக் கூடிய மொழி, தமிழ். ஆனால், இன்றைய நிலை என்ன? தமிழை ஆங்கிலம் ஆக்கிர மித்து, 'தமிங்கிலம்' என்ற புதுமொழி உரு வாகிறது. தமிழ் மெல்ல இனிச் சாகும் என்ற பாரதி வருந்திய கூற்று நிறைவேறப் போவதுதான் நிஜம். ஆறேழு கோடி தமிழர்கள் வாழும் தமிழ் நாட்டில் தமிழுக்கு உரிய இடமில்லை. ஆரம்பக் கல்வி கூட, ஆங்கிலத்தில் கொடி கட்டிப் பறக்கும் அவலம். இந்த இடத்தில் இலங்கை எவ்வளவோ மேல்! இது கூட வேண்டாம். தமிழை ஒரு பாடமாகவாவது கற்பிக்கும் நிலை பல ஆங்கில மொழி மூல தமிழகப் பாடசாலையில் இல்லை. இலங்கையில் சாதாரண தரப் பரீட்சையில் தாய்மொழி கட்டாயமாகச் சித்தியடைய வேண்டும். தமிழ் எனது உயிர் என்று சொல்லிக் கொண்டு, தமிழ்க் கடலிலே மூழ்கிப் போய் விட்டாரா, கருணாநிதி? தமிழகத்தில் ஆங்கிலம் கலக்காது தமிழைப் பேசுபவர் களைக் காண்பது அரிதாகி வருகிறது. தமிழை வளர்ப்பதற்கு எதுவித நடவடிக் கைகளையும் மேற்கொள்ளாது, தமிழைச் சொகுசாக ஆரம்ப வகுப்புகளிலிருந்து கற்பிக்காது, செம்மொழி மாநாடு நடாத்தித் தமிழை வளர்க்கப் போவதாகக் கூறும் கபடத்தனம் எமது பேராசிரியருக்குப் புரிய வில்லையா? தமிழியல் ஆய்வுகளையும் மேற்கொள்ளாமல், ஆய்வு நிலைப்பட்ட பிரச்சினைகளுக்குள் இறங்காமல் இச் செம்மொழி மாநாடு நடப்பதையும், 'தமிழா ராய்ச்சி மாநாட்டைத் தொடர்ந்து நடத்தாமல் இருக்கும் இந்த நிலையிலும் செம்மொழி மாநாடு நடாத்துவதையும், எமது பேராசி ரியர் எவ்வாறு ஏற்றுக் கொள்கிறார் என்று எமக்குப் புரியவேயில்லை.

தமிழகத்தில் மின்னியல் ஊடகங்கள் அனைத்தும் தமிழை செம்மொழி நிலை யிலிருந்து தகர்த்து வருகின்றன. தமிழ்க் கொலை ஒருபுறம். அழகான தமிழ்ச் சொற் களை இருக்கும் போது, அதை விடுத்துத் தமிழைச் சிதைக்கின்றனர். ஆங்கிலச்



சொற்களைக் கலந்து பேசி, மக்களையும் இவ்வாறு பேச வைப்பது மறைமுகமாகத் தமிழின் அழிவு ஆரம்பித்து வைக்கப்பட் டுள்ளது. இதற்குத் துணை போகும் தொலைக்காட்சியில் கலைஞர் குடும்பத் துத் தொலைக்காட்சி தான், முன் நிலை வகிக்கிறது. ஆங்கிலத்தைத் தமிழி லிருந்து களையெடுத்து, தமிழைச் சிறப் பாகப் முதல் போதித்து, தமிழுக்குச் செய்ய வேண்டிய அடிப்படைப் பணிகள் இங்கு எவ்வளவோ இருக்கின்றது. செம்மொழி மாநாட்டுக்காகச் செலவிடும் முந்நூறு கோடியில் முப்பது கோடியையாவது இதற் காகச் செலவிடலாமே?

தேவையற்ற ஆங்கில மோகத்துள் மூழ்கி தமிழ் கலப்படமாகி வேற்று மொழி யாகின் வேட்டைக் காடாகத் தமிழகம் மாறியுள்ளதாக மூத்த தமிழறிஞர் கள் கூறுவதை நாம் மறுக்க முடியாது. அவர்கள் குறிப்பிடுவதை நாம் மனம் கொள்ள வேண்டும். ஆரம்பப் பள்ளி களிலேயே தமிழ் மொழியை வளர்ப் பதற்கு மேற்கொள்ளாமல் வெறுமனே இப்படிப்பட்ட வேலைகளில் பல தமிழர் களை ஏமாற்றும் கைங்கரியம் தான் இந்த மாநாடு. செம்மொழித் தமிழுக்கு செய்ய வேண்டியவற்றை விடுத்து, வெறுமனே தமிழ் மொழியின் அவலத்தைக் கண்டு கொள்ளாமல், கண்துடைப்புக்கு நடாத்தப் படும் விழாவுக்கு எமது மதிப்புமிக்க சிறந்த அறிவும், பேரறிவும் கொண்ட பேராசிரியர் துணையாக நிற்பது, உண்மையாகவே ஆழ்ந்து சிந்திக்கத் தக்கதொன்றாகும்.

மல்லிகை இதயம் நிறை வாழ்த்துகிறது!



மல்லிகை ஆசிரியரின் பேரனும், திரு. திருமதி பிரசன்னா ஜீவா தம்பதியின் சிரேஷ்ட புத்திரனும் கனிஸ்ட பிரஜையுமான செல்வன் அஸ்வின் அவர்க ளுடைய முதலாவது பிறந்த தினம் வெகு விமரிசையாக 8.5.2010 ல் வெள்ளவத்தை ஹோட்டல் சபையரில் கொண்டாடப்பட்டது.

செல்வன் அஸ்வினை மல்லிகை மன நிறைவுடன் வாழ்த்தி, மகிழ்கின்றது.

ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்தும் ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள எடுக்கும் அரசியல் மாநாடு!

**-டொமினிக் ஜீவா**

இந்தப் பாமரனின் அநுபவக் கருத்தை நான் ஆழமாகப் பார்க்கும் பொழுது, கலைஞர் கருணாநிதியின் இன்றைய எதார்த்த மன நிலைதான் எனது ஞாபகத்திற்கு வருகின்றது.

இவரது ஆரம்ப அரசியல் கால கட்டத்தில் இருந்தே தன்னைத் தானே முதன்மைப் படுத்தியதாகவே இவரது கட்டங் கட்டமான வளர்ச்சிக் காலங்கள் முன் நகர்த்தப்பட்டு வந்துள்ளதை நாம் அவதானிக்கலாம். அந்தக் காலத்திலிருந்தே இவர் தனக்குத் தனக்கென்றே சில வழிமுறைகளைக் கையாண்டு, தன்னைத் தானே வளர்த்தெடுப்பதில் தனிக் கவனம் செலுத்தி வந்துள்ளார். இயக்கங்களுக்கே இயல்பான கூட்டு ஒத்துழைப்பு இவரிடம் இருந்ததேயில்லை.

இது சம்பந்தமாக இவரது சமகால அரசியல் சகாவான கவிஞர் கண்ணதாசன் தனது சுய வரலாற்றில் பல தகவல்களை வெகு தெளிவாகக் குறிப்பிட்டு எழுதியுள்ளார்.

எதிலும் தன்னைத் தானே முதன்மைப் படுத்துவதும் சிலரது தனிக் குணங்களில் ஒன்று. தனது சுய பெயரைப் புறம் தள்ளி, கலைஞர்..... கலைஞர் என்றே தன்னைப் பிரபலப் படுத்துவதில் தனிக் கவனமும் செலுத்தி வருகின்றார். அதே பெயரில் பிரபல தொலைக்காட்சி அமைப்பையும் நிறுவி, பாமர மக்களிடம் தனது இயற்பெயரையும் ஒரேயடியாக மறைக்கத் தெண்டித்துள்ளார்.

இது ஒரு தாழ்வுச் சிக்கல்!

இந்தத் தாழ்வுச் சிக்கல் மனப்பான்மை தான் தமிழகத்தில் இவரது உண்மைப் பெயரை முதன்மைப்படுத்திச் சொல்ல பலமான தடையாக அமைந்திருந்தது. இவரது அசுர வளர்ச்சிக்கும் பிரபல்யத்திற்கும் அதுவே தூண்டுகோலாகவும் அமைந்திருக்கின்றது.

இன்று, இந்த மனப்பான்மை தான் கடந்த காலங்களில் பல துறைகளிலும் பெயர் பதிக்க, அரசியல் அதிகாரம் பெற உதவியதோ, அதே மனப்பான்மை தான் இன்று இவருக்குச் சத்துராதியாகவும் அமைந்து விட்டுள்ளது.



திட்டம் போட்டுக் காய் நகர்த்துவதில் அசகாயச் சூரனிவர். இயக்கத்தில் மூன்றாம் நான்காம் கட்டத்தில் உள்ளவர் என வெகுசனங்களால் அன்று கணிக்கப் பட்ட, இவர். தமிழக முதல்வர் அண்ணா வின் மறைவுக்குப் பின்னர் தமிழக முதலமைச்சராகவே முடி சூடப் பெற்று, தமிழகத்தின் தலைவராகத் தன்னைத் தானே பிரகடனப்படுத்திக் கொண்ட மகா திறமைசாலி. அதிசயிக்கத் தக்க மூளைசாலி!

மூத்த மகன் முத்துவை எம்.ஜி.ஆர்- அனுசரணையுடன் சினிமாத் துறைக்குள் உள் நுழைந்து, பிரபலப்படுத்த ஆரம்பத் திட்டம் தீட்டினார்.

அத்திட்டம் தோற்றுப் போய்விட்டது.

தொடர்ந்து சொந்தக் குடும்பத்தையே அரசியல் மயப்படுத்தி, தி.மு.க.வின் தலை மைப் பீடத்தைத் தனது குடும்பச் சொத் தாகவே ஆக்கக் காரியமாற்றி வருபவர்.

1971-ல் தமிழ் ஆராய்ச்சி மாநாடு தமிழக முதலமைச்சர் எம். ஜி. ஆரின் தலைமையில் மதுரையில் வெகு சிறப் பாகவும் கோலாகலமாகவும் சும்மா ஜாம்.... .ஜாமென நடைபெற்றது. நானும் போயி ருந்தேன்.

தான் இத்தனை ஆண்டுகள் தமிழக முதல்வராக இருந்த போதிலும் கூட, அப்படியொரு சர்வதேசப் பொதுவிழாவுக் குத் தலைமை தாங்க இயலவில்லையே என்ற மெய்யான ஆதங்கம் இவருக்கு. தான் பதவி வகிக்கும் கடைசிக் காலத் திலேயாவது தமிழின் பெயரால் மிகப் பிர மாண்டமானதொரு மாநாட்டை நடத்தியே முடிக்க வேண்டும் எனத் திட்டம் போட்டார். அதுதான் கோவையில் நடை பெறவுள்ள **செம்மொழி மாநாடு!**

பாரம்பரியமான தமிழாராய்ச்சி மகாநாடு நடத்தக் கூடிய சூழ்நிலை இப்போது வாய்ப்பாக இல்லை.

முதல்வர் பதவி விலக இன்னமும் சொற்ப காலம் தான் உண்டு. இந்த இடைக் கால வாய்ப்பைப் பயன்படுத்தி, தானும் ஒரு தமிழ் இலக்கிய விழாவைச் சாதித்து விட வேண்டும் என்ற நீண்ட நாளை மன ஆசை, இவருக்கு

ஒரு தனி மனிதனின்- அவன் எத் தனை தான் கொம்பனாக இருக்கட்டுமே- அந்தத் தனி மனிதனின் தனி மனித ஆசையை நிறைவேற்றத் தமிழ் மொழி இடந் தரவே கூடாது. தமிழனின் பணம் செலவு செய்யக் கூடாது.

தமிழ் மொழி, தமிழ் மக்கள் அனைவரி னதும் பொதுச் சொத்து. அம்மொழி தமி ழகத்தினருக்கு, அதிலும் அரசியல் அதிகா ரம் படைத்தவர்களுக்கு மாத்திரம் தனிச் சொத்துடமையல்ல. சொந்தமானதுமல்ல!

அது மக்களின் மொழி. மக்களால் தொடர்ந்தும் வளர்த்தெடுக்கப்பட வேண் டிய சர்வதேச மொழி.

ஒரு காலத்தில் தமிழகம், இலங்கை, மலேசியா போன்ற நாடுகளில் தான் நம் மொழி பேசப்பட்டது. எழுதப்பட்டது. இன்றோ நம் மொழி 32 நாடுகளின் தலை நகரங்களில் பேசப்படுகின்றது. தமிழ்ச் சஞ்சிகைகள் நடத்தப்படுகின்றன. நம் நாட்டிலிருந்து புலம் பெயர்ந்த சகோதரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னின் அயராத உழைப்பினால் சர்வதேச அங்கீகாரம் பெற்றுள்ள நம் தொன்மையின தம் தாய்ப் பாலை, தமிழ்!

இந்தச் செம்மொழி உலகத் தமிழ் விழாத்தானா? இந்தியத் தமிழ் விழாதானே வேலே! அப்படியானால் இலங்கையில் இருந்து வெளிவரும் தமிழ் நாளிதழ்களின் வரு கையைத் தடை செய்த அரசு தான் செய் துள்ளதே, இதைக் கண்டித்துத் தீர்மானம் எடுக்குமா, இந்த விழா? தமிழ் மொழி. உருது, இந்தி, தெலுங்கு, மலையாளம் போன்ற வெறும் இந்திய மொழி மாதிரி யல்ல. அது இன்று சர்வதேசப் பாலை!

ஒரு சிலரது ஆட்சி வரலாற்றுக்கு ஊடாக நம் மொழி, அன்னாரது குடும்பம் ஆட்சி அதிகாரத்திற்கு வழி அடிப்பிடியாக மாறி விடக் கூடாது, என்பதே நமது பெரு விருப்பமாகும், நோக்கமுமாகும்.

நமது நாட்டைச் சேர்ந்த சில ஆய்வாளர்களும்; புத்திமான்களும் அரசி யல் தலைவர்களின் இடைக்கால நாடகங்களுக்குத் தற்காலிகமா கக் கூட இடம் விட்டு போகலாம்.

இதற்கிடையே நம்ம முதுபெரும் பேராசிரியரைப் பற்றியும் நமது கணிப்பைப் பதிவு செய்திட வேண்டும்.

விமர்சனத்துக்குள்ளேயே நீண்ட தொரு காலமாக முடங்கிப் போய்க் கிடந்தவர், தம்மவர். உடல் உபாதையால் வெளி போக்குத் தொடர்புகள் கிடைக்காமையாலும், எழுத்தையும் படிப்பையுமே துணையாகக் கொண்டு இயங்கி வந்தவர், பேராசிரியர் சிவத்தம்பி.

இப்படி நெடு காலத் தொடர்பற்றுப் போக்கள் உறவற்று - தனிமைப்படுத்தப் பட்டுத் தேங்கிப் போயிருந்தவருக்குத் தமிழக முதலமைச்சரின் வரவேற்பும் பாராட்டு மொழியும் புதுத் தெம்பையும் புதுப் புது உற்சாகத்தையும் நல்கியது என்னமோ உண்மைதான்.

எனினும் பங்களிப்புக் கூட வரலாற்றுப் பார்வையுடனும், தீர்க்க தரிசனத்துடனும் ஆழமாக் கண்ணோட்டத்துடனும் தனது பக்கத்து நியாயத்தைக் கூறிச் சப்பைக் கட்டுக் கட்டத் தெரிந்தவர் தான், இந்தப் பேராசிரியர். முதலமைச்சர் இவரை முக்கியப் படுத்துவதிலும் ஒரு நோக்கமி ருக்கிறது. இலங்கைப் பிரச்சினையில் முதல்வருக்குப் பல எதிர்ப்புகள் இருக் கின்றன. இவரது இந்த நியமனத்தின் மூலம் அதைத் தற்காலிகமாகச் சமாளித் துக் கொண்டுள்ளார்.

ஆனால், நாளைய வரலாற்றுக்கு இந்தக் கல்விமான்கள் பதில் சொல் லியே ஆக வேண்டும்.

என் இனிய தாய் மொழியைக் காட்டி லும் மேலானது, நாடா, தேசியமா எனத் தோட டங்களிலும் பேசிப் பேசி, இன்று வரையும் சாகாமல் காத்து வளர்த்து வரும் மக்கள், பாமரத் தமிழ் மக்களே.

படித்தவர் தம் தம் வசதி கருதி, புதுப் புதுக் கதையில் பேசலாம், எழுதலாம். வசதி வாய்ப்புக்களைப் பெருப்பித்துக் கொள்ள லாம். அரசியல் அதிகாரமும், அதனால் லாபமும் அடையலாம்.

உண்மையான மொழி ஆர்வலர்கள



மூத்த தமிழன், நம்நாட்டு மூலைச் சுவரில் எழுதினான். அதைப் பின் வந்தவன் பாதுகாத்தான். செழுமைப்படுத்தினான். செதுக்கிச் செதுக்கி, உயிரூட்டினான்.

அதனால் தான் இன்று வரை நமது மொழி செந்தமிழாக மிளிர்ந்து வருகின்றது.

வள்ளுவன் ஆட்சிக் கட்டிலை எதிர் பார்த்து எழுதவில்லை. கம்பன் தமிழை முன்னிறுத்திக் குடும்பச் சொத்தாக அரசி யலை ஆக்கித் தரவில்லை. பாரதி எழுதி னான்.... எழுதினான். பாடினான். பசுமைப் பித்தன் சுமார் கடைசியில் தமிழில் கிறு க்கி வைத்தான். இவர்கள் அனைவருமே தமிழுக்கு விழாவேதும் நடத்தியதே யில்லை. தமிழ் செம்மொழி எனக் கப்பாடு போட்டு அரசியல் அதிகாரம் தேடவில்லை.

இருந்தும் சரியான வழியில் சிந்தித்துப் பேசப் பிடித்த காரணத்தால் தான். இன்று வரை நம் தமிழ் வளர்ந்து கொண்டே இருக்கின்றது.

முடிவாக, முதலமைச்சர் கருணாநிதி அவர்களுக்கு இலங்கைக் கலைஞர்கள் சார்பாக ஒரு வேண்டுகோள்: கலைஞர் என்பது கலைஞர்களுக்கான ஒரு பட்டமே தவிர, அது ஒரு பெயரேயல்ல. தமிழ்க் கலைஞர்களுக்கான பொதுச் சொல். அது! நீங்கள் உங்கள் உண்மைப் பெயரைப் பின் தள்ளி பின் தள்ளி, பயன்படுத்தாமலேயே கலைஞர் என்ற பெயரே உங்களது உண்மைப் பெயர் போல, பொது மக்கள் பொதுவாகக் கருத அடிக்கடி அழுத்தி வருகின்றீர்கள். இது பொதுவாகக் கலைஞர்களை வருங்காலத்தில் பெரிதா கப் பாதிக்கும் என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

## பவள விழாக் கண்ட தெளிவத்தையை மல்லிகை மனங்கனிய வாழ்த்துகின்றது




நமது முதுபெரும் எழுத்தாளர் **தெளிவத்தை ஜோசப்** அவர்களுக்கு இவ்வாண்டு பவள விழா ஆண்டாகும். இதைக் கொண்டாடும் நிமித்தமாக **'ஞானம்'** சஞ்சிகை ஒரு விசேஷ மலரொன்றை வெளியிட்டுள்ளதுடன், 16.05.2010அன்று அம்ம லர் வெளியீட்டை 'ஒகோ' என நடத்தி எழுத்தா ளனுக்குத் தனிப் பெருமையை நல்கியுள்ளது.

மல்லிகை ஆசிரியரும் இவ்விழாவில் கலந்து கொண்டு, விழா நாயகனை வாழ்த்தினார்.

- ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசி வீடு

-தீட்சண்யா

நான் வயசு போன மாமியாராம். எனக்குத் தன்னிலை பொறாமையாம். என்ரை மருமகள் சொல்லிப் போட்டா. நானென்ன அவவிலை பொறாமைப்படுற அளவுக்கு அவ வடிவோ என்று எனக்குச் சிரிப்புத் தான் வருகுது. அதுக்காக அவவை நான் மதிக்காமை இருக்கிறதில்ல. அவ நிறம் கொஞ்சம் குறைவென்றாலும் அவவின் வடிவு எனக்குப் பிடிச்சதாலைதான் என்ரை கடைசிப் பொடியனுக்கு இவவைச் செய்து வைச்சனான். என்ரை மூத்த பிள்ளையள் ரண்டு பேரும் என்னை மதியாமல் தாங்களே விரும்பிக் கட்டினாங்கள். இவன் ஏதோ என்ரை சொல்லைக் கேட்டதிலை எனக்கு திருப்திதான். இப்ப என்னடா எண்டால் மருமகள் அடிக்கடி முணுமுணுக்கிறா! தொடக்கதிலை எல்லாம் என்னையே சுத்திச் சுத்தி வந்தவ. எல்லா வேலையளையும் அலுக்காமச் செய்தவதான். ஆனா, இப்ப ஏன் என்னை வெறுக்கிற. அது சரி, எனக்கும் வயசு போட்டுதுதானை! இப்ப சண்டை பிடிக்கிற அளவுக்கு எனக்கும் ஏலாதெண்டும் அவவுக்குத் தெரியும். என்ரை பிள்ளையும் என்னிலை நல்ல விருப்பம். இப்ப கொஞ்ச நாளா, அவனிண்டை போக்கும் சரியில்ல. இவதான் இப்ப கொஞ்ச நாளா என்னைப் பற்றி ஏதோ சொல்லுறா போலை கிடக்குது! அவனும் வேலையாலை களைச்சுப் போய் வாறவன் தானே. அங்கையும் சரியாக் கஷ்டப்படுறவனாம். இஞ்சை வந்த, அவ சாதாரண விசயத்தைக் கூட, சொல்லிப் போடுவா. இத்தனைக்கும் நான் அவவை கடுமையாப் பேசுறதே இல்லை. முந்தியெல்லாம் எனக்கு கலியாண வீடு முடிய என்ரை மாமியார் என்னை நல்லா கவனிச்சவ. தன்ரை மகளைப் போலை தான் பாத்தவ. இடைக்கிடை கோபம் வந்தாலும், அவ நல்லவ. அப்பவே நானும் நினைச்சுப் போட்டன். ஒரு காலத்திலை நானும் மாமியாரானா இப்பிடித்தான் இருக்க வேணுமெண்டு. ஆனா, அப்பிடி நினைச்சது தான் பிழை போலை கிடக்குது. அவ வேலைக்குப் போகேக்கை அவசரப்பட்டு தானே எல்லாம் செய்ய, எனக்கே ஒரே அந்தரமாய் இருக்கிறதாலை, சமையல் எல்லாம் கூட நானே தனியக் கவனிச்சுக் கொண்டு வந்தனான். பிள்ளை அவவுக்குப் பிறக்கப் போகது எண்டவுடனை கூட, என்ரை பிள்ளை போலத்தான் அவவைப் பார்த்தனான். பிறகு அந்தப் பிள்ளையை, முழுக்க நான் தான் கூட நேரம் கவனிக்க வேண்டியதாப் போட்டுது. நானும் சமாளிச்சு, என்னாலை முடிஞ்ச வரை செய்தனான். இப்ப அவனுக்கு நாலு வயசாகுது. இப்ப அவவுக்கு அடுத்த பிள்ளை பிறந்திட்டா. என்னாலை இப்ப முந்தி மாதிரி எல்லாம் நடக்க முடியேல்லை. அடிக்கடி டொக்ரறிட்டை போக வேண்டியிருக்குது. அதாலை இரண்டாவது பேத்தியைக் கூடக் கவனிக்க ஏலாதாம். எனக்கும் விருப்பம், தான் அவளையும் கவனிக்க, ஆனா என்ன செய்யிறது? அதுக்கெல்லாம் ஒரு கொடுப்பினை வேணும் போலையெல்லோ கிடக்குது.



என்ரை வருத்தங்களாலை நானும் செய்யிற வேலையளை எல்லாம் குறைச்சிப் போட்டன். அதாலை தான் மருமோளுக்கு என்னைப் பிடிக்கிறேல்லையோ தெரியேல்ல. அண்டைக்கு இப்பிடித்தான் பிள்ளை அழுது கொண்டிருந்திது. இவவையும் காணேல்லை. நான் மெல்லமா எழும்பிப் போய்த் தூக்கத்தான் நினைச்சனான். ஆனா, இப்பெல்லாம் தடி இல்லாம என்னாலை நடக்க முடியிறதில்ல. எழும்பவே ஏலாமக் கிடந்துது. மருமோளைக் கன நேரமாக் கூப்பிட்டும் பதிலேதுமில்ல. நானும் எவ்வளவு நேரம் தான் பார்த்துக் கொண்டிருக்கிறது. மெல்ல மெல்லமா நான் கஷ்டப்பட்டு எழும்பத்தான் அவ வந்தா.

"என்ன இது?..... பிள்ளையை ஒருக்காக் கவனிச்சாக் குறைஞ்சு போடுவியளோ.....? அழுறது கூடத் தெரியாமத்தான் கேட்கிறன்"

சத்தமாக முணுமுணுத்தபடி தொட்டிலில் கிடந்த பிள்ளையைத் தூக்கினா.

"என்னம்மா இது பிள்ளையை இப்பிடி தனிய விட்டிட்டு உன்ரை பாட்டிலை திரியாதை. உன்ரை பிள்ளை தானை? உன்னைப் பாத்திட்டு எப்பிடி அழாமப் படுக்கிறா பார்..... நீ என்ன.....?" நானும் கோபத்திலை கொஞ்சம் சொல்லிப் போட்டன்.

"உங்களுக்கும் அவ பேத்தி தானை? ஒரு கொஞ்ச நேரம் கவனிச்சா என்ன?" அவ சத்தம் போடத் தொடங்கிற்றா. இதுக்கு மிஞ்சி எப்பிடி அவவுக்கு விளங்கப்படுத்துற தெண்டு எனக்குத் தெரி யேல்லை.

"சத்தம் போடாதையம்மா. அக்கம் பக்கம் இந்தக் கிலிசகேட்டைக் கேட்டால் போகுது" நான் சொல்ல,

"அப்பத் தானை மாமியாரைப் பத்தி அயலட்டைக்குத் தெரிய வரும்" சொல்லிப் போட்டு வெடுக்கென்று அங்காலை போட்டா. அப்பவே எனக்கும் விளங்கிட்டுது. இவ என்ரை மகன் வர ஏதாவது சொல்லிடுவா எண்டு. அப்பிடித்தான் நடந்தது. அவன் வந்தவுடனை இவ கண் கலங்க ஒண்டும் கதைக்காம இருந்தா. பிறகு திடீரென்று,

"உதுக்குத் தான் அப்பவே அம்மா என்னட்டை சொன்னவா. உங்கை போகதை எண்டு, நான் தான் கேக்கேல்ல. எனக்கு இதெல்லாம் தேவை தான். உங்கடை அம்மாக்கு என்னைக் கண்டாலே பிடிக்கிறதில்ல. நான் என்னத்தைச் செய்யிறது?" எண்டு அழுதழுது சொன்னா.

அவன் ஏற்கனவே களைச்சுப் போய் வந்து நிக்கிறான். சாப்பாடு கூடக் குடுக்காம இவ கதைக்கிறா. என்ன பொம்பிளை இவ? எண்டு எனக்கே அவவிலை கடுமையான கோபம் வந்திட்டுது.

"டேய்! நீ முதலல்ல சாப்பிடு. பிறகு உதுகளைக் கதைக்கலாம்" நான் சொல்ல, அவன் என்னை முறைச்சுப் பாக்கிறான்.

"மனுசர் களைச்சுப் போய் வீட்டை வந்தா வீட்டையும் நிம்மதியில்ல.... சீ....!"

அவனின்டை வெறுப்பு குரலிலை விளங்குது

"இண்டைக்கு முடிவு தெரிய வேணும். உங்கடை அம்மாவை... ஆ..... அத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையா வாங்கடை தங்கச்சி வீட்டை விட்டா நல்லாம் தானை. அவவும் என்னை மாதிரியில்லை, நல்லை. நல்லாப் பாப்பா!"

மருமோள் சொல்ல நான் திடுக்கிட்டுப் போனன். என்ரை மோள் இதை க்கிடை இஞ்சை வந்தா தன்ரை பிரச்சினையளை சொல்லி அழுவா. அவளுக்கு புதுசா பயி பிரச்சினையாயிடுமோ? இவவும் இஞ்சை ஏன் இப்பிடி? எனக்கு யோசினை யாய் கிடந்தது.

"என்ன சொன்னனீ?" என்ரை மகன் அவளுக்குக் கையை ஓங்கினான்.

"இப்ப உங்களுக்குச் சந்தோசம் தானை?" அவ திரும்பவும் என்னைப் பாத்துக் கத்தினா.

எனக்கு இதையெல்லாம் பாக்க ஏலாமக் கிடந்தது. மருமோள் இன்னும் அழுது கொண்டிருந்தா. நானே அவையை தைச் சண்டை பிடிக்க வச்சனான்? ஊரிலை சில பேர் நான் தான் மருமோளை அடக்கி வச்சிருக்கிறதாக் கதைக்கினம். ஆனா, நான் அப்பிடியில்லை. அவதான் என்னை விலக்கிக் கொள்ளுறா. இங் கையில இப்படியும் போன் வேலைக்குப் போனவ, என முணுமுணுக்கத் தொடங் குவா. அதெல்லாம் என்னைக் குத்திக் காட்டும் பேச்சுத் தான் எண்டு எனக்கு விளங்குது. ஆனா, என்ன செய்யிறது? இப்ப தான் என்ரை அவரின்ரை நினைப்பு அடிக்கடி வருகுது. அவர் இருந்தா இப்பிடி எல்லாம் நடக்குமோ? அப்பவே அவரோடை நானும் போயிருக்க வேணும். இப்பதான் விளங்குது. நான் இனி என்ன செய்யிறது? பாப்பம் விதி எத்தினை நாள் என்னை வாழ வைக்குதெண்டு? போற போக்கைப் பாத்தா எது என்ரை கடைசி வீடு? மகன் வீடுமில்லை. மகள் வீடுமில்லை. முதியோர் விடுதிதான் என்ரை கடைசி வீடு போலை கிடக்குது.

---

உழைப்பும் அமைதியுமான தங்களின் மல்லிகை 45வது ஆண்டு மலரைச் சமீபத்தில் படித்து உணர்ந்தேன். ஆயினும் சந்தர்ப்பம் கிடைக்காமையால் இன்று காலந் தாழ்த்தி வாழ்த்த வேண்டியுள்ளேன்.

ஐயா,

அழகான முகப்புடன்- இளம் எழு த்தாளர் கோகிலா அவர்களின் படைப் பட்டத்து டன் தங்களின் மே இதழ் முகிழ்ந்திருக் கிறது. 45 ஆண்டுகள் தனித மனித உழை ப்பும், உத்வேகமும் உறுதி குன்றாத உங் கள் அடிக்கவும் எமக்கு எடுத்துக் காட்டா கவை. மே இதழின் ஒரு சிறு குறுங்கதை என் இதயத்தைத் தட்டியது. அது 'தறு தலை' என்று வேல் அமுதனின் படைப்பு. கலாச்சாரப் பிறழ்வுகள் நம்மிடம் இப்போது சாமான்யமாகி விட்டன. அமுதனின் தொழில் சார்ந்த பதார்த்தங்கள் இன்றும் வர வேண்டும். ஏனெனில் நாம் புதிதுபாக நினைத்தவைகள் இன்று புதை குழிக்குள் போடப்படுகின்றன. 'தறுதலை' தறிகெட்டோ டும் சமுதாயச் சறுக்கல்களின் பிரதிபலிப்பு.


வாழட்டும் மல்லிகை.

கொழும்பு- 06 மா.முகுந்திரன்.



# ஒடுக்கப்பட்ட 'நந்தன்' ஒரு மன்னன்

**-மானா மக்கீன்**



"இந்த வியாதி மிகப் பெரியது. புற்று நோய், தொழு நோய் போன்றது. வெகு நாளைய நோய்"- என்றார் தந்தை ஈ.வெ.ரா. பெரியார் 47-களில்.

அவர் உரைத்து அறுபத்து மூன்று ஆண்டுகள் ஆகிப் போய் விட்டன.

சந்தேகமில்லை. அதுவொரு நீண்ட நாளைய சீக்கு தான்! தொழு நோய் தான்!

உலகிலேயே மிகக் கொடுமை யான நோயே தீண்டாமை.

சமீப காலத்தில் வடபுலத்தில் போர்ச் சத்தம் எல்லாம் ஓய்ந்த பிறகு மீண்டும் துளிர்த்துள்ளதாம், இந்தச் சாதிப் பிரச்சினை!

மலேசிய எழுத்தாளர் சை. பீர்முகம்மது கட்டுரையொன்றில் "இலங்கைத் தமிழன் ஜெர்மனியில் ஒரு நாள் முழுதும் தெருச் சண்டை போட்டான்"- எனத் தகவல்.

சமீபத்தில் எனது தமிழகப் பயணத்தில் இருபதாண்டு கால இலக்கிய நண்பர், தலித் சமூகச் சட்டத்தரணி திரு கு. மாரிமுத்து அவர்கள், விமான நிலையத்திற்கு வழியனுப்ப வந்தவர், வழக்கம் போல வாசிக்க ஒரு நூல் வழங்கினார்.

**'மீளும் வரலாறு- அறியப்படாத நந்தனின் கதை' என்ற தலைப்பிட்டு ரவிக்குமார்** என்பவர் எழுதிய நூலது.

இவர் எழுத்தாளர்- ஆய்வாளர் என்பது நான் அறியாதது. அவர் ஒரு சட்டமன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பினர். (எம்.எல்.ஏ. தமிழகம்), திரு திருமாவளவனின் வலது கரம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொதுச் செயலர் என்பவற்றை நாளேடுகளில் கண்டிருக்கிறேன்.

தமிழகத் தலித்களின் வரலாற்றைத் தொகுப்பதிலும், மறு வாசிப்புச் செய்வதிலும் ஈடுபட்ட போது 'சிதம்பரம்' என்ற ஊர் புதிய பரிமாணம் பெற்று என் முன் நின்றது.

உண்மையில் இப்புதிய ஆய்வு, நூலாக முன்பே பெருந்தலைவர் காமராசர் அறக் கட்டளைச் சொற் பொழிவாக உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தில் நிகழ்த்தப்பட்டிருக்கிறது.

அவரது ஆய்வில் பெரிய புராணம் வழங்கிய **சேக்கிழார்** தலையாய தவறொன்றைப் புரிந்த மனிதராகக் காட்டப்படுகின்றார்.

அவ்வாறு அடையாளமிடுவதற்குச் சாட்சியாளராக ஓர் **அயோத்திதாசப் பண்டிதர்** என்பவரை ஆய்வாளர் நம் முன் நிறுத்துகிறார்.

சோழ மன்னன் அவையில் ஓர் அமைச்சராக இருந்த சேக்கிழார் என்னதான் மாபெரும் தவறு புரிந்தார்? என்று பார்த்தால் நந்தன் என்ற ஒரு மன்னனைக் கூலி அடி மையாகச் சித்திரித்து தாழ்ந்த சாதி மனி தனாக்கியது!

அப்படியான ஒரு கதையால், இன்றைக்கும் உலகப் புகழ் பெற்ற சிதம்பரம் (தில்லை) நடராசர் ஆலயத்தின் தெற்கு வாயில் அடைக்கப்பட்டிருக்கிற கோலம்.

காரணம்- நந்தன் நுழைந்த வாயிலாம்!

தமிழகத்தில் தீண்டாமை நிலை நிறுத்தப்பட்டதற்குச் சிதம்பரம் தான் முக்கியக் காரணமாக இருந்துள்ளது. அதிலும் குறிப்பாக 'நந்தன் கதை' அதில் பிரதான பங்காற்றியிருக்கிறது என்று எழுத்தாளர் ரவிக்குமார் ஆய்வுத் தகவல்களைக் காலடியிலேயே அள்ளிக் கொட்டும் பொழுது, அள்ளாமல் என்ன செய்வது?

"இந்நூலின் வழியாக இடைக்காலத் தமிழ்ச் சமூக வரலாற்றையே மாற்றி எழுதிட வேண்டிய நிர்ப்பந்தத்தையே உருவாக்கியிருக்கிறார்"- என, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக, மொழிப்புல முதல்வரும் தமிழியல் துறைத் தலைவருமான பேரா. அ. ராமசாமி மதிப்புரையில் சொல்ல,

"எழுதப்பட்ட வரலாறுகள் யாவும் மன்னர்களைச் சார்ந்து இருக்கும் முறைமைகளிலிருந்து அகன்று, அடித்தள மக்கள் வரலாறு புதிய பார்வையில் புதிய தடத்தில், மீண்டும் கட்டமைக்கப்பட்டு, எழுதப்பட்ட வேண்டும் எனும் நோக்கில் ரவிக்குமார் அவர்களால் எழுத நேர்ந்துள்ளது"- என, உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன் முன்னுரையில் கூற,

"தெற்கு வாயிலை மூடி வைத்திருப்பது மிகப் பெரும் அநீதி. அந்த வாயிலைத் திறப்பதோடு நடராசர் கோயில் வளாகத்தில் மன்னன் நந்தனுக்குச் சிலை அமைக்க வேண்டும்" என விடுதலைச் சிறுத்தைகள் இயக்கம் தமிழக அரசை இப்பொழுது வலியுறுத்துகிறது.



தற்சமயம் சிதம்பரம் (தில்லை) நடராசர் ஆலயம் தமிழக அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருப்பதால், இதை நிறைவேற்றி விடலாம் என அவ்வியக்கம் எதிர்பார்க்கிறது.

ஆனால், சமீபத்தில் நீதிமன்றக் கட்டளையொன்று "அரச ஆலயத்தில் எந்த மாற்றமும், எந்தப் புதிய நடவடிக்கையையும் எடுக்கக் கூடாது" என அதிரடி போட்டுள்ளது.

ஆக, மொத்தத்தில்-

11 ஆம் நூற்றாண்டில், நம்பியாண்டார் நம்பி "புண்புலை நோய் தீண்டப் பெற்ற புறத்திருத் தொண்டன் நந்தன்" என்று குறிப்பிட்டதிலிருந்து, 12ஆம் நூற்றாண்டில் சேக்கிழார் தனது திருத் தொண்டர் புராணத்தில் விரிவாகக் குறித்து, நன்றாகவே கீழிறக்கி 19-ஆம் நூற்றாண்டில் அயோத்திதாசர் மன்னனாக உயர்த்தியது, செவ்விலக்கியத்திலிருந்து, நவீன நாடகம் வரை (இந்திரா பார்த்தசாரதி) அரங்கேற்றம் கண்டது வரை,

நந்தன் என்ற நந்தனாரின் வரலாறு 21-ஆம் நூற்றாண்டிலும் சூடு பிடித்துள்ளது.

எவ்வாறாயினும் அயோத்திதாசருடையது தனித்துவப் பார்வை. புரட்சிகரமானது.

1845-ல் பிறந்த இவர், ஆங்கிலம், சமஸ்கிருதம், பாலி மொழிகளில் தேர்ச்சி பெற்றார். தமிழக இலக்கியத்திலும் ஆழ்ந்த புலமை. **'கவிராஜர்'** பட்டம் பெற்றவர். சித்த மருத்துவராகவும் திகழ்ந்தார். 1898 களில் இலங்கையில் பௌத்தத்தைத் தழுவினார்.

1910 ஆம் ஆண்டில் 'தமிழன்' என்றொரு ஏட்டில் "இந்திய தேசச் சரித்திரம்" என்ற தொடரை எழுதி வந்த அவர், **"நந்தன் ஒரு பௌத்த மன்னன்! அவன் கூலி அடிமையில்லை. அவனை ஆதிக்கச் சாதியினர் சூழ்ச்சியால் கொன்றனர்"** என்று கண்ணோட்டமிட்டுள்ளார்.

அக் கண்ணோட்டத்திலேயே திரு நந்தகுமார் நூலின் 14- அத்தியாயங்களிலும் ஆய்வு செய்துள்ளார்.

அவரது ஆணித்தரமான ஆதாரங்களிலும் விவாதங்களிலும் நிறைய நிறையப் புதிய தகவல்களை அள்ளி இறைத்திருக்கின்றார்.

இங்கே, ஒரு சிலவற்றைத் தொகுத்து வழங்கல் என் பேனாவின் கடமை.

புலையர், துடியர் எனக் குறிக்கப்பட்டவர்கள் இழிசனர் பிறப்பின் அடிப்படையில் அவ்வாறு அடையாளப்படுத்தப்பட்டதற்கான சான்றுகள் சங்கப் பாடல்களிலோ, சீவக சிந்தாமணி, மணிமேகலை முதலான காப்பியங்களிலோ இல்லை. சாதியமைப்பு 12, 13- ஆம் நூற்றாண்டுகளில் தான் இறுக்கமடைந்தது என வரலாற்று அறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சோழர் காலத்தில் முக்கியமான மத மையங்களுள் ஒன்றாக இருந்த சிதம்பரம் குறித்து ஏராளமான விவரங்கள் அக் கோயிலில் கிடைக்கப் பெற்ற கல் வெட்டுக்கள் கூறும் செய்திகள் முதலா னவற்றால் தெரியவந்துள்ளது. அந்தச் செய்திகளைக் கொண்டு பார்க்கும் போதும் நந்தன் கதை என்பது நடந்த உண்மை யின் சித்திரிப்பு அல்ல, அதுவொரு கற்ப னையான, காழ்ப்புணர்வின் கதையே என்பது தெளிவாகிறது. நந்தனார் சிதம் பரத்துக்குச் சென்று சேர்ந்த போதிலும் மதிலைக் கடந்து செல்ல விடாமல் தடுப்ப தாக நந்தனார் எண்ணி மனம் வருந்தி யதாகப் பெரிய புராணம் கூறுவது எவ்விதத் திலும் ஏற்கத் தக்கதாயில்லை."

நந்தன் கதை அளவுக்குப் பல்வேறு கலை வடிவங்களாலும் கையாளப்பட்ட கதை. தமிழகத்தில் வேறெதுவும் இருக் காது. நந்தனுக்கு ஒரு முற்போக்கு அடை யாளத்தை வழங்க முனைந்த இந்திரா பார்த்தசாரதியும் கூட (நாடகம்) நந்தன் என்ற மன்னனின் கதையை அறியாமல் போனது தமிழின் துரதிருஷ்டம் என்று தான் சொல்ல வேண்டும்.

நந்தன் ஒரு மன்னன் தான் என்பதற்கு மேலும் சில ஆதாரங்களும் இருக்கின்றன. தமிழக அரசின் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் சார்பில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. 'இடங்கை வலங் கையர் வரலாறு' (1995) என்ற நூலில் நான்கு சுவடிகள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இடங்கை வலங்கை புராணம், வலங்கைச் சரித்திரம், இடங்கை வலங்கை சாதி வரலாறு மற்றும் புதுவை இடங்கை வலங்கை சாதியார் வரலாறு ஆகியவையே அந்த நான்கு சுவடிகளாகும்.

இவற்றுள் இரண்டாவதாக அமைந் துள்ள 'வலங்கைச் சரித்திரம்' என்ற சுவடி தஞ்சை வேதநாயக சாஸ்திரி எனும் கிறித்தவப் புலவர் தொகுத்து அளித்தது. இடங்கை வலங்கைச் சாதிகள் மட்டுமல் லாது வள்ளுவச் சாதி பற்றியும் நந்திக் கலம்பகம் பற்றியும் புதிய செய்திகள் அதில் இடம்பெற்றுள்ளன. இந்தச் சுவடி (டி.462) எழுதப்பட்ட காலம் கி. பி. 1798ஐ ஒட்டியது என்று அறியலாம் எனப் பதிப் புரையில் கூறப்பட்டுள்ளது. இராவணனின் வாரிசுகளில் ஒருவராகச் சொல்லப்படும் தியாகச் சாம்பானுடைய மகளுக்கும் சோழ இராசாவுக்கும் பிறந்தவன் தான் நந்தன். தியாகச்சாம்பான் தாழ்ந்த குலத்தைச் சேர்ந்தவன் என்றும் அவனுடைய மக ளைச் சோழ இராசா காதல் திருமணம் செய்து கொண்டார் என்றும், அவனது காலத்திற்குப் பிறகு நந்தன் மன்னனா னான் எனவும் அச்சுவடி சொல்கிறது.

இது "உண்மையான நந்தன் மன் னனா, தாழ்த்தப்பட்ட கூலி அடிமையா, அவன் கதை கற்பனையா? அல்லது தமிழ் மக்களின் வாய்மொழி வரலாற்றில் பாதுகாக்கப்பட்ட ஒன்றா?" என்பவற்றுக் கெல்லாம் முழுமையான விடைதேடப் புறப்பட்டுள்ள ரவிக்குமார் ஒரு சட்டமன்ற உறுப்பினர்- நமது நிறைந்த பாராட்டுக்கு ரியவர்.



# மாற்றப்படும் பதாகைகள்

பெரிய ஐங்கரன்

புறப்படுகின்றன பேருந்துகள்-
தெரியாத இடங்களுக்குப்
புரியாத பெயர்ப் பதாகைகளுடன்

பறக்கின்ற முகங்கள்
காய்கின்ற முகங்கள்
வெடிக்கின்ற முகங்கள் என
எத்தனையோ முகங்கள் ஒவ்வொருவருக்கும்
ஏதோவொரு மொழியுடனும்
ஏதோவொரு அசைவியக்கத்துடனும்

இன்னும் புறப்படத் தொடங்கவே இல்லை,
என் கிராமத்து மண்ணுக்கான பேருந்து!
எனக்குத் தெரிந்த முகங்களுடனும் முகவரிகளுடனும்

நான் வந்திறங்கிய வாகனம்
வேறொரு பதாகையுடன்
இன்னொரு இடத்திற்குப் பறப்படுகின்றது
எனக்குப் புகையைத் துப்பியவாறு.......

*தொடர்ந்து எழுதுங்கள்.....*

இளந்தலைமுறையினரிடமிருந்து ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம், குறிப்பாகத் **தூண்டில்** பகுதிக்கு இவர்கள் நெஞ்சில் பட்ட சந் தேகங்களைக் கேள்வியாகக் கூடக் கேட்கலாம், இது கூட. இவர்களது எதிர்கால எழுத்துப் பயிற்சிக்குப் பயன் தரக் கூடியதாக இருக்கும்,

- ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதங்கள்

மலரிலிருந்து கவனித்து வருகின்றேன். இந்த 45-வது ஆண்டு மலர், ஓர் அற்புதமான வெளியீடு. உள்ளடக்கம் கூட, கவனித்துக் கவனித்துத் தேர்ந்தெடுக்கப்பட்டவையாகத் தேர்வு செய்யப்பட்டு, பதியப்பட்டுள்ளன.

அடுத்த ஐந்து ஆண்டு பார்த்திருக்கப் பறந்து போய் விடும். மல்லிகையின் 50-வது ஆண்டு மலர், ஒரு புதிய காத்திரமான உள்ளடக்கத்தைக் கொண்டதாக அம்மலர் அமைய வேண்டும். பலரும் அம் மலரைப் பற்றிய வியந்து பேச வேண்டும்.

மல்லிகை இத்தனை ஆண்டுகளாக வெளிவந்து, இத்தனை மல்லிகை வாசகர் நாவிலும் பேசப்பட்டு வந்த போதிலும் கூட, இன்னமும் சில பல இடங்களுக்கு மல்லிகை சென்றடையவில்லை என்பதையும் உங்களது கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

மல்லிகையின் உள்ளடக்கம் இன்னும் இன்னும் செழுமைப்பட வேண்டும். புதிய புதிய இளந்தலைமுறையினர் பங்கு கொள்ளக் கூடிய வகையில் அவர்களையும் அண்டி, அரவணைத்து அணைத்துச் செல்ல வேண்டியது மல்லிகையின் தலையாய கடமைகளில் ஒன்றாகும்.

புதிய புதிய எழுத்தாளர்களை மல்லிகை வட்டத்திற்குள் கொண்டு வர முயலுங்கள். இப்படிப் பலரையும் தேடி, முயற்சி செய்யும் போது தான், நாளை தரமான, நின்று பிடிக்கத் தக்கதான எழுத்தாளர்களைக் கண்டடையலாம்.

ஆண்டுக்கொரு தடவை மல்லிகை வாசகர்களைப் பொது இடத்தில் கூட்டாகச் சந்திக்க வைத்து, அன்னாரது பொதுக் கருத்துக்களைக் கேட்டறிந்து பிரசுரிக்கலாம். மல்லிகையின் உள்ளடக்கத்தை இன்னுமின்னும் செழுமைப்படுத்தலாம்.

உண்மையை மனசார ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். நீங்களொரு மன ஓர்மக்காரர் தான். தொடர்ந்தும் விடாமல், எத்தனை கஷ்ட நஷ்டங்கள் குறுக்கிட்ட போதிலும் கூட, விடாமல் மல்லிகையை வெளியிட்டு வருவதே உங்களது மன ஓர்மத்தையும் நெஞ்சுரத்தையும் வாசகர்களுக்குத் தெளிவாக விளங்கப்படுத்துகின்றது.

யார், யார் உங்களை எத்தனை தரக் குறைவாக விமர்சித்தாலும் கூட, நாளைய வரலாறு ஒன்று நிச்சயமாக உங்களையும் உங்களது இலக்கிய உழைப்பையும் பங்களிப்பையும் பதிவு செய்தே தீரும். இது எனது மனப்பூர்வமான கணிப்பு.

**மல்லாகம். ஆர். திவ்வியநேசன்.**

மல்லிகையை நான் நீண்ட காலமாகத் தொடர்ந்து வாசித்து வருகின்றேன்- ஒரு பதினைந்து இருபது வருஷங்கள் என்று கூடச் சொல்லலாம்.

அதில் தனிமனித உழைப்பும் விடா முயற்சியும் தெளிவாகவே தெரிகின்றது.



மல்லிகை தோன்றிய காலத்தில் அதைத் தொடர்ந்து வாசித்து வந்த தலைமுறையினர் இன்று வயசாகிப் போய், ஓரளவு ஒதுங்கிப் போய் விட்டனர் என்று கூடச் சொல்லலாம். எழுதுவது கூட இல்லை!

இன்றைய தலைமுறையினர் புதுப் புது அநுபவங்களையும் புதுப் புதுப் பார்வைகளையும் சதா பெற்று, இன்றைய புதுத் தலைமுறையாக உருவாகியுள்ளனர். அவர்களது அநுபவங்களையும் விருப்பங்களையும் அபிலாஷைகளையும் ஓரளவு மல்லிகை பிரதிபலிக்க வேண்டும். இல்லாது போனால் இளந்தலைமுறையினர் பலரை நாம் இழந்து விடுவோம்.

45 ஆண்டுகள் எனப் பெரிசாகக் கதைத்த போதிலும் என்ன, பல பிரதேச வாசகர்களுக்கு இன்னமும் மல்லிகை இதழ் வாசிக்கக் கிடைப்பதேயில்லை. பரவலாக இருக்கும் ஒரு சில சந்தாதாரர்களுக்கு மல்லிகை சென்றடைகின்றதே தவிர, புத்தகக் கடைகளில் அது விற்பனைக்குக் கிடைப்பதில்லை. இதைக் கவனத்தில் கொள்ளவும்

மல்லிகையை விரும்புகின்றவர்கள் நாடு பூராவும் செறிந்து இருக்கின்றனர். இத்தனை வருஷ அனுபவத்தில் நானிதை உங்களுக்குச் சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை. அவர்களை மல்லிகைப் பக்கம் நெருங்கி வரச் செய்தல் வேண்டும். இதற்கு அயராத உழைப்பு வேண்டும். தொடர்ந்தும் தொடர்பை வளர்த்தெடுக்க ஆவன செய்தல் வேண்டும்.

உங்களுக்கு இத்தனை வருஷ அநுபவத்தில் எத்தனையோ, பாடங்கள் படிக்கக் கிடைத்திருக்கலாம். வளர வளரத்தானே புதுப் புதுப் பிரச்சினைகள் தோன்றும்.

எனக்கு நல்ல நம்பிக்கை இருக்கிறது. எத்தனையோ யுத்த இடர்பாடுகளுக்கு மத்தியிலும் மல்லிகையை ஒழுங்காக வெளியிட்டு வந்துள்ளவர், நீங்கள். எனவே, எனது இந்த ஆலோசனைகளையும் கொஞ்சம் கவனத்தில் கொள்ளுங்கள்.

இவ்வளவும் தான் நான் இப்போ சொல்லக் கூடியவை.

முக்கியமாக ஒன்றை மல்லிகை கவனத்தில் கொள்ள வேண்டும். உயர் கல்வி மாணவர்களும் பல்கலைக்கழக இளஞ் சந்ததியினரும் இலக்கிய உலகில் தமது தற்போதைய கவனத்தைச் செலுத்து வருகின்றனர்.

இத்தனை இதழ்களையும் தொடர்ந்து வாசிக்க, அவர்களுக்குப் பொருளாதார வசதி இல்லை. இதனையும் நாம் நமது கவனத்தில் கொள்வது அவசியம். புதிய கல்வி, இலக்கியத் தலைமுறையை நாம் இலக்கிய உலகிற்கு கொண்டு வர ஆவன செய்ய வேண்டும். முன்னர் நகரங்களில் கல்வி பயின்ற இளைஞர்கள் பரவலாகக் காணப்பட்டார்கள். இன்று நமது கல்வித் திட்டத்தின் அடிப்படையில் கிராமம் கிராமமாகப் படித்த, சிந்திக்கத் தெரிந்த இளைஞர்களும் யுவதிகளும் தென்படுகின்றனர். இவர்களை நெறிப்படுத்தி, ஒழுங்குபடுத்தித் தரமான வாசகர்களாக, ஓரளவு படைப்புத் துறையில் பங்கு கொள்ளத்தக்கவர்களாக ஆக்க வேண்டியது மல்லிகை போன்ற இலக்கியச் சஞ்சிகையின் வரலாற்றுக் கடமைகளில் ஒன்றாகும்.

**மட்டக்களப்பு. ஆர். தியானேஸ்வரன்.**

45-வது ஆண்டு மலர் படித்த போதே கடிதம் எழுத வேண்டும் என எண்ணியிருந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன். கடந்த ஏப்ரல் 2010 இதழின் அட்டைப் படத்தைப் பார்த்த போது, உண்மையைச் சொல்லுகின்றேன். நான் அப்படியே நெகிழ்ந்து போய் விட்டேன்.

மல்லிகையின் முன்னை நாள் அச்சுக் கோப்பாளர் **சந்திரசேகர**த்தினுடைய உருவத்தை மல்லிகை அட்டையில் பதிந்து வெளியிட்டுள்ளீர்கள். நண்பர் முருகபூபதி அவுஸ்திரேலியாவில் இருந்து அவரைப் பற்றி எழுதியிருந்தார். மெத்தச் சந்தோஷம்!

இந்த இடத்தில் என் காதில் விழுந்த ஒன்றையும் சுட்டிக் காட்ட வேண்டியது எனது கடமையாகும். நீங்கள் உங்களை அண்டிய, உங்களுக்குத் தேவையானவர்களின் உருவங்களைத் தான் அட்டையில் போட்டுக் கனம் பண்ணுவதாக ஒரு குற்றச்சாட்டொன்று இலக்கிய உலகில் உண்டு. இதை நான் சொல்லவில்லை. என் காதில் விழுந்ததைக் கேட்கின்றேன். நான் இதை மெய்யாகவே நம்பவில்லை. இலக்கிய உலகில் கதைப்பதைத் தான், இங்கு குறிப்பிடுகின்றேன்.

**நெல்லியடி.** **அ. அருந்தவநாதன்**

பிற்குறிப்பு:

இதை நேரடியாக எனது கவனத்திற்குக் கொண்டு வந்ததற்கு மனப்பூர்வமான நன்றிகள். நான் இந்தக் கட்டத்தில் மனந்திறந்து ஒன்றைச் சொல்லுகின்றேன். தனி மனிதனான என்னிடத்தில் உள்ள குறைகள், குறைபாடுகளைக் கண்டுபிடித்துச் சொல்லலாம். சத்தியமாகச் சொல்லுகின்றேன், மல்லிகை ஆசிரியரிடம் எந்தவிதமான காழ்ப்புணர்ச்சியோ, சின்னத்தனங்களோ மருந்துக்குக் கூட இல்லவேயில்லை. அப்படியான குணக் கேடுகள் ஏற்கனவே நான் சகல சாதனையார்களையும் மதிக்கின்றேன். இருந் திருந்தால்- இத்தனை நெடிய ஆண்டுகள்- 45 வருஷங்கள் தொடர்ந்து மல்லிகை வரவே வந்திராது.

நானும் எனது செயல்களும் வரலாற்றுக்குரியவை என்பது எனக்குத் தெளிவாகவே தெரியும். அதன்படியே செயலாற்றுகின்றேன்

இந்த அட்டைப் பட விவகாரமே எனக்கொரு புதியதோர் இலக்கிய அநுபவம்.

சிலர் படம் கேட்டால் 'பந்தா' காட்டுவார்கள். என்னை ஏற இறங்கப் பார்த்துச் சொண்டுக்குள் ஒருவித நளினத்தோடு சிரிப்பார்கள். ஏதோ தாங்கள் எல்லாம் இத்தனை மலிவான பிரபலத்திற்கு ஆட்பட்டவர்களல்ல, என்பது போல நடந்து கொள்வார்கள். எனது நோக்கத்தைக் கொச்சைப் படுத்துவார்கள்.

பலரது மனசை, பாடமாகவே படித்துத் தெளிந்துள்ளேன். எனவே, எனக்குள் நானே சிரித்து வைப்பதுமுண்டு. எல்லாருமல்ல. சிலர் **'சூழ்நிலை காரணமாக ஒத்துழைக்க முடியவில்லை'** என உண்மையை ஒத்துக் கொள்பவர்களுமுண்டு.

இன்றைய கட்டத்தில் இந்த அட்டைப் படப் பதிவை வெறும் 'ஜீவ விளையாட்டா'கச் சிலர் கருதலாம். பொறுத்திருங்கள்.

இன்னும் சில பல ஆண்டுகளுக்குப் பின்னர், அவர்களும் உயிருடன் இருக்க மாட்டார்கள், நானும் உயிர் வாழ மாட்டேன். நிச்சயமாக நம்புங்கள். பல்கலைக்கழக மாணவர்கள்- அவர்களில் இவர்களினது பேரன், பேத்திகளும் அடங்குவர்- ஆய்வுக்காக மல்லிகை வெளியிட்டுள்ள அட்டைப் படத் தகவல்களையே ஆய்வு செய்ய முனைந்து செயற்படுவார்கள். நிச்சயம் நடக்கும்.



# தூண்டில்

– டொமினிக் ஜீவா

**✎ உண்மையைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளத்தான் இங்கு இக் கேள்வியைக் கேட்டு வைக்கின்றேன். மல்லிகை ஆரம்பித்த காலத்திலேயே இத்தனை ஆண்டு காலம் கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுக் காலம் தாக்குப் பிடித்து வெளிவரும் என மெய்யாகவே நம்பி இத்துறைக்குள் காலடி வைத்தீர்களா?**

**வல்வெட்டித்துறை.** **எஸ். கமலினி**

☞ விந்தன், கல்கியில் கௌரவமான உதவி ஆசிரியர் பீடத்தில் இருந்து வெளியேறி, **மனிதன்** நடத்தித் தோல்வி கண்டவர். அதேபோல ரகுநாதன் **சாந்தி** மாத இதழைத் தொடங்கிக் கஷ்டப்பட்டவர். என்னைப் போன்றவர்களை உருவாக்கிய **சரஸ்வதி** விஜயபாஸ்கரன் கையைச் சுட்டுக் கொண்டவர். தான் எழுதும் காலத்திலேயே விகடனின் தனிச் சிறப்புடன் பிரகாசித்த ஜெயகாந்தன் சொந்தமாக மாத இதழ் **ஞானரதம்** வெளியிடப் போய், சிற்றிதழ் வெளியீட்டு வரலாற்றில் தோல்வி கண்டு ஒதுங்கிக் கொண்டவர். மல்லிகை ஆரம்பித்த காலத்திலேயே அவர்கள் செய்யத் தயங்கியப் பின்னடித்த ஒரு துணிச்சலான செயலை நான் மேற் கொண்டேன். அச்சடித்த மல்லிகையைத் தோளில் சுமந்து கொண்டு தெருவில் விற்பனைக்கு இறங்கினேன்.

இத்தனை முன் வரலாற்று அநுபவங்களையும் முற்றாகத் தெரிந்து கொண்டதன் பின்னர் தான், நான் சொந்தமாக மல்லிகையை வெளிக் கொணர முன்வந்தேன்.

நான் மேலே சொன்ன இலக்கிய ஜாம்பவான்கள் சிற்றிதழ் வெளியீட்டுத் துறையில் ஏன் பெருந் தோல்வியைத் தழுவினார்கள் என்பதை அப்போதே மனசளவில் மட்டிட்டுக் கொண்டேன்.

அவர்கள் அத்தனை பேரும் பிரபலமானவர்களாகவே சஞ்சிகைகளைத் தொடங்கித் தோல்வி கண்டார்கள். நானோ ஒரு சாதாரண ஊழிய னாகவே பத்திரிகையை ஆரம்பித்தேன். அதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழியனாகவே தெருவில் இறங்கித் தெருத் தெருவாகச் சஞ்சிகையை விற்கத் தொடங்கினேன். உலக இலக்கியச் சிற்றேடுகளின் வரலாற்றில் இது ஒரு மகா சாதனை. அந்தத் தெருத் தெருவாகச் சுற்றிச் சுழன்று, சைக்கிளில் ஊர் ஊராகத் திரிந்து மல்லிகையை மக்கள் மத்தியில் பிரபலப்படுத்தியது தான் நான் கண்டு பிடித்த இலக்கியப் பரவல் நுட்பம். இடையே முப்பது ஆண்டுகள் உள்நாட்டு யுத்தம். இயக்கங்களின் பயமுறுத்தல் வேறு. புலப் பெயர்வு. சொல்லொணாக் கஷ்டம்! இத்தனைக்கும் என்னையும் எனது அர்ப்பணிப்பு உழைப்பையும் மெய்யாகவே உள்ளுணர்ந்து கொண்ட நெஞ்சங்கள் பொறுத்த நேரத்தில் பொர்றுத்த சமயத்தில் எனக்குச் செய்து வந்த பொருளாதாரப் பெரும் உதவி, மல்லிகையின் தொடர் வரவை நிலைநிறுத்தியது. இத்தனையையும் ஒருங்கிணைத்து மனம் தளராமல், கொழும்பிலும் தெருத் தெருவாக மல்லிகையை இன்றும் சுமந்து விற்றுத் திரிகிறேன்.

இலங்கையின் சிற்றிலக்கிய வரலாற்றில் தனி நூலாக எழுதப்பட வேண்டிய பாரிய தகவல்கள் மல்லிகையின் தொடர் வரவில் பதியப்பட வேண்டியுள்ளன.

அன்று தெருவோரங்களில் என்னிடம் மல்லிகை வாங்கியவர்கள் வருங்காலத்தில் தமது பேரன், பேத்திகளுக்குக் கதை கதையாக இந்தத் தகவலைக் கூறிக் களிப்பார்கள்– இது திண்ணம்!

✍ **என் பெயர் ராஜ சரவணன். இப்போது பாரிஸில் இருக்கிறேன். சொந்த ஊர் யாழ்ப்பாணம்- நல்லூர். நீங்கள் பாரிஸிற்கு 2000-ம் ஆண்டில் வந்த போது, நீங்கள் பேசிய கூட்டத்திலும் நான் கலந்து கொண்டு, உங்களுடைய நேரடிக் பேச்சைக் கேட்டேன். கூட்டம் முடிந்த பின்னர் உங்களுடன் கொஞ்ச நேரம் பேசியுமிருக்கிறேன்.**

**அன்று தொட்டு எனக்கொரு மன ஆசை உண்டு. நானொரு போட்டோக் கிராபிக்காரன். நீண்ட காலத் தொழிலும் அதுதான். உங்களைப் பற்றிய ஆவணப் படமொன்று தயாரிக்க வேண்டுமென்பதே, அந்த ஆசை. அன்றே மெதுவாக எனது ஆசையை உங்களுக்குச் சொன்னதாக ஞாபகம். உங்களுக்கு அது ஞாபகத்தில் இருக்குமோ என்னமோ எனக்குத் தெரியாது. பத்து வருஷங்கள் நமக்கிடையே தொடர்பில்லை. எனது ஆசைக்கு நீங்கள் ஒத்துக் கொள்வதாக இருந்தால், நான் கூடிய சீக்கிரம் ஊருக்கு வர இருக்கிறேன். வரும் சமயம் அதற்கான ஆயத்தங்களுடன் வருவேன். உங்களது மனச் சம்மதம் தான் தேவை. இதைப் பலரும் தெரிந்து கொள்வதற்காகவே தூண்டிலுக்கு இந்தக் கேள்வியைப் பகிரங்கப்படுத்துகிறேன்.**

**பாரிஸ். ராஜ. சரவணன்**

☞ எனக்கும் மெல்லியதொரு ஞாபகமிருக்கின்றது. எனது இலக்கிய வரலாற்றில் அந்தப் பாரிஸ் வரவேற்பு விழா மகத்தான ஞாபகங்களில் ஒன்று. வளர்ந்த, சிவலைப் பொடியன், சுவீற்றர் போட்டுக் கொண்டு, மவ்ளரால் தலைப்பா கட்டிக் கொண்டு, ஆர்வம் மிக்க கண்களுடன் என்னையே சுற்றிச் சுற்றி வந்து கதை கேட்ட அந்த இளைஞனை, இன்றும் மெல்லிசாக ஞாபகம் இருக்கிறது.

எத்தனை எத்தனையோ, பேர்களைப் பொது வாழ்க்கையில் பல கட்டங்களில் பார்த்து வைப்பது உண்மை. ஆனால், தெரிந்தோ தெரியாமலோ அவர்களில் ஒரு சிலரின் முக ஞாபகம் எமது நெஞ்சில் பதிந்து போவதும் உண்மை. அதில் நீங்களும் ஒருவர்.

நான் நீண்ட காலப் படைப்பாளி. நீண்ட வெகு காலமாக இந்த மண்ணில் தொடர்ந்து வெளிவரும் ஒரு சஞ்சிகையின் ஆசிரியர். மிக மிகக் கீழ் மட்டத்திலிருந்து சதா உழைப்பாலும் அர்ப்பணிப்பாலும் உருவாகிய இந்த மண்ணின் சொந்தக்காரன். புத்திரன்.

ஆனால், உங்களுக்கு இந்தக் கட்டத்தில் உத்தரவாதம் தர இயலாது. நீங்கள் கொழும்பிற்கு வாருங்கள். வரும் போது சந்திக்கலாம். மனந் திறந்து பேசலாம். ஆனால், உங்களது திட்டத்திற்கு என்னால் சட்டென்று பதில் சொல்ல முடியாது. இதையும் கவனத்தில் கொள்வது உங்களது வருகைக்கு ரொம்பவும் நல்லது.

✍ **முதன் முதலில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு எங்கே நடைபெற்றது?**

**நல்லூர். ஆர். அகிலன்**

☞ முதல் மகாநாடு மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் 1966-ல் நடைபெற்றது. இரண்டாவது மகாநாடு, 1968-ல் சென்னையில் நடைபெற்றது.

✍ **நீங்கள் 'மல்லிகைப் பந்தல்' வெளியீடுகளாக அடிக்கடி புத்தகங்களை வெளியிடுகிறீர்களே, அவை நஷ்டமில்லாமல் விற்பனையாகின்றனவா?**

**வவுனியா. எஸ். சேனாதிராஜா**

☞ மல்லிகைக்குக் குறிப்பிட்ட சில ரசிகர்கள் இருக்கின்றனர். புத்தக எழுத்தாளர்களுக்கென ஒரு சில ரசிகர்கள் இருக்கின்றனர். முக்கித் தக்கி, ஒரு வழியாகப் போட்ட புத்தகங்கள் விற்பனையாகி விடுகின்றன.

✍ **இலக்கிய நண்பர்களின் குணம் குறிகளைக் கண்டு பிடித்து எப்படிப் பழக்கம் கொள்ளுகிறீர்கள்?**

**நீர்கொழும்பு. எஸ். தவமோகன்**

☞ அன்னாரது எழுத்துக்களை ஆற, அமரப் படித்துப் படித்துத் தெளிவேன். நேரடியாகப் பழகும் போது, அன்னாரது கண்களை ஊடுருவிப் பார்ப்பேன். அன்னாரது கண்களே எனக்கு அவரைப் பற்றிய உண்மை முழுவதையும் விளப்பமாகச் சொல்லிவிடும்.

✍ **யாழ்ப்பாணத்தில் வாழ முடியாமல் அகதி நிலையில் புறப்பட்டுக் கொழும்பு வந்த சமயம், தொடர்ந்தும் மல்லிகையை நடத்தலாம் என எண்ணியிருந்தீர்களா?**

**வெள்ளவத்தை. ஆர். சிவகுரியன்**

☞ சத்தியமாக எனக்கொன்றும் திக்குத் திசையே தெரியவில்லை. என்ன செய்வது என்று ஒன்றுமே புரியவில்லை. இதைப் பற்றித்தான் விரிவாகக் கடந்த 45-வது ஆண்டு மலர்த் தலையங்கத்தில் எழுதியிருக்கிறேனே, மலர் கிடைத்தால் படித்துப் பாருங்கள்.

✍ **உங்களுடைய மிகச் சிறந்த நண்பன் யார்?**

**மல்லாகம். யூ.தவயோகம்**

☞ நான் தினசரி எழுதப் பயன்படுத்தும் எனது பேனா!

✍ **மல்லிகையின் முதலாவது இதழ் எத்தனை பிரதிகள் வெளியிட்டுள்ளீர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளன்? செலவு எவ்வளவு? பக்கங்கள் எத்தனை? அதன் விலை என்ன?

தெல்லிப்பழை. எம். சிவபாலன்

✍ முதன் முதலில் வெளியிட்ட நூல்களின் மொத்தத் தொகை 500. அதற்கான முழுச் செலவு – 240/– ரூபா. பக்கங்கள் 40. விலை, இருபது சதம்.

✍ நீங்கள் தினசரி படிக்கும் பழக்கம் உண்டா?

மருதானை செல்வி. மதுமதி

✍ [illegible] ஓடிப்போய் [illegible] பக்கத்துக் கடைக்குப் [illegible] வேண்டும். [illegible] வெளியிடப்பட்டிருந்தால் [illegible] பார்த்துக் கொண்டிட இருக்க வேண்டும். [illegible] நான் தப்பிப் போய் விடுவான்.

✍ பழைய இலக்கிய நண்பர்களை அடிக்கடி சந்திப்பதுண்டா? அவர்களுடன் உரையாடிக் களிப்பதுண்டா?

தெஹிவளை ஆ. தேவதாசன்

✍ ஆத்மார்த்தமான நண்பர்களைச் சந்திப்பதுண்டு. பலர் மல்லிகைக்கு வந்து போவார்கள். வேறு சிலர் கருத்தரங்கில் சந்திப்பார்கள். வெளிநாட்டு நண்பர்கள் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்வார்கள். வேறு சிலரை இலக்கியக் கூட்டங்களில் சந்திப்பதுண்டு. எழுத்தாளர் [illegible] சதா இயங்க வேண்டுமானால், முதிர்ந்த இலக்கிய நண்பர்களின் உறவைப் பேணிப் பாதுகாத்து வர வேண்டியது முக்கியம்.

✍ இன்று தேசம் பூராவிலுமிருந்து பல்வேறு நகரங்களில், பல்வேறு வடிவங்களில் புதுப் புது நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. வெளிவரும் அத்தனை புத்தகங்களும் விற்பனையாகி விடுகின்றனவா?

சுன்னாகம். எஸ். பேரின்பன்


✍ தனிமனித முயற்சியும், [illegible] வெளியிட வேண்டும் என்ற ஆர்வமுமே புதிய புது வெளியீடுகள் வெளிவருவதற்கான அடிப்படைக் காரணங்களாகும். இப்படிப் புத்தகம் வெளியிடும் சகோதர எழுத்தாளர்கள் அந்தச் செலவைக் கூட, புத்தக விற்பனை மூலம் பெற்றுக் கொள்வார்களா என்பது தெரியாது. மல்லிகைப் பந்தல் வெளியீடுகளை [illegible] எழுத்தாளர்கள் எங்கும் கூட, [illegible] நமது கோரிக்கையை முன் வைத்துப் போராட முன்வர வேண்டும். தேசிய [illegible] நமது நூல்களை முதலில் கொள்வனவு செய்ய ஆவன செய்ய வேண்டும். அதன் மூலம் கிடைக்கும் [illegible] ஆதரவின் மூலம் மேலும் மேலும் நமது புத்தகங்களை வெளியிட முடியும் என்ற கோரிக்கையை வைத்துப் போராட வேண்டும், நாம்.

✍ உங்களை எழுதத் தூண்டிய அடிப்படைக் காரணம், எது?

காரைநகர். வி. ஜெயசெல்வரன்


✍ பள்ளிக்கூட இளம் மாணவப் பருவம். கரும்பலகையில் வாத்தியார் எழுதிய கணக்கை நகல் எடுத்துச் சரியான கணக்கை எழுதி முடித்தேன். [illegible] 'தோசி' என்று [illegible]. "[illegible] அழுக்குப்பிடித்தவர்... ? [illegible]!" என அவர் [illegible] சாதி [illegible] வெளிப்படுத்திய அவரது வார்த்தையின் தான், என் திசைவழியையே மாற்றி அமைத்து விட்டன.

201/4, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 13 முகவரியில் வசிப்பவரும் மல்லிகை ஆசிரியரும் வெளியீட்டாளருமான டொமினிக் ஜீவா அவர்களுக்காக, கொழும்பு, விவேகானந்த மேடு, 103, இலக்கத்திலுள்ள Lakshmi Printers அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## Our Product

DATABASE PRINTING,
BROCHURES,
CATALOGUES,
SOUVENIRS,
BOOK MARKS,
GREETING CARDS,
NAME TAGS,
CD/DVD COVERS,
COLOUR BIO DATA,
STICKERS
INVITATION CARDS,
PROJECT REPORTS,
BOOK COVER,
MENU CARDS,
THANKING CARDS,
CERTIFICATES,
BOOKS, POSTERS,
CD STOMER,
PLASTIC CARDS,
SCRATCH CARDS,
VISITING CARDS.

# HAPPY DIGITAL CENTRE (PVT) LTD

**Digital Colour Lab & Digital Offset Press**

No.75 1/1, Sri Sumanatissa Mawatha, Colombo - 12.
Tel: +94 11 4937336, +94 11 7394592
web: www.[illegible] mail: happy2002@live.com


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org